www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



## நீதிமன்றத்தின் பாசிசக் கெடுபிடிகள்




## மின் கட்டண உயர்வு: மறுகாலனியத் தாக்குதல்

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாராளமயம் - பயன் யாருக்கு?

1999 - 2000 ஆண்டில் இந்தியப் பங்குச் சந்தை வர்த்தகத்தில் ஈட்டப்பட்ட வருமானம் நான்கு இலட்சம் கோடி ரூபாய். ஓர் ஒப்பீட்டுக்காகச் சொன்னால், இது, 67 கோடி இந்திய விவசாயிகளின் மொத்த ஆண்டு வருமானத்திற்குச் சமமானது. இந்த நான்கு இலட்சம் கோடி ரூபாய் வருமானத்தை வெறும் ஐந்து இலட்சம் இந்திய முதலாளிகள் தங்களுக்குள் சுருட்டிக் கொண்டுள்ளனர். பங்குச் சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஓர் இந்திய முதலாளிக்கு ஆண்டுக்குச் சராசரியாக 80 இலட்சம் ரூபாயை வாரிக் கொடுக்கும் தாராளமயம், விவசாயியிடம் இருப்பதையும் பறித்துக் கொண்டு, அவனைப் போண்டியாக அல்லவா ஆக்குகிறது!

## கிளிண்டனை நடுங்க வைத்த புரட்சியாளர்களின் போராட்டம்

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில், அமெரிக்காவின் நவகாலனியச் சுரண்டலை எதிர்த்துப் போராடி வரும் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காக, அமெரிக்க ஏகாதிபத்தியம் சமீபத்தில் அந்நாட்டின் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு 1300 கோடி அமெரிக்க டாலர் பெறுமான ஆயுதங்களை உதவியாக அளித்தது. ஆகஸ்டு மாத இறுதியில் அமெரிக்க அதிபர் கிளிண்டன் கொலம்பியாவிற்கு வந்தபொழுது, இந்த இராணுவ உதவியை எதிர்த்து கொலம்பிய நாட்டுத் தொழிலாளர்களும், மாணவர்களும், பொது மக்களும் புரட்சியாளர்கள் தலைமையில் நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம் — பேரணிகளை நடத்தினர். 5,000 போலீசாருக்கு நடுவேதான் கிளிண்டன் கொலம்பியாவில் காலடி எடுத்து வைக்க முடிந்தது. அதேசமயம், இந்த ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க கொலம்பிய அரசு ஏவிவிட்ட அடக்குமுறையால், 20.பேர் மாண்டு போயினர்.

## தனியார் முதலாளிகளின் நாணயம்

தொலைபேசி சேவையைக் குத்தகைக்கு எடுத்துள்ள டாடா, பிர்லா, ரிலையன்ஸ், ஆர்.பி.ஜி., உள்ளிட்ட பெரும்பான்மையான தரகு முதலாளித்துவ நிறுவனங்கள், மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய வருடாந்திரக் கட்டணத் தொகை 178 கோடி ரூபாயைச் செலுத்தாமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றன. பொது மக்களில் யாராவது மின் கட்டணத்தையோ/தொலைபேசிக் கட்டணத்தையோ உரிய தேதியில் செலுத்தாவிட்டால், அந்தச் சேவையைத் துண்டித்து விட அரசு தயக்கம் காட்டுவதில்லை. ஆனால், வருடாந்திரக் கட்டணத் தொகை கட்ட வேண்டிய கடைசி தேதி காலாவதியாகிப் போய் மூன்று மாதங்கள் முடிந்த பின்னும்கூட, இத்தனியார் நிறுவனங்களைத் தட்டிக் கேட்க அரசு முன்வரவில்லை. தரகு முதலாளிகளுக்கு ஒரு நியாயம்; மக்களுக்கு ஒரு நியாயமா?

தாராளமயத்தால் போண்டியாகிப் போனக் கொப்பரைத் தேங்காய் விவசாயிகளின் போராட்டம்



## இட ஒதுக்கீடு தீண்டாமையை ஒழித்து விடுமா?

உத்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஏ.கே. சிறீவத்சவா என்ற நீதிபதி, அலகபாத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் பதவியேற்பதற்கு முன்பாக, தனக்கு முன் அப்பதவியில் இருந்த பார்தாரி பிரசாத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என அறிந்து கொண்டு, அந்நீதிமன்றம் முழுவதையும் கங்கை நீரால் கழுவி 'தீட்டு'க் கழித்தார். நீதிபதி சிறீவத்சவாவின் இம்மேல்சாதித் திமிர் பத்திரிகைகளில் அம்பலமான பின், பத்திரிகை செய்தியை மறுக்குமாறு பார்தாரி பிரசாத் உ.பி. மாநில அரசால் மிரட்டப்பட்டார். இதனிடையே இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்தப்பட்டு, நீதிமன்றம் சுத்தமின்றி இருந்ததால் வெறும் தண்ணீரால் கழுவி விடப்பட்டதாக உண்மை திரிக்கப்பட்டது; மேலும், அரசின் மிரட்டலுக்குப் பணியாத பார்தாரி பிரசாத் வேலையில் இருந்து தூக்கி யெறியப்பட்டார்.

## காங்கிரசின் இரட்டை வேடம்

மும்பய் நகருக்குத் தேவைப்படும் மின்சாரத்தைத் தயாரிக்க இயற்கை எரிவாயு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டு வரை, இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்ய ஆகும் செலவை, ஒரு யூனிட் மின்சாரத்திற்கு பதினைந்து காசு எனக் கணக்குப் போட்டு, மின் கட்டணத்துடன் சேர்த்து வசூலித்து வந்த மாநில அரசு, இப்பொழுது அதனை ரூ. 1.90 ஆக உயர்த்திவிட்டது. சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை உயர்ந்திருப்பதை இதற்குக் காரணமாகக் கூறுகிறது. இதனால் கடந்த நான்கைந்து மாதங்களாக மும்பய் நகர மக்களின் மொத்த மின் கட்டணம் இரண்டு, மூன்று மடங்காக உயர்ந்துவிட்டது. இப்படி மும்பய் நகர மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட காங்கிரசு, ஆந்திராவில் மின் கட்டண உயர்வைக் குறைக்கச் சொல்லிப் போராடுவதை என்னவென்று சொல்லுவது?

## ஊருக்கு உபதேசம்

அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைக் கண்காணிப்பு எனும் அமைப்பு, சங்கம் சேரும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை போன்ற தொழிலாளர்களின் உரிமைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது குறித்து அந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஆய்வொன்றை நடத்தியது. இந்த உரிமைகளுக்காகப் போராடும் தொழிலாளர்கள் பல்வேறு விதங்களில் பழிவாங்கப்பட்டிருப்பதை அவ்வமைப்பு கண்டறிந்து அம்பலப்படுத்தியிருக்கிறது. அமெரிக்க அரசாலும், தனியார் முதலாளிகளாலும் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1969-இல் 6,000 ஆக இருந்தது, 1990-இல் 20,000 ஆகவும், 1998-இல் 24,000 ஆகவும் அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. இந்த இலட்சணத்தில், அமெரிக்கா, உலக வர்த்தகக் கழகத்தில் தொழிலாளர் நலன் பற்றி வாய்ச் சவடால் அடித்து, ஏழை நாடுகளை மிரட்டி வருகிறது!

## இந்திய தாலிபான்கள்

இந்து மதவெறி மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி., "கல்லூரியில் படிக்கும் இளம் பெண்கள் ஜீன்ஸ் போன்ற மேற்கத்திய உடைகளை அணியக் கூடாது. பாரதப் பண்பாட்டின்படிதான் ஆடை அணிய வேண்டும்" என்று எச்சரிக்கை விட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தக் குறைந்தபட்ச சுதந்திரம்/உரிமையினைக் கூடப் பெண்களுக்கு வழங்க மறுக்கும் இந்துமதத் தீவிரவாதிகளுக்கு, முசுலீம் மதவெறியர்களும் சளைத்தவர்களல்ல. காஷ்மீரில் இயங்கி வரும் பாக். கைக்கூலி அமைப்பான லஷ்கர்-இ-தோய்பா, "எந்தவொரு பெண்ணும் காஷ்மீரில் பர்தா அணியாமல் வெளியே வந்தால், அவர்களின் காலைப் பார்த்துச் சுடுவோம்" என எச்சரித்திருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

**இதழ் 20 -21**

1 செப். 2000 - 30 செப். 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு மக்கள் தரும் "மின் அதிர்ச்சி"

மின்சாரத்தைத் தொட்டால் ஷாக் - அதிர்ச்சி உண்டாகும் என்பதை நாமறிவோம். மின்சாரத்தைத் தொடத் தேவையில்லை; மின் கட்டண ரசீதைப் பார்த்தாலே போதும், அதிர்ச்சி உண்டாகும்படி செய்து விட்டார், அதிஉயர் அறிவியல் - நுட்ப முதல் மந்திரி என்று பெயரெடுத்த ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு.

அரிசி, கோதுமை, சமையல் எரிவாயு - மண்ணெண்ணெய் விலை உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு என்று படிப்படியாக மக்கள் மீது சுமையேற்றி வந்த ஆட்சியாளர்கள், இப்போது மக்கள் முதுகெலும்பு முறிந்து போகும் அளவு கிடுகிடுவென மின் கட்டணத்தை ஏற்றிவிட்டனர். மகாராட்டிரம், அரியானா, ஒரிசா என அடுத்தடுத்து நடத்தப்பட்டுவரும் இத்தாக்குதல், அடுத்துள்ள ஆந்திராவை எட்டியிருக்கிறது.

சாராய அரக்கனை எதிர்த்துப் போராடி நடுநடுங்க வைத்த மக்கள் மின் கட்டணத் தாக்குதலை மட்டும் பொறுத்துக் கொள்வார்களா என்ன? கடந்த மூன்று மாதங்களாக நடந்து வரும் மின் கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டம், கடந்த செப்டம்பர் 26-ந் தேதி உச்ச கட்டத்தை எட்டியது. அன்று அனைத்து எதிர்க் கட்சிகள் தலைமையில் நடந்த "சட்ட சபைக்குச் செல்வோம்" என்ற மக்கள் பேரணி மீது போலீசு நடத்திய கொலை வெறி தாக்குதலில் நான்கு பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இருபதுக்கும் மேற்பட்டவர் குண்டடிபட்டுச் சரிந்தனர். 16 பேர் படுகாயமுற்றனர். ஐதராபாத் நகரின் பஷீராபாக் நான்கு சாலைச் சந்திப்பு இரத்தத்தால் பூசி மெழுகப்பட்டது.

இக்கோரச் சம்பவத்தை அன்று இரவே தொலைக்காட்சியில் கண்டு ஆத்திரமுற்ற ஆந்திர மக்கள் பொங்கியெழுந்து, மறுநாள் யாருடைய தூண்டுதலுமின்றித் தாமே பொது வேலை நிறுத்தம், சாலை மறியல், அரசு பேருந்து - வாகன எரிப்பில் இறங்கினர். இரண்டாம் நாளும் மாநிலம் முழுதும் மக்கள் மீது கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டது, உலக வங்கி ஏஜெண்டு சந்திரபாபு நாயுடுவின் அரசு. மற்ற பிற போராட்டங்களைப் போலவே, இதுவும் கொஞ்ச காலத்தில் வலுவிழந்து பிசுபிசுத்துப் போய்விடும் என்பது சந்திரபாபு நாயுடுவின் கணக்கு. ஆனால், மின் கட்டண எதிர்ப்புப் போராட்டமோ மேலும் மேலும் தீவிரமாகி, ஆந்திர மாநிலம் முழுவதும் கொழுந்து விட்டு எரிகிறது.

✤ ✤ ✤

1998 நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்களில் நாயுடுவின் தெலுங்கு தேசக் கட்சிக்குக் கிடைத்த வெற்றி - மீண்டும் அது ஆந்திராவில் ஆட்சியைப் பிடித்ததற்கான காரணம் சந்திரபாபு நாயுடு அரசு பின்பற்றிய தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதார, சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஆந்திர மக்கள் கொடுத்த வரவேற்பு - ஆதரவுதான் என்று செய்தி ஊடகங்கள் ஏற்றிப் போற்றின. அந்த மிதப்பில் திளைத்த நாயுடுவுக்கு, புதிய பொருளாதார, சீர்திருத்தக் கொள்கையின் பெயரால் எதைச் செய்தாலும் ஆந்திர மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் - எதிர்க்க மாட்டார்கள் என்ற திமிர் தலைக்கேறியது.

கடந்த மே மாத இறுதியில் 80 முதல் 100 சதவீதம் வரை கிடுகிடு மின் கட்டண உயர்வை நாயுடு அரசு அறிவித்தது. வீட்டுப் பயன்பாடு முதல் எல்லாவகைப் பயனீட்டாளர்களுக்கும் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்ட போதிலும் பெருந்தொழில்களுக்கு மட்டும் கட்டண உயர்வு ஒரு கொசுக்கடி அளவுதான் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. ஏகாதிபத்திய, பன்னாட்டு தொழில்களுக்கும், தரகு - அதிகார முதலாளிகளுக்கும் மட்டும் சலுகை அளித்திருப்பதில் இருந்து நாயுடுவின் பாசம் யார் மீதுள்ளது என்பது தெளிவாகியது.

1,072 கோடி ரூபாய் அளவுக்கு மக்கள் மீது சுமை ஏற்றும் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டு, அடுத்த வாரமே அமலுக்கு வருமென்றும் அரசு அறிவித்தது. தெலுங்கு தேசம் - பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகள் தவிர, அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கம் - விவசாயிகள் சங்கம் உட்பட எல்லா மக்கள் திரள் அமைப்புகளும் உடனடியாகப் போராட்டத்தில் குதித்தன. காங்கிரசும், இரண்டு போலி கம்யூனிஸ்டுகளும் "மின்கட்டண உயர்வை உடனே விலக்கு; இல்லையானால் பதவி விலகு!" என்ற முழக்கத்தை முன்வைத்து, தனித்தனியாகவும் இணைந்தும் போராட்டத்தில் குதித்தனர். ஆந்திர மாநில மின்வாரியத் தலைமையகத்துக்கு முன்பு ஒருநாள் தர்ணா போராட்டம் நடத்தினர்.

ஆனால், அவர்கள் தலைமைக்கும், வரம்புக்கும் உட்பட்டு போராட்டம் நிற்கவில்லை. காங்கிரசுக் கட்சியோ எந்தவொரு பிரச்சினைக்கும் கண்டன அறிக்கை, சட்டசபைக் கூச்சல் - மறியலுக்கு மேல் மக்களைத் திரட்டிப் போராடக் கூடியதல்ல. இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் மக்கள் ஆதரவு ஆந்திராவில் மிகவும் சொற்பம்தான். இந்த நிலையில் ஆந்திர மக்கள் செல்வாக்கை அதிகம் பெற்றிருப்பவை மார்க்சிய - லெனினியக் குழுக்கள்

படிப்பகம்

www.padippakam.com

என்ற பெயரில் இயங்கும் பல்வேறு குழுக்கள்தாம். அவற்றிலும் நாடாளுமன்றப் பாதையை ஏற்றுக் கொண்டவையுடன் சேர்ந்து, இடதுசாரிகள் என்ற அடிப்படையில் இரண்டு போலி கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து ஒன்பது கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போராட்டக் குழு அமைத்துப் போராடுகின்றன. இவை தவிர, ஆந்திராவில் பெரிய மார்க்சிய - லெனினியக் குழுவாகிய மக்கள் போர்க் குழுவும் போராட்டத்தை முழுமையாக ஆதரித்துக் களத்தில் குதித்துள்ளது.

எனவே, ஆரம்பம் முதலே மின்கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டம் போர்க்குணம் மிக்கதாக உள்ளது; சந்திரபாபு நாயுடு எதிர்பார்த்ததைப் போல பிசுபிசுத்துப் போகாமல் உறுதியாக உள்ளது. காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும் விரும்பிப் பின்னுக்கு இழுத்தால் கூட, அதையும் மீறி முன்னேறுகின்றது. போராட்டத்தின் முக்கிய அங்கமாக உள்ளது, அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்கும் எல்லாப் பொது நிகழ்ச்சிகளையும் கலைத்து விரட்டுவதும், அவர்களைச்சிறை வைக்கும் முற்றுகைப் போராட்டமும்தான். அரசுப் பிரதிநிதிகளை மக்கள் விரட்டியடிப்பது வானொளி மற்றும் பிற செய்தி ஊடகங்களில் பரவலாக வெளிக் கொண்டு வருவதில் போராட்டத் தலைமை வெகுவாக வெற்றி பெற்றுவிட்டது.



மின் கட்டண உயர்வுக்கு எதிராக ஐதராபாத்தில் நடந்த பேரணியை ஒடுக்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள்.

தெலுங்கு தேசக் கட்சியின் மந்திரிகள், குறிப்பாக முதல்வர் சந்திரபாபு நாயுடு ஐதராபாத்திலுள்ள தலைமையகம் - வீடு என்று முடக்கப்பட்டுவிட்டனர். வேறு எங்கு போனாலும் மக்கள் சூழ்ந்து கொண்டு எதிர்ப்பு முழக்கமிட்டு, முற்றுகையிடுகின்றனர். நாயுடு போகும் இடமெல்லாம் போலீசின் பாதுகாப்பு வளையத்தைத் தகர்த்துக் கொண்டு நாயுடுவைச் சூழ்ந்து கொண்டு கேள்விகள் எழுப்பி முழங்குகின்றனர். நாயுடு எவ்வளவுதான் போலீசைக் குவித்தாலும், போராட்டக்காரர்கள், குறிப்பாக பெண்கள் ஏராளமாகத் திரண்டு கைகலப்புச் சண்டையில் இறங்கி விடுகின்றனர்.

அரசு நிறுவனங்கள், மின்சாரம் நெறிமுறை ஆணையம், மின்சார விநியோகக் கழகம் ஆகியவை மூலம் அன்றாடம் பல கோடி ரூபாய்க்கு விளம்பரங்கள் செய்கிறார்கள். ''சீர்திருத்த நடவடிக்கை மூலமாக நட்டத்தில் நடக்கும் மின்துறையை இலாபகரமாக்கி, தரமான மின்சாரம் வழங்குவதே தமது நோக்கம்'' என்று பிரச்சாரம் செய்து மக்கள் ஆதரவு கோருகிறார்கள். ஆனால், போராட்டக்காரர்களோ இந்த மாய்மாலங்களுக்கு மயங்கவில்லை. மின்கட்டண உயர்வை நியாயப்படுத்தி நாயுடு போடும் பொதுக் கூட்டங்களுக்குள் புகுந்து கலக்குகின்றனர். ''கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் அபிவிருத்தி'' என்று அரசு நிறுவன ஊழியர்களைத் திரட்டிக் கொண்டு வந்து, பெண் போராட்டக்காரர்களை ஒடுக்கிவிட முயன்ற நாயுடு, அதிலும் தோற்றுப் போனார்.

இப்படி மந்திரிகள், அதிகாரிகளின் பொது நிகழ்ச்சிகள் குலைக்கப்பட்டு அவர்கள் நடமாடவே முடியாதவாறு முடக்கப்படுவது தொடரவே, போராட்டக்காரர்களை அடித்து நொறுக்குவதற்காக ''தெலுங்கு சேனா'' என்று தனது கட்சிக் குண்டர்படை அமைப்பு ஒன்றைத் தொடங்கி வைத்தார் நாயுடு. அதற்கு எல்லாத் தரப்பில் இருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பவே மீண்டும் அரசுப் படையையே ஏவிவிட்டார்.

காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் இணைந்து மாநிலம் முழுவதும் தொடர் தர்ணாக்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தி, இறுதியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் முன் மறியல் போராட்டங்களை நடத்தினர். அறிவு ஜீவிகள், தொழிற்சங்கங்கள், விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி, மின்கட்டணத்தைச் செலுத்த மறுக்கும் ஒத்துழையாமைப் போராட்டத் தீர்மானம் நிறைவேற்றினர். மின் துண்டிப்பைத் தடுப்பதற்காகக் கிராமக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளும் இதை ஏற்றுக் கொண்டு தீவிரப்படுத்தினர். வழக்கமாகத் தனிச்சால் ஓட்டும் முசுலீம் இத்திகார் மஜ்லிஸ் (எம்.ஐ.எம்.) என்ற இசுலாமிய எதிர்க்கட்சியும் போராட்டத்தை ஆதரிக்கத் தொடங்கியது. மக்களிடமிருந்து தனிமைப்பட்டு விடுவோம் என்று அஞ்சும் பாரதீய ஜனதாவும் கூட, ''ஒரேடியாக மின்கட்டணத்தை உயர்த்தியது சரியில்லை; மக்கள் வெறுப்பை உணர்ந்து, கட்டண உயர்வை அரசு குறைக்கத்தான் வேண்டும்'' என்று பம்மாத்துப் பேச ஆரம்பித்தது. அரசுக்கும் எதிர்த் தரப்புக்கும் சமரசம் செய்து வைக்கும் வேலையில் இறங்கியது.

ஆகஸ்டு 20-ந் தேதியில் இருந்து, காங்கிரசு மற்றும் சி.பி.(எம்) கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டனர். அவர்களில் ஒவ்வொருவராக உடல் நலங் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்படவே பதட்டம் அதிகரித்தது. கட்சி ஊழியர்கள் மட்டுமல்லாது கட்சிசார மக்களும் உண்ணாவிரதிகளைப் பார்த்து ஆதரவு காட்டத் திரண்டனர். அப்போதும் சந்திரபாபு நாயுடு பிடிவாதமாக இருந்ததால், எதிர்த்தரப்பு மேலும் உறுதியாகி, ஆகஸ்டு 29-ந் தேதி ''சட்டமன்றம் போவோம்!'' என்று பேரணிக்குத் திட்டமிட்டனர்.

பேரணிக்கு இறுதி வரை அனுமதி கொடுக்காது இழுத்தடித்து, இறுதியில், சட்டப் பேரவைக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவிலேயே நிறுத்திக் கொள்ளும்படி தடை விதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட இடத்திற்குக் கூட விடாது, போலீசு மறித்தது. மீறிச் சென்றவர்களை வளைத்து வளைத்துத் தடியடி நடத்தியது; போராட்டக்காரர்களைக் குறிவைத்துச் சுட்டது. இதெல்லாம் ''வீடியோ'' பிடிக்கப்பட்டு, அன்று இரவே தனியார் அலைவரிசையில் ஒளிபரப்பட்டது.

போர்க்குணமிக்க இப்போராட்டங்கள் மட்டுமல்லாது, மின்கட்டண உயர்வுக்கு எதிரான பொதுநல வழக்கும் நடக்கிறது. அனைத்திந்திய மனித உரிமை கமிசனிடமும் முறையிடப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது 80 தடியடிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2000-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமுற்றனர்; 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1000 கிரிமினல் வழக்

www.padippakam.com

குகள் போடப்பட்டு, 10,000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வளவு மிருகத்தனமாக நடந்து கொண்டு சந்திரபாபு நாயுடு, "மின்கட்டண உயர்வுப் போராட்டத்துக்குள் நக்சலைட்டு தீவிரவாதிகள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர். மக்கள் போர்க் குழுவைச் சேர்ந்த புரட்சிப் பாடகர் கத்தார் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து ஆதரவு தெரிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) புதிய ஜனநாயகம், பிரஜா யுத்தம் போன்ற குழுக்கள் சட்டப் பேரவை நோக்கிப் போன பேரணியில் பதாகை - கொடியுடன் வந்தனர். "வீடியோ" ஆதாரம் இருக்கிறது!" என்று சொல்லி சட்டப் பேரவையில் கொக்கரித்துள்ளார். "தீவிரவாதிகளுடன் காங்கிரசு கைகோர்த்துக் கொண்டது பற்றித் தேசிய விவாதம் தேவை; மந்திரி மாதவ் ரெட்டியைக் கொன்றவர்களுடன் சேர்ந்து போராடலாமா?" என்று கேட்டு பதறியிருக்கிறார்.



துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துப் போராடும் பெண்களை மிருகத்தனமாகத் தாக்கும் ஆந்திர போலீசு.

தீவிரவாதிகள் என்று அரசியல் எதிரிகளும், அரசும், செய்தி ஊடகங்களும் முத்திரை குத்திவிட்டால், அவர்கள் தீண்டத்தகாதவர்கள், ஒழித்துக் கட்டப்பட வேண்டியவர்கள் என்றாகி விடுமா? தீவிரவாதிகள் எனப்படும் புரட்சியாளர்களும், ஜனநாயகவாதிகளும் பங்கேற்காமல், தலைமை தாங்காமல், ஆந்திராவில் எந்தவொரு மக்கள் போராட்டமும் இன்று வெற்றி பெற முடியாது. இதை உணர்ந்ததால்தான் புரட்சியாளர்களை ஒதுக்கும் எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் கூட, அவர்களின் தயவை நாடியுள்ளனர். காங்கிரசின் சென்னா ரெட்டி, தெலுங்கு தேசத்தின் என்.டி. ராமராவ் போன்றவர்கள், "நக்சல்பாரிகள் தேசபக்தர்கள்" "நக்சல்பாரிகள் எங்கள் சகோதரர்கள்" "அண்ணாலுக்கள்" என்று எதிர்த்தரப்பில் இருக்கும்போது சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஆட்சிக்கு வந்ததும் நக்சல்பாரி அமைப்புகளைத் தடைசெய்து, பயங்கரவாத ஒடுக்குமுறையை ஏவி விடுகிறார்கள்.

உண்மையில், நக்சல்பாரிகள்தான் தேசபக்தர்கள். அவர்கள்தாம் உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எஃப்.), உலக வர்த்தக நிறுவனம் (டபிள்யு.டி.ஓ.) ஆகியவை மூலமாக நாட்டை மீண்டும் காலனியாக்கும் நடவடிக்கைகளை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் எதிர்க்கின்றனர். இந்த மின் கட்டண உயர்வை ரத்து செய்தாலே போதும் என்பதுதான் காங்கிரசின் கோரிக்கை. இரண்டு போலி கம்யூனிஸ்டுகளோ தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தைப் பெயரளவுக்கே எதிர்க்கின்றனர்.

தொலைபேசித் துறை, மின் துறை, தொடர்வண்டித் துறை ஆகிய மூன்றும் அடுத்தடுத்து மிகப்பெரிய பொதுத்துறை அமைப்புகள் ஆகும். இப்போது தொலைபேசித் துறையை அந்நிய - தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பதையும், எஞ்சியதைக் கூட்டுப் பங்குக் கழகமாக்குவதையும் மைய அரசு முழுமையாக நிறைவேற்றிவிட்டது. 25 இலட்சம் பேருக்கு மேல் பணிபுரியும் தொடர்வண்டித் துறையை அந்நிய மற்றும் தனியார்மயமாக்குவதற்கு முன்பாக மின்துறையைக் காவு கொடுப்பதற்கு மைய - மாநில அரசுகள் தயாராகிவிட்டன.

இதுவரை மின் உற்பத்தி மற்றும் வழங்கீடு அந்தந்த மாநில அரசு நிறுவனங்களான மின்வாரியங்களின் பொறுப்பில் இருந்து வந்தன. மாநில அரசுகளால் முதலீடு செய்ய முடியாத பெரும் அனல் மற்றும் அணுமின் உற்பத்தி மைய அரசின் நிறுவனங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் மின்வாரியங்களுக்கு பதில், மாநில மின் வழங்கீடு கழகங்களும், மின் உற்பத்தியை அந்நிய, தனியார் நிறுவனங்களும் மேற்கொள்வது; அந்நிய, தனியார் நிறுவனங்கள் விதிக்கும் விலைக்கு மின்சாரத்தை வாங்கி வழங்கீடு கழகங்கள் விநியோகிக்கும். இதை நெறிப்படுத்தும் ஆணையம் ஒவ்வொரு மாநிலத்திலும் நிறுவப்படும். அதுவே மின்கட்டணத்தைத் தீர்மானிப்பதோடு, அந்நிய, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் கோரும் தொகையை வசூலித்துக் கொடுக்கவும், நட்டமடைந்தால் அரசிடமிருந்து ஈட்டுத் தொகை பெற்றுத் தரவும் பொறுப்பேற்கும்.

இந்தக் கொள்கை உ.பி., ஒரிசா, இப்போது ஆந்திரா எனப் படிப்படியாக அமலாக்கப்படுகிறது. பல மாநிலங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய விலை அல்லது இலவச மின்சாரம் இரத்து செய்யப்படும். பெருந்தொழில் நிறுவனங்கள் தவிர, விவசாயிகள், சிறு தொழில் நிறுவனங்கள், வீட்டுப் பயனீட்டாளர்கள் போன்றவர்களுக்கு 100, 200 சதவீதமென்று கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று புதிய மின் திட்டங்களுக்குக் கடனாக நிதி அளிக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் நிர்பந்திக்கின்றன. இதை வெளிப்படையாகவே சொல்லும் சந்திரபாபு நாயுடு, புதிய பொருளாதாரக் கொள்கை, சீர்திருத்தத்தை ஆதரிக்கும் காங்கிரசு, மின் கட்டண உயர்வை எதிர்ப்பது எந்த வகையில் நியாயமானது என்று கேள்வி எழுப்புகிறார்.

மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடும் காங்கிரசு, தொலைபேசித் துறை முழுவதுமாகத் தாரைவார்க்கப்படுவதைக் கண்டு கொள்ளவில்லை. போலி கம்யூனிஸ்டுகளோ, கேவலமான முறையில் அரசிடம் சரணடைவதோடு, தொலைபேசித் துறை மொத்தமாகக் கொள்ளை போவதைத் தடுக்க முடியாமல், இப்போதைய ஊழியர்களுக்கான சலுகைகளுக்காகச் சலசலப்போடு நின்று கொண்டன.

புதிய பொருளாதாரக் கொள்கையை, தாராளமயம் - சீர்திருத்தத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் காங்கிரசும், மறைமுகமாக ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டுகளும், அவற்றால் பாதிக்கப்படும் மக்கள் போராட்டங்களுக்குத் தலைமை ஏற்பதற்கு எந்தவித தார்மீக உரிமையும் கிடையாது. இவர்கள் மக்கள் முதுகெலும்பு முறியுமளவு ஏற்றப்படும் சுமையில் மயிலிறகு அளவு குறைத்தாலே போராட்டம் வெற்றியென அறிவித்துத் துரோகம் செய்து, பின்வாங்கிக் கொள்வார்கள்.

பொருளாதார சீர்திருத்தத்தை அமலாக்குவதில் முன்னோடி முதல் மந்திரி என்ற ஏகாதிபத்தியங்களிடம் பெயரெடுக்க சந்திரபாபு நாயுடு வெறியோடு மக்களைத் தாக்குகிறார். புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் தலைமையிலான மக்கள் அதற்குப் பதிலடி கொடுப்பார்கள். ஏகாதிபத்திய எஜமானர்களும், அவர்களின் எடுபிடிகளும் 'ஆந்திராவில்தான் முதலில் பல்லுடைபடுவார்கள்' என்று அங்கு முன்னேறும் போராட்டம் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் நாடாளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் மிக மோசமான சரிவை எதிர்நோக்கியுள்ளன என்றே தெரிகிறது. அவற்றிலும் குறிப்பாக 'மூத்த சகோதர'க் கட்சியான ''மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்'' கட்சி எனப்படும் சி.பி.(எம்) மீள முடியாத வீழ்ச்சியைச் சந்திக்க இருக்கிறது.

— தேர்தல் களத்தில் அடுத்தடுத்த தோல்விகள் காரணமாக ''தேசியக் கட்சி''க்குரிய தகுதியை சி.பி.(எம்) கட்சி இழக்கப் போகிறது. இனி மாநிலக் கட்சி என்ற முறையில் மூன்று மாநிலங்களில் மட்டுமே அதன் அரிவாள் - சுத்தியில் - நட்சத்திரம் என்ற தேர்தல் சின்னத்தில் போட்டியிட முடியும். கேரள உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு மாறாக அங்கே பொதுக் கடையடைப்பு நடத்தியதால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற தகுதியை கூட இரத்து செய்யப்படும் ஆபத்து வந்திருக்கிறது.

— இந்தி பேசும் மாநிலங்களில் தனது செல்வாக்கை வளர்த்து நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியாகும் சி.பி.(எம்) கட்சியின் உத்தி படுதோல்வியடைந்து விட்டது. ஜனதாக் கட்சி, ஜனதா தளம், ஐக்கிய முன்னணி என்று மூன்றாவது அணி அமைத்து, முதலில் மத்திய அரசில் செல்வாக்கை நிலைநாட்டி, பிறகு ஆட்சியையும் பிடித்து விடலாம் என்ற சுர்ஜித் - ஜோதிபாசுவின் கனவும் பொய்த்துவிட்டது.

— இடதுசாரிக் கூட்டணி, குறிப்பாக சி.பி.(எம்) செல்வாக்கு மிக்கதாகக் கருதப்படும் மேற்கு வங்கம், கேரளம், திரிபுராவில் நீண்ட காலம் ஆட்சியில் இருப்பதால் தொழிற்சங்கம், மாணவர் - மகளிர் - இளைஞர் அமைப்புகள், விவசாயிகள் இயக்கம் எல்லாமே போராட்ட அணுகுமுறையை முற்றாகக் கைவிட்டு அரசாங்கத்துக்குத் துணை போகும் அமைப்புகளாக முடங்கிவிட்டன. மேலும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் ஆகியவற்றுக்கு வலுவான எதிர்ப்போ, மாற்றுக் கொள்கையோ இல்லாததால் மக்கள் மீதான அவற்றின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணறுகின்றன. மக்கள் ஆதரவைப் பெறுவதற்கான வாய்ப்பை அடியோடு இழந்துவிட்டன.

— தடை செய்யப்பட்ட காலத்தில் தலைமறைவு வாழ்வு வாழ்ந்தவர்கள், சுதந்திரப் போராட்டத்தில் மூழ்கி எழுந்தவர்கள், சிறை சென்ற தியாகிகள், தொழிற்சங்க - நாடாளுமன்ற அனுபவசாலிகள் என்ற முறையில் செல்வாக்குள்ள பழைய தலைவர்கள் எல்லாம் இறந்து போய் விட்டார்கள். சுர்ஜித், ஜோதிபாசு என இருவர் மட்டுமே அனைத்திந்தியத் தலைவர்கள். நாயனார், சங்கரய்யா, உமாநாத் போன்ற சில மாநிலத் தலைவர்களே எஞ்சியிருக்கின்றனர். அவர்களும் செயலிழந்த நிலையிலேயே உள்ளனர். புதிய தலைமையோ அரசியல் அனுபவம் - அங்கீகாரம் பெற்ற தலைவர்களைக் கொண்டதாக இல்லை; தொழிற்சங்க எழுத்தாளர்கள் அல்லது கல்லூரிப் படிப்பாளிகளை மட்டுமே கொண்டதாக உள்ளது.

— கட்சிக்குள் குழுக்களும் குழுச் சண்டைகளும் அதிகரித்துவிட்டன. தற்போது இடதுசாரிக் கூட்டணி ஆட்சி அதிகாரத்தை இழந்தால், பிளவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அணிகளை ஒருங்கிணைத்து வைக்கும் அரசியல் - சித்தாந்தமும் இல்லை; திறமை - அனுபவமிக்க தலைமையும் இல்லை. அதேசமயம் ஆட்சியிலுள்ள கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். கும்பல், மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரசு குண்டர்படை, திரிபுராவில் பழங்குடி சாதி தீவிரவாதிகளின் தாக்குதலையும் கொலைகளையும் கட்சி அணிகளால் எதிர்கொள்ள முடியவில்லை. கட்சிக்குள் புகுந்துள்ள சமூக விரோத கிரிமினல்கள் மட்டுமே தாக்குப் பிடிக்க முடியும் என்ற நிலையே உள்ளது. இப்போதைய ஆட்சி அதிகாரம்தான் அவர்களைக் காத்துக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை இழந்தால் அந்த சமூக விரோத கிரிமினல்கள் மாற்று அணிக்கு ஓடி விடுவார்கள். எஞ்சியுள்ள கட்சி அணிகளோ நிராயுதபாணிகளாகி விடுவர்.

— சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு, அப்பட்டமான முதலாளிய மீட்பு ஆகியவற்றுக்குப் பிறகு, ''மார்க்சிஸ்ட்'', ''கம்யூனிஸ்ட்'' போன்ற அரசியல் - சித்தாந்த அடிப்படையையும் அடையாளத்தையும் சி.பி.(எம்) கட்சி இழந்துவிட்டது. சி.பி.(எம்) கட்சியின் ''சோசலிச மாடல்'' நாடாக விளங்கும் சீனா, வியத்நாம், கியூபா ஆகியவையே தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்பதை வெவ்வேறு அளவுகளில் ஏற்றுக் கொண்டுவிட்டன. இதனால் ''சந்தை சோசலிசம்'' என்கிற பெயரில் கலப்புப் பொருளாதாரமே மாற்று அமைப்பாக முன்வைக்கப்படுகிறது. நேரு காலத்திலிருந்து அமலாக்கப்பட்ட கலப்புப் பொருளாதாரம் இந்திய நிலைமைகளில் புதிதான ஒன்றல்ல. அரசியலிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கைவிடப்பட்ட பின் சி.பி.(எம்) கட்சி முன்வைக்கும் பல கட்சி ஜனநாயகம், இப்போதைய அரசியல் அமைப்பில் இருந்து மாறுபட்டதல்ல. பழைய கள்தான் புதிய மொந்தையில் பரிமாறப்படுகின்றது என்பதால் சி.பி.(எம்) கட்சியின் கொள்கையும் திட்டமும் இங்கே யாரையும் ஈர்க்கும் சாரமற்றவையாக உள்ளது.

— ஒருபுறம் காங்கிரசு, மறுபுறம் பாரதீய ஜனதா ஆகிய இரண்டு ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு முற்றிலும் மாறான, மாற்றுத் திட்டமும் கொள்கையும் கொண்டது என்று இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகள் கூறிக் கொள்கின்றன. ஆனால், வெளிநாட்டு உள்நாட்டு அரசியல் நிலைப்பாடுகளில் சி.பி.(ஐ), சி.பி.(எம்) கட்சி கொள்கைகள் எப்போதும் நேரு - இந்திரா - ராஜீவ் காங்கிரசு பரம்பரையின் முடிவுகளை ஒட்டியும் ஆதரிப்பதுமாகவே இருந்து வந்துள்ளன. அந்நியக் கொள்கையில் நேரு - இந்திரா பசப்பி வந்த கூட்டுச்சேராக் கொள்கை என்ற சோவியத் ஒன்றிய சார்பு நிலை; பாகிஸ்தான் எதிர்ப்பு இந்திய தேசிய வெறி; காஷ்மீர் உட்பட எல்லா தேசிய இனப் போராட்டங்களையும் பிளவுவாதம் - தீவிரவாதம் என முத்திரை குத்தி ஒடுக்குவது; போலியான மதச்சார்பின்மையும், இந்துமத வெறியுடன் சமரசமும் என்ற காங்கிரசின் பிற்போக்குத்தனம் — இவற்றில் இடதுசாரி கூட்டணிக்கும் காங்கிரசுக்கும் வேறுபாடில்லை. காங்கிரசு ஆளுங்கட்சியாக இருந்தவரை நாடாளுமன்ற - தேர்தல் எதிர்ப்பு என்கிற முறையில் மட்டுமே இடதுசாரி கூட்டணியால் வேறுபடுத்திக் கொண்டிருந்தது. இப்போது அதுவும் கைவிடப்பட்டு, பாரதீய ஜனதா எதிர்ப்பு என்கிற காரணத்தை முன்வைத்து காங்கிரசின் பக்கம் சாய்ந்துவிட்டது. ''நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு வலதுசாரிகளிடமிருந்து ஆபத்து'' என்ற காரணத்தை முன்வைத்து காங்கிரசு ஆட்சி அமைவதையும், இப்போதைய அரசியல் இருத்தலைப் பாதுகாக்கும் அணியாகவும் சி.பி.(எம்) கூட்டணி செயல்படுகிறது.

இடதுசாரிக் கூட்டணியின் மற்றபிற கட்சிகளை விட அதிகமாக தாராளமயமாக்குவது, ஜனநாயகப்படுத்துவது என்று அமைப்பு ரீதியாக சீர்திருத்திக் கொள்வதாகக் கூறிக் கொள்ளும் கட்சி சி.பி.(எம்)தான். கட்சிக்குள் எழும் கருத்து




படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடுகளையும் விமர்சனங்களையும் முளையிலேயே நசுக்கி விடுவதில் இன்னமும் துளியும் மாறவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். சி.பி.(எம்) பற்றி வெளியிலிருந்து வரும் எத்தகைய மதிப்பீட்டையும் விமர்சனத்தையும் "பூர்ஷ்வா பொய்ப் பிரச்சாரம்", "சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளின் சதி" என்றும் முத்திரை குத்தி அணிகளின் கண்களைக் கட்டி விடுவதிலும் கூட இன்னமும் துளியும் மாறவில்லை.

இருந்தபோதும், சி.பி.(எம்) கட்சியின் அணிகளுடைய பார்வைக்கு முன்வைக்கப்படும் மேற்கண்ட மதிப்பீட்டுக்கான ஆதாரங்களை மேலும் விரிவாகக் காண்போம்.




**மேற்கு வங்கத்தில் இடதுசாரி கூட்டணி வாங்கிய ஓட்டு எண்ணிக்கை சதவீதம் ஏற்கனவே சரிந்து வருவதைக் காட்டும் வரைபடம். அண்மைத் தேர்தல் முடிவுகள் கிடுகிடு சரிவைக் காட்டுகின்றன.**

• • •

**சி.**பி.(எம்) கட்சியின் சித்தாந்தக் குருவாயிருந்த ஈ.எம். சங்கரன் நம்பூதிரிபாடுதான் உலகிலேயே முதன் முறையாக தேர்தல்கள் மூலம் "கம்யூனிஸ்டுகளின் ஆட்சி"யை நிறுவி வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

சி.பி.(எம்) கட்சியின் அரசியல் சாணக்கியரான ஜோதிபாசுதான் இந்த நாட்டிலேயே அதிக ஆண்டுகள் மாநில முதலமைச்சராக இருந்து ஆட்சி புரிந்தவர் என்ற இன்னொரு வரலாற்றுச் சாதனை புரிந்தவர்.

இந்தச் சாதனைகளை நிகழ்த்திய வரலாற்றுப் போக்கில் அக்கட்சி முழுக்க முழுக்க நாடாளுமன்றச் செக்கு மாடாகிப் போனது. நாடாளுமன்றத்துக்கு வெளியே அக்கட்சியின் அரசியல் செயல்பாடு தேர்தல் வேலைகள் மற்றும் ஓட்டுக் கட்சிகளுடன் கூட்டணி பேரங்கள் நடத்துவதுதான் என்று சுருங்கிப் போனது. இந்த வரலாற்றுப் போக்கில் சி.பி.(எம்) கட்சி புரிந்துள்ள இன்னொரு சாதனை பி. ராமமூர்த்தி, சுர்ஜித்சிங் ஆகிய நாட்டிலேயே முதன்மையான அரசியல் தரகர்களை உருவாக்கியதுதான். இப்படிக் கசப்பான உண்மைகளைக் கேட்பதற்கு, செரிப்பதற்கு சிரமமாகத்தான் இருக்கும்.

மேற்கு வங்கம், கேரளம், திரிபுராவில் இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைப் பிடித்ததற்கும், இவ்வளவு காலம் நீடித்திருப்பதற்கும் காரணம் அதன் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அவற்றின் ஆட்சித் திறனும்தான் என்று பிற மாநிலங்களில் பிரச்சாரம் செய்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் வலுவான மாற்றுக் கட்சி என்று ஒன்றிருந்தால் போதும், ஏற்கனவே அதிகாரத்திலுள்ள ஆட்சியாளர்களைத் தோற்கடித்து மாற்றுக் கட்சியை வெற்றி பெறச் செய்வது வழக்கமாகி விட்டது. இந்தச் சுழற்சியின் காரணமாகத்தான் இடதுசாரிக் கூட்டணி ஆட்சிக்கு வந்தது. திரிபுராவில் காங்கிரசும், கேரளாவில் காங்கிரசின் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் வலுவாக உள்ளதால் அம்மாநிலங்களில் சுழற்சி முறையில்தான் மாறி மாறி இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்க முடிந்தது.

மேற்கு வங்கத்தில் "கோஷ்டிச்" சண்டைகளால் பிளவுபட்டுக் கிடக்கும் காங்கிரசு (1977-க்கும் பிறகு) இடதுசாரிக் கூட்டணிக்கு வலுவான மாற்றுத் தலைமையாக அமையவில்லை. மம்தா பானர்ஜி அத்தகைய மாற்றுத் தலைமையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டபின் இடதுசாரிக் கூட்டணியின், குறிப்பாக ஜோதிபாசுவின் சி.பி.(எம்) கட்சியின் ஏகபோக நிலை ஆட்டங்காணத் துவங்கிவிட்டது. 1998 பொதுத் தேர்தல்களுக்கு சற்று முன்பாக காங்கிரசிலிருந்து வெளியேறிய மம்தா, திரிணாமுல் காங்கிரசுக் கட்சி அமைத்து, பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டார். இந்தக் கூட்டணியின் துவக்கமே சி.பி.(எம்)-க்குத் தலைவலியாகப் போய் விட்டது. இதை முறியடிப்பதற்காக மத்தியில் சோனியா தலைமையில் காங்கிரசு ஆட்சி அமைவதை ஆதரிப்பதாக சி.பி.(எம்) அறிவித்தது. அதாவது காங்கிரசுடன் மறைமுகத் தேர்தல் கூட்டும் காணத் தயாரானது. ஆனாலும், ஏழு எம்.பி. தொகுதிகளில் வென்று, மேற்கு வங்க நகர்ப்புறங்களில் காலூன்றத் துவங்கியது மம்தாவின் திரிணாமுல் காங்கிரசு. மேற்கு வங்க நகர்ப்புறங்களில், குறிப்பாக கல்கத்தா பெருநகரில் காலூன்றியது. அதிலிருந்து அடுத்தடுத்த தேர்தல்களில் இடதுசாரிக் கூட்டணி சரிவையே கண்டு வருகிறது.

1999 நாடாளுமன்றத் தேர்தல்களில் எட்டு எம்.பி. தொகுதிகளில் வென்ற திரிணாமுல் காங்கிரசு, சி.பி.(எம்) கட்சிக்கு மாற்றுக் கட்சியாக மேற்கு வங்கத்தில் நிலை நாட்டிக் கொண்டது. மத்திய அரசில் பங்கேற்று அதிகாரச் சுவை கண்டது. காங்கிரசில் இருந்த முக்கிய புள்ளிகள் திரிணாமுலுக்குக் கட்சி மாறுவது துவங்கியது. மேற்கு வங்க சட்டமன்றத்தில் அதிகார பூர்வமற்ற எதிர்க் கட்சியானது திரிணாமுல் காங்கிரசு. சோனியா காங்கிரசின் எம்.எல்.ஏ.களில் கணிசமான பேர் அதிகார பூர்வமற்ற முறையில் மம்தா தலைமைக்குக் கட்சி மாறி செயல்படுகின்றனர். காங்கிரசால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் தெம்படைந்த மம்தா, இடதுசாரிக் கூட்டணிக்கு எதிராக, பா.ஜ.க. - திரிணாமூல் - காங்கிரசு கட்சிகளின் மகா கூட்டணிக்கு அறைகூவல் விடுத்தார். பா.ஜ.க. மட்டுமல்ல, கனிகான் சௌதிரி போன்ற பழுத்த காங்கிரசுக்காரர்களும், மகா கூட்டணி யோசனைக்குப் பலத்த ஆதரவு கொடுக்கின்றனர். சோனியா காங்கிரசு செய்வதறியாது திணறுகிறது. மொத்தத்தில், பிரணவ முகர்ஜி, பிரியரஞ்சன் தாஸ் ஆகிய ஒரு சிலரின் குழுக்கள் தவிர, மேற்கு வங்க காங்கிரசின் தலைவர்களும் அணிகளும் திரிணாமுல் காங்கிரசில் இணைவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையே, மேற்கு வங்க உள்ளூராட்சி நகரவை தேர்தல்கள் வந்தன. பா.ஜ.க. திரிணாமுல், காங்கிரசு ஆகியவை தனித்தனியே போட்டியிட்டதில் பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது. திரிணாமுல், காங்கிரசு கணிசமான நகரவைகளைக் கைப்பற்றின. இவை தனித்தனியே போட்டியிட்டதால் இடதுசாரிக் கூட்டணி தலை தப்பியது. நகரவைகளில் பழைய அளவு வெற்றி பெற முடிந்தது.

1998, 99 நாடாளுமன்றத் தேர்தல் சரிவுகளுக்குக் காரணம், தமது கட்சி அணிகள் போதிய அளவு தமது அரசாங்கச் சாதனைகளை மக்களிடம் பிரச்சாரம் செய்யாததுதான் என்று சொல்லிச் சமாளிக்க முயன்றது சி.பி.(எம்) கட்சி. நகரவைத் தேர்தல் பின்னடைவுக்குக் காரணம், நகர்ப்புறங்கள் எப்போதுமே இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்ததில்லை என்று சொல்லி சமாளிக்கப் பார்த்தது.

ஆனால், பேரிடியாய் வந்திறங்கியது பன்சுகுரா நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல் முடிவு. பன்சுகுரா பாரம்பரியமாகவே இடதுசாரிக் கூட்டணியின் வலுவான கோட்டையாகக் கருதப்பட்டு வந்தது. அதன் புகழ் பெற்ற தலைவி கீதா முகர்ஜி பலமுறை வெற்றி பெற்ற, கிராமப்புறத் தொகுதி. அவர் இறந்து போனதால் வந்த இடைத் தேர்தலில் சி.பி.ஐ. கட்சியின் மேலவைத் தலைவரும், பிரபலத் தொழிற்சங்கத் தலைவருமான குருதாஸ் குப்தா போட்டியிட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட திரிணாமுல் காங்கிரசின் முகந்தெரியாத வேட்பாளர் வெற்றி பெற்று, இடதுசாரிக் கூட்டணியின் கோட்டையைக் கைப்பற்றினார்.

இந்தத் தேர்தல் தோல்விக்கு, இடதுசாரிக் கூட்டணி சார்பாக, நம்ப முடியாத - வேடிக்கையான - விநோதமான விளக்கங்களை சி.பி.(எம்) கட்சி கூறி வருகிறது. சி.பி.(எம்) அணிகளுக்கு எதிராக கிரிமினல் குண்டர் படையை ஏவி திரிணாமுல் காங்கிரசு படுகொலைகள் செய்து வன்முறை வெறி



படிப்பகம்

யாட்டம் போட்டது; பன்சுகுராவின் இரு சட்டமன்றத் தொகுதிகளில் சி.பி.(எம்) அணிகள் ஆதரவாளர்கள் ஓட்டுப் போட முடியாமல் அடித்து விரட்டப்பட்டனர்; பல வாக்குச் சாவடிகளில் சி.பி.(எம்) கட்சிக்கு ஒற்றை இலக்க ஓட்டுக்களே கிடைத்துள்ளன; ஆகவே, தேர்தல் தில்லு முல்லுதான் திரிணாமுல் காங்கிரசின் வெற்றிக்குக் காரணம் என்று விளக்குகிறது. அடுத்து, திரிணாமுல் காங்கிரசின் பின்புலமாக இருந்து "ஜோத்திதார்கள்" எனப்படும் நிலப்பிரபுக்கள் தாம் சி.பி.(எம்) அணிகளைத் தாக்குகின்றனர்; மேற்கு வங்க இடசாரி கூட்டணி அரசு கொண்டு வந்த நிலச் சீர்திருத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களே இந்த ஜோத்திதார்கள்; இதனால் பலனடைந்த ஏழை விவசாயிகள் இன்னமும் இடதுசாரிக் கூட்டணியை ஆதரிக்கின்றனர் என்று சி.பி.(எம்) பண்டிதர்கள் தேர்தல் முடிவுக்கு உரை எழுதுகின்றனர்.

இந்த விளக்கத்தை நம்ப வேண்டுமானால், இரண்டு உண்மைகளை நாம் மறந்துவிட வேண்டும்.

மேற்கு வங்கத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக சி.பி.(எம்) தலைமையிலான அரசாங்கம்தான் இருக்கிறது. அங்கே இன்னமும் கிரிமினல் - குண்டர்களின் ரௌடி ஆதிக்கம் நீடிக்கிறது; ஜனநாயக பூர்வமான தேர்தல்கள் நடைபெறவில்லை; ஓட்டுச் சாவடிகளைக் கைப்பற்றி தேர்தல் மோசடி - தில்லு முல்லுகள் நடக்கின்றன என்றால் அம்மாநில அரசுக்கு அதில் பொறுப்பு இல்லையா?

அடுத்து, மேற்கு வங்கத்தில் இடதுசாரி கூட்டணி ஆட்சியின் சாதனையாகக் கூறப்படும் நிலச் சீர்திருத்தங்கள் அமலாக்கப்பட்டு ஜோத்திதார்கள் - நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, நிலமற்ற மற்றும் ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. நிலம் பெற்ற விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள், உள்ளூராட்சி அமைப்புகள் மூலமாக நடுத்தர விவசாயிகளாகி நலம் பெற வாழுகின்றனர் என்று சி.பி.எம். பிரச்சாரம் செய்கிறது. பிற மாநிலங்களைப் போல மேற்கு வங்கத்தில் சாதிச் சண்டைகள் வெடிக்காததற்குக் கூட அங்கே நிலச் சீர்திருத்தத்தைத் தாம் சாதித்திருப்பதாகக் காரணம் கூறுகின்றனர். அந்த ஜோத்திதார்கள் - விவசாயிகளின் அடுத்த தலைமுறையே தோன்றியிருக்க வேண்டும். இத்தனைக்கும் பிறகு இப்போது இடதுசாரி கூட்டணிக்கு எதிராக ஜோத்திதார்களின் அடியாட்கள் தாக்குதல் தொடுக்கின்றனர் என்றால் எது உண்மை? ஜோத்திதார்கள் நீடிக்கிறார்கள், நிலச்சீர்திருத்தம் எல்லாம் காகிதப் புரட்சிதான் என்பதுதான் உண்மையா? அல்லது தேர்தல் சரிவை சமாளிக்கச் சொல்லும் காரணம்தான் உண்மையா?



**ஆயுதங்களோடு ஆட்கள் நிற்பதைப் பார்த்து இது ஏதோ பீகார் கிராமப்புறம் என்று எண்ணிவிடாதீர்கள்; இது, மேற்கு வங்கத்திலுள்ள கேஷ்புர் கிராமம். மேற்கு வங்கத்தில் அரசியல் வன்முறைதான் "மார்க்சிஸ்டு"களின் வெற்றி-தோல்வியைத் தீர்மானிக்கிறது.**

பன்சுகுரா தோல்விக்கு, சி.பி.(எம்) தலைமை என்னதான் விளக்கமளித்துக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றுக்கும் பதிலடியாக, கல்கத்தா மாநகரத் தேர்தல் முடிவுகள் வந்தன. 20 ஆண்டுகளுக்கு மேலாக சி.பி.(எம்) அதிகாரம் செலுத்தி வந்த கல்கத்தா மாநகர ஆட்சியை திரிணாமுல் காங்கிரசிடம் இழந்தது. பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்ட நிலையில் காங்கிரசின் தயவோடு மேயர் பதவியைக் கைப்பற்றவே சி.பி.(எம்) முயன்றது. ஆனால் காங்கிரசின் மாநகரவை உறுப்பினர்கள் மம்தாவின் வேட்பாளரை ஆதரித்து மேயராக்கிவிட்டனர். இதேபோல, பன்சுகுரா தேர்தலுக்கு முன்ப மேற்கு வங்கத்தில் இருந்து நாடாளுமன்ற மேலவைக்கு நடந்த தேர்தலிலும் காங்கிரசு எம்.எல்.ஏ.க்கள் மம்தாவின் வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச் செய்தனர்.

இப்போதைக்கு சி.பி.(எம்) கட்சியின் ஒரே ஆறுதலாக பா.ஜ.க. - திரிணாமுல் - காங்கிரசின் மகா கூட்டணியை ஆதரிக்கும் கனிகான் சௌதிரி தலைமையை நீக்கிவிட்டு பிரணவ முகர்ஜியை மேற்கு வங்க காங்கிரசின் தலைவராக சோனியா காங்கிரசு நியமித்திருப்பதுதான். இதன் மூலம் மகா கூட்டணி அமையாமல் எதிர்க் கட்சிகள் பிளவுபட்டுப் போட்டியிட்டால் மீண்டும் மேற்கு வங்கத்தில் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று சி.பி.(எம்) நம்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் அரசியல் காற்று அதற்கு எதிரான திசையில் அடிக்கிறது என்பது இப்போதே தெரிகிறது.

• • •

**கே**ரளாவின் தேர்தல் அரசியல் முடிவுகளைத் தீர்மானிப்பது சாதி - மத அரசியல் அணி சேர்க்கைதான். எந்தெந்த சாதி - மத அமைப்புகள் எந்தப் பக்கம் சாய்கின்றன என்பதைப் பொருத்து வெற்றி - தோல்வி தீர்மானிக்கப்படுகிறது; அதிலும் 2 அல்லது 3 சதவீத ஓட்டுகள் தரப்பு மாறினாலே முடிவுகள் திசைமாறி விடும்.

வெவ்வேறு சாதி - மத அமைப்புகளைத் திறமையாகக் கையாள்வதைய ஈ.எம்.எஸ். - நாயனார் அணியும், கருணாகரன் - அந்தோணி அணியும் கலையாகக் கற்றுத் தேர்ந்துள்ளன. இந்த விடாக் கண்டர்களுக்கும் அந்த கொடாக் கண்டர்களுக்குமிடையில் நடக்கும் கூட்டணி ஆட்டத்தில் இப்போதைய சுற்று நாயனார் அணியின் வெற்றியாக முடிந்து ஆட்சியில் இருக்கிறது இடதுசாரி - ஜனநாயகக் கூட்டணி. ஆனால் அது நீடிக்காது என்று சி.பி.(எம்) அணி அஞ்சுகிறது. மெதுவாகக் காலூன்றி வரும் பாரதீய ஜனதாவும், காங்கிரசும் கள்ளக் கூட்டுச் சேர்ந்து, தனது அணியை வீழ்த்திவிடும் என்று தேர்தல் கணக்குகள் காட்டுகின்றன. பிற மாநிலங்களிலும், மத்தியிலும் காங்கிரசை ஆதரிக்கும் சி.பி.(எம்) கேரளாவில் எதிர்ப்பதாக அரசியல் நடத்துவது சிரமமாக உள்ளது.

எனவே இன்னும் பலம் சேர்க்க வேண்டியுள்ளது. முஸ்லீம் லீக்குடன் அணி சேர்வது கேரளத் தேர்தல் முடிவுகளுக்கு மிகவும் அவசியமானது. முஸ்லீம் லீக் கட்சி அனைத்திந்திய அளவில் மதவாதக் கட்சியாக இருந்தாலும் கேரளாவில் ஜனநாயகக் கட்சி—மத



படிப்பகம்

www.padippakam.com

வாதக் கட்சி அல்ல என்று சொல்லி சில காலம் கூட்டணி சேர்ந்து சி.பி.(எம்) ஆட்சி நடத்தியது. முஸ்லீம் லீக் கட்சி காங்கிரசுடன் அணி சேர்ந்த பின் கேரளாவிலும் மதவாதக் கட்சிதான்; சிறுபான்மை மதவாதம் பெரும்பான்மை மத்வாதம் இரண்டையும் எதிர்க்கிறோம் என்ற நிலை எடுத்தது, சி.பி.(எம்).

மத்தியத் தலைமையின் முடிவு இப்படி இருக்கும்போதே, கேரள சி.பி.(எம்) செயலாளர் விஜய்குமாரும், முதல்வர் நாயனாரும் முஸ்லீம் லீக்கின் ஒரு பிரிவுடன் கூட்டுச் சேருவது என்று அறிவித்தனர். உள்ளூர் அளவிலான கூட்டணி பற்றிய முடிவை உள்ளூர் அமைப்பே எடுக்கும் என்ற சி.பி.(எம்) கட்சியின் நிலைப்பாட்டைத் தமக்குச் சாதகமாக நாயனார் கும்பல் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறது. ஆனால், அதற்கு எதிரான அச்சுதானந்தன் தலைமையிலான குழுவோ இரண்டு முசுலீம் லீக்குகளுமே மதவாத அமைப்புகள்தாம், மத்தியத் தலைமையின் முடிவுப்படி இரண்டோடுமே கூட்டணி கிடையாது என்று கூறுகிறது. ஆக, மேற்கு வங்கத்தைப் போலவே, கேரளாவிலும் தேர்தல் பயம் சி.பி.(எம்) ஆட்சியைத் தொற்றிக் கொண்டு விட்டது.

● ● ●

மேற்கு வங்கத்தில் இருந்து குடியேறி திரிபுரா பழங்குடி மக்களை சிறுபான்மையாக்கி விட்ட "பங்களா பாபுக்கள்"தாம் திராபுராவில் சி.பி.(எம்)-மின் தேர்தல் வெற்றிக்குக் காரணம். திரிபுரா தேசிய இன விடுதலைக்கான சில குழுக்கள் அங்குள்ளன. அவற்றோடு பழங்குடி இனவெறிக் குழுக்களும் உள்ளன. காங்கிரசுக் கட்சி பழங்குடி இனவெறி அமைப்புகளுடன் கூட்டணி வைத்துள்ளது. இனவிடுதலை போராளி மற்றும் பயங்கரவாதக் குழுக்களை ஒடுக்குவது என்கிற பெயரில் உண்மையில் அம்மாநிலத்தில் இந்திய இராணுவ - துணை இராணுவ ஆட்சிதான் நடக்கிறது. பழைய, புதிய "தடா" சட்டங்களை எதிர்ப்பதாக சி.பி.(எம்) தீர்மானம் நிறைவேற்றியிருந்தபோதும் திரிபுராவை கவனத்தில் வைத்து அச்சட்டங்களை ஆதரிக்கவே செய்கிறது. அங்கே காங்கிரசு - சி.பி.(எம்) இரண்டுமே இலஞ்ச ஊழல் புரிவதில் போட்டி போடுகின்றன. கேரளாவில் ஈ.எம்.எஸ்; மே. வங்கத்தில் ஜோதிபாசுவைப் போல திரிபுராவில் நிருபன் சக்கரவர்த்தி சி.பி.(எம்) கட்சியின் பிரபலத் தலைவராக இருந்தார். ஆனால், கட்சிக்குள் தலைவிரித்தாடிய இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளை அவர் எதிர்த்ததால், பைத்தியம் பிடித்து விட்டது என முத்திரை குத்தி ஓரங்கட்டப்பட்டு இறுதியில் மனமுடைந்து மாண்டு போனார். இந்த நிலையில், "பங்களா பாபு"களிடமும் சி.பி.(எம்) செல்வாக்கு இழந்து வருகிறது.

● ● ●

இவ்வாறு தேர்தல் களத்திலும், மக்கள் மத்தியிலும் இடதுசாரிக் கூட்டணி செல்வாக்கிழந்து வருகையில் மத்தியத் தேர்தல் ஆணையத்திடம் இருந்து இரண்டு தாக்குதலை எதிர்கொண்டுள்ளது. ஒரு ஓட்டுக் கட்சி, தேர்தல் ஆணையத்தின் மாநில அங்கீகாரம் பெறுவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. மாநில மொத்த வாக்காளர்களில் 6 சதவீத ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது மொத்த சட்டமன்ற உறுப்பினர்களில் 30 பேருக்கு ஒருவர் வீதம் அக்கட்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது 25 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒருவர் வீதம் பெற்றிருக்க வேண்டும். இப்படி குறைந்தது நான்கு மாநிலங்களில் அங்கீகாரம் பெற்ற கட்சி தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படும். அது நாடு முழுக்கவும் ஒரே தேர்தல் சின்னத்தில் போட்டியிடலாம். மேலும், வானொலி - வானொளி மூலம் பிரச்சாரம் உட்பட பல சலுகைகளும் பெற முடியும். டெல்லியில் கட்சி அலுவலகம் நடத்த பெரிய மாளிகை கிடைக்கும்.

கேரளம், மேற்கு வங்கம், திரிபுரா தவிர ஆந்திராவில் 1998 பொதுத் தேர்தல்களின் போது சந்திரபாபு நாயுடுவுடன் கூட்டுச் சேர்ந்து சி.பி.(எம்) மாநில அங்கீகாரத்தோடு, தேசியக் கட்சி என்ற தகுதியையும் பெற்றது. ஆனால், 1999 நாடாளுமன்றத் தேர்தல்களில் நாயுடு கட்சி, பாரதீய ஜனதா கூட்டணியோடு போய்விட்டதால் சி.பி.(எம்) கையறுந்த நிலையில் படுதோல்வி கண்டது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா, பீகாரில் லல்லு உதவியுடன் அங்கீகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று முயன்றது. ஆனால், அந்தக் கனவும் பொய்த்துப் போனது. இதனால், தேசியக் கட்சி என்ற அங்கீகாரத்தை ஏன் இரத்து செய்யக் கூடாது என்று கேட்டு தேர்தல் ஆணையம் விசாரணை துவங்கியுள்ளது.

வேறொரு காரணத்தை முன்வைத்து, சி.பி.(எம்). கட்சியின் அங்கீகாரத்தையே ஏன் இரத்து செய்யக் கூடாது என்று கேட்டு வம்பு செய்கின்றன, வழக்கு மன்றமும், தேர்தல் ஆணையமும். அரசியல் கட்சிகள் பொதுக் கடையடைப்புகள் நடத்துவது சட்ட விரோதமானதென்று கேரள உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. ஏற்கனவே, பொது கடையடைப்பு நடத்தியதற்காக சி.பி.(எம்) கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்யும் முயற்சியில் வழக்கு மன்றமும் தேர்தல் ஆணையமும் இறங்கியுள்ளன. பொதுக் கடையடைப்புகள் சட்ட விரோதமானவைதாம் என்று உச்சநீதி மன்றமும் தீர்ப்பளித்து விட்டது. சட்டவாதத்தில் மூழ்கிப்போன சி.பி.(எம்) இந்தத் தீர்ப்புக்கு எதிராக எதுவும் செய்வதறியாது திகைத்து நிற்கிறது.



**கோவை விமான நிலையத்தில், 'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி, சந்தன மாலை, சால்வை அணிவித்து வரவேற்கப்படுகிறார். இது, மலர்க் கிரீடம், கட்-அவுட் கலாச்சாரத்தின் தொடக்கமா?**

இடதுசாரிக் கூட்டணியும், அதிலும் குறிப்பாக சி.பி.(எம்) கட்சியும் நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் போராடுவதன் மூலம் தனது இலக்கை, இலட்சியத்தை எட்டப் போவதாக அறிவித்துக் கொண்டுள்ளன. நாடாளுமன்றத்துக்குள் தனது எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சி ஏறக்குறைய ஒரு தேக்க நிலைக்கு வந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. நாடாளுமன்றத்துக்கு வெளியே பொதுக் கடையடைப்பு மட்டுமல்ல, ஊர்வலம் - பேரணி நடத்துவதற்கான உரிமைகள் கூட மறுக்கப்பட்டு, முடக்கப்படுகின்றன. இந்த முட்டுக் கட்டைகளைத் தகர்த்துக் கொண்டு முன்னேறுவதற்கான வழி எதுவுமே அவர்களிடம் கிடையாது.

— தொடரும்


படிப்பகம்

# பிரித்தாளும் சூழ்ச்சி தோல்வியில் முடிந்தது

பிரித்தாளும் சூழ்ச்சி எல்லா விவகாரங்களிலும், எல்லா நேரங்களிலும் ஆளுவோருக்குச் சாதகமான விளைவைத் தரும் என்று நம்ப முடியாது. சான்றாக, ஜம்மு - காஷ்மீர் விவகாரத்தைப் பாருங்கள். இந்தியாவின் பல மாநிலங்களிலும் இந்து - முஸ்லீம் பிளவை வைத்து ஆதாயம் கண்டு வரும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டம், ஜம்மு - காஷ்மீரிலும் மத அடிப்படையிலான பிரிவுவாத அணுகுமுறையும் அரசு பயங்கரவாத அடக்குமுறையும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகிவிடும் என்று நம்பியது. ஆனால், இந்தக் கொள்கையினால் அங்கே அடிமேல் அடிவாங்கிக் கொண்டிருக்கிறது.

உல்லாச, ஊதாரித்தனத்தில் ஜெயலலிதாவுக்கு இணையானவர்தான் காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா. அவருக்கு சகல ''வசதி''களையும் கொடுத்து, ஜம்மு - காஷ்மீரில் உள்ள எல்லா ''போராளி'' அமைப்புகளையும் ஓரங்கட்டி ஒடுக்கிவிடலாம் என்று இந்திய அரசு செயல்பட்டது. ஆனால், ''போராளி'' அமைப்புகள் கார்கில் போர் துவங்கக் காரணமாக முன்னின்றன. கார்கில் போருக்குப் பின்னர், இந்திய இராணுவம் - துணை இராணுவத்தின் மீதான தாக்குதல் பன்மடங்கு பெருகியது. சீக்கிய - இசுலாமிய மக்களிடையே பிளவையும் மோதலையும் தூண்டுவதற்கு சட்டிஸ்புரா சீக்கியர் படுகொலையை நடத்தியது, இந்தியப் படை. சீக்கியர் படுகொலைக்குக் காரணமான தீவிரவாதிகள் எனச் சொல்லி ஐந்து அப்பாவி இசுலாமியரையும் கொன்றது. இதற்கு நீதி கேட்டுப் போராடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் 12 பேரையும் சுட்டுக் கொன்றது, இந்தியப் படை. இதன் காரணமாக மாநிலந் தழுவிய எதிர்ப்பலை எழுந்தது. இதைச் சமாளிக்கவும், அமெரிக்க நிர்பந்தம் காரணமாகவும் காசுமீர்ப் பிரச்சனைக்கு சமாதான - அரசியல் தீர்வு என்று நாடகமாடத் துவங்கியது, மைய அரசு.

காசுமீரின் ஆளும் கட்சியாக உள்ள பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியையும், எதிர்த் தரப்பான அனைத்துக் கட்சி கூட்டுப் பேரவை (ஹுரியத்)யையும் எதிரெதிராக நிறுத்தி சமாதான - அரசியல் தீர்வில் அக்கறை இருப்பதாக நாடகமாடி அம்பலப்பட்டது. முதலில் கூட்டுப் பேரவைத் தலைவர்களை சிறையிலிருந்து விடுதலை செய்து, பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுத்தது. தான் ஓரங்கட்டப்படுவோம் என்று அஞ்சிய பரூக் அப்துல்லா கட்சி, ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தை அவசர அவசரமாகக் கூட்டியது. மாநிலச் சுயாட்சி தீர்மானத்தையும் நிறைவேற்றியது. அதை ஆரம்பத்தில், நாடாளுமன்றத்திலும், பிறகு மத்திய அமைச்சரவையிலும் பரிசீலிக்கப் போவதாக ஒப்புக் கொண்ட வாஜ்பாயி அரசு, ஜம்முப் பகுதி இந்துக்களையும், லடாக் பகுதி பௌத்தர்களையும் மாநில சுயாட்சிக்கு எதிராகத் தூண்டிவிட்டது. ஆர்.எஸ்.எஸ். கும்பலின் நெருக்குதலும் அதிகரித்தது. இதனால், காஷ்மீரின் மாநில சுயாட்சித் தீர்மானத்தை பரிசீலிக்காமல் எடுத்த எடுப்பிலேயே மத்திய அரசு நிராகரித்தது. பரூக் அப்துல்லாவோ, தமிழ்நாடு, ஆந்திரா, மே.வங்க முதல்வர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டினார். ஆனால், பரூக்கோ, வாஜ்பாய் - அத்வானி கும்பலோ மத்தியில் வைத்துக் கொண்டுள்ள கூட்டணி உறவை முறித்துக் கொள்ளவில்லை. அதேசமயம், காஷ்மீர் ஹுரியத் பேரவையுடனான பேச்சு வார்த்தை துவங்கப்படாமலேயே முடக்கப்பட்டது.

ஹுரியத் பேரவையையும் பருகின் தேசிய மாநாட்டு கட்சியையும் எதிரெதிரா[க] நிறுத்தி சமாதான - அரசியல் நாடகமாடி[க்] கொண்டிருந்த அதேசமயம், பாகிஸ்தான் ஆதரவு ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற தீவி[ர] வாதக் குழு ஒரு தரப்பாக போர் நிறுத்தத்தை அறிவித்து, பேச்சு வார்த்தைக்கும் மு[ன்] வந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஹிஸ்புல் முஜாகிதீனையும் ஹுரியத் பேரவையையும் எதிரெதிரா[க] நிறுத்தி ஆதாயம் தேடுவதற்கு மைய அரசு எத்தணித்தது. ஆனால் இந்த முயற்சியில் இந்திய அரசு மேலும் அரசியல் ரீதியில் அம்பலப்பட்டுப் போனதோடு, இந்தியத் தரப்பில் ஒரு இராணுவ பிரிகேடியர், ஒரு கர்னல் ஆகிய உயர் அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்களைப் பலி கொடுத்தது.

ஹிஸ்புல் முஜாகிதீனின் ஜம்மு - காஷ்மீர் தலைமைத் தளபதி அப்துல் மஜித்தார், ஜூலை 25-ந் தேதி போர் நிறுத்தத்தை அறிவித்தார். இந்திய அரசும் - இராணுவமும் உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்டன. அதை அமலாக்குவது இந்திய இராணுவத்தைப் பொருத்தவரை எளிதான ஒன்றல்ல. அனைத்துக் கட்சிகளின் கூட்டு பேரவையில் உள்ள சில போராளி அமைப்புகளும், ஹிஸ்புல் முஜாகிதீனும் தவிர லஸ்கர்-இ-தொய்பா, ஹர்கத்-உல்-முஜாகிதீன், அல்-ஜிகாத் படை போன்ற பிற குழுக்களும் அங்கே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. போர் நிறுத்தத்தை அறிவித்திருந்த குழுக்களைத் தவிர்த்து பிறவற்றுடன் மட்டும் போரைத் தொடர்வது எளிதான காரியமல்ல.

இதனால் 11 நாட்களே நீடித்திருந்த போர் நிறுத்த காலத்தில்தான் அதிகபட்சமாக நூற்றுக்கும் மேற்பட்ட சிவிலியன் மக்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகள் எப்படி நடந்தன என்கிற உண்மை, இந்திய அரசு மற்றும் இராணுவத்தின் இன்றைய பதட்டம், பீதி, தொடை நடுங்கித்தனத்தை அம்பலப்

**இந்திய அரசின் உள்துறைச் செயலருக்கும் (இடது ஓரம்), ஹிஸ்புல் முஜாகிதீன் குழுவைச் சேர்ந்த (நான்கு) தளபதிகளுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை.**



www.padippakam.com

படுத்துவதாக அமைந்தது. அதே சமயம், பாகிஸ்தான் பின்னணியில் இருந்து இயக்கும் இசுலாமியத் தீவிரவாதக் குழுக்களின் கொலை வெறியையும் எடுத்துக் காட்டியது.



லஸ்கர் - இ - தோய்பா என்ற முசுலீம் தீவிரவாதக் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்ட பீகார்த் தொழிலாளர்களின் சடலங்கள்.

ஆண்டு தோறும் ஆகஸ்டு மாதம் வட நாட்டு பக்தர்கள் அமர்நாத் குகைக் கோவிலுக்குப் போய் உறைபனி லிங்கத்தைத் தரிசிப்பதை தனது மத வெறி நோக்கத்துக்கு ஆர்.எஸ்.எஸ். பாசிச பரிவாரங்கள் பயன்படுத்தி வருகின்றன. விநாயக சதுர்த்தியை எப்படி மதவெறிப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அதேபோல, அதிக எண்ணிக்கையில் "பக்தர்"களைத் திரட்டிக் கொண்டு போய் காஷ்மீர் அரசுக்கு நெருக்கடி கொடுத்து, அது இசுலாமிய மதச் சார்புடையது என்று காட்டுவதுதான் இந்து பாசிச வாதிகளின் நோக்கம். இந்த முறை, ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பு போர் நிறுத்தம் அறிவித்துள்ளதையும், மத்திய அரசு அதை ஏற்று பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடு செய்வதையும் சீர்குலைக்கவே ஆர்.எஸ்.எஸ். கும்பல் முயன்றது. மாநில அரசு, 'இராணுவக் கட்டுப்பாட்டை மீறி பெரும் எண்ணிக்கையில் இந்த முறை "பக்தர்கள்" திரட்டப்பட்டனர்.

ஆகஸ்டு முதல் தேதி அன்று பெகல்காம் என்னுமிடத்தில் உள்ள முகாம்களை விட்டு மரப்பாலம் வழியே அமர்நாத் பயணிகள் புறப்பட்டனர். அவர்களிடையே லஸ்கர்-இ-தொய்பா குழுவின் தற்கொலைப் படையினர் ஊடுருவினர். மாலை மங்கிய நேரம். நடுப்பாலம் வந்ததும் பயணிகளைச் சுட்டுக் கொல்ல ஆரம்பித்தனர். பாலத்தின் இரு முனைகளிலும் நின்றிருந்த மத்திய ரிசர்வ் படையினர் குழப்பத்திலும் பீதியிலும் தற்கொலைப் படையினர் கலந்துள்ள பயணிகள் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். இதனால் பயணிகள் பலர் பலியானதோடு, தப்பிக்கும் முயற்சியில் பாலத்திலிருந்து குதித்தவர்களும் மாண்டனர். மத்திய ரிசர்வ் படையினர் சுட்டதில் பயணிகள் தங்கியிருந்த முகாம்கள் மீதும் தோட்டாக்கள் பாய்ந்து சிலர் மாண்டனர். இந்த மரப்பாலத் துப்பாக்கிச் சூட்டினால் ஆத்திரமடைந்த மத்திய ரிசர்வ் படை பகல்காம் ஊருக்குள் புகுந்து கண்முன் தெரியாமல் சுட்டதில் மேலும் நான்கு பேர் மாண்டனர். அவர்கள் உள்ளூர் இசுலாமியர்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அடுத்த நாள் மாலை ஆனந்த்நாக் மாவட்டம் யூமே கிராமத்தில் 9 பேரும், காஜிகுந்த் கிராமத்தில் 19 பேருமாக பஞ்சம் பிழைக்க வந்த பீகாரித் தொழிலாளர்கள் லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். அடுத்தநாள் தோடா மாவட்டத்தில் குண்டாபோகல் கிராமத்தில் 9 பேரும், கார்வான் மற்றும் ஹாஸ்ராஜ் ஆகிய் கிராமங்களில் தலா நான்கு பேரும் கொல்லப்பட்டனர். கேயார் கிராமத்தில் இயங்கிவந்த கருங்காலிப் படையினர் எட்டுப் பேர் கொல்லப்பட்டதோடு குப்வாரா மாவட்டம் கலரு கிராமத்தின் ஆட்காட்டி முஷ்டாக் அகமது கனேயின் குடும்பம் கூண்டோடு ஒழிக்கப்பட்டது.

அமர்நாத் பயணிகள் கொல்லப்பட்டது குறித்து வாஜ்பாய் சோனியா உட்பட எல்லா நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களும் கொதித்துப் போய் இரண்டாம் நாளே பெகல்காம் பறந்தனர். ஏராளமாக நட்ட ஈடும், நிவாரணங்களும் வழங்கப்பட்டன. ஆனால் கொல்லப்பட்ட பீகாரித் தொழிலாளர்களுக்காக அனுதாபம் தெரிவிக்க ஒருவர் கூடப் போகவில்லை. நிவாரணம் வழங்க அக்கறைப்படவும் இல்லை. பெகல்காமில் பயணிகள் கொலைக்காக நீதி விசாரணை கோரி பல நாட்கள் நாடாளுமன்றம் செயல்பட முடியாமல் "கலகம்" செய்தது காங்கிரசு. ஆனால், நீதி விசாரணை இந்தியப் படையின் உணர்வைக் குன்றச் செய்துவிடும் என்று ஆளும் கூட்டணியோடு போலி கம்யூனிஸ்டுகள், அவர்களுடைய சகாக்களான லல்லு, முலயம் உட்பட பிற கட்சிகள் ஒத்தூதின. இதன் மூலம், இவ்வாறுதான், இந்திய இராணுவத்தின் குற்றங்கள் எல்லாம் மறைக்கப்பட்டும், நியாயம் கற்பிக்கப்பட்டும் வருகின்றன என்பது வெளிச்சத்துக்கு வந்தது.

சிறீநகரில் நடந்த குண்டு வெடிப்பில் இறந்து போன போலீசாரின் சடலங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன.



ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி போன்ற, இந்தியா - பாகிஸ்தான் இரண்டையும் சாராத மதச்சார்பற்ற, ஜனநாயக பூர்வமான போராளி குழுவுக்குப் போட்டியாக பத்துக்கு மேற்பட்ட இசுலாமிய தீவிரவாதக் குழுக்களை பாகிஸ்தான் உருவாக்கியது. ஜ.கா.வி.மு.வின் நியாயமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்காத இந்திய அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையை ஏவியது. ஒன்றுக்கு மேற்பட்ட தீவிரவாதக் குழுக்களை பாகிஸ்தான் உளவுப் படை உருவாக்கி, முட்டுக் கொடுப்பதற்கு முக்கியமான காரணங்களும் உண்டு. ஒரு குழு - ஒரு தலைமை என்றால் — ஆஃப்கானில் நடந்ததைப் போல. அது தனது கட்டுப்பாட்டை மீறியும் போகலாம்; ஒரு குழு ஒடுக்கப்பட்டாலோ, முடங்கிப் போனாலோ, விலை போய் விட்டாலோ, ஒன்றை சமாதான - அரசியல் தீர்வு நாடகத்துக்குப் பயன்படுத்தினாலும் மற்றதை வைத்துக் கொண்டு இந்தியாவுடனான தாழ்நிலைப் போரைத் தொடரலாம்; —இதுதான் பாகிஸ்தான் உளவுப் படையின் உத்தி.

ஆனால், இந்திய அரசோ, காஷ்மீர் பிரச்சினை, யதார்த்த நிலைமைகள் குறித்து அடுக்கான பொய்களைப் பரப்புகிறது; நிறைவேறாக, ஏமாற்றுத் தீர்வுகளை முன்வைத்து, களத்தில் திரும்பத் திரும்ப அடிவாங்குகிறது. "இந்திய அரசு - இராணுவ நடவடிக்கைகளால் அங்குள்ள தீவிரவாதக் குழுக்கள் ஏறக்குறைய ஒடுக்கப்பட்டு விட்டன. தீவிரவாதிகள் மீது மக்களுக்கு அதிருப்தி - அவநம்பிக்கை ஏற்பட்டு அவை தனிமைப்படுத்தப்படுகின்றன. காஷ்மீரில் விரைவில் அமைதி திரும்ப வேண்டும் என்றும் வழமையான வாழ்வுக்காகவும் மக்கள் ஏங்குகின்றனர். அதனால்


படிப்பகம்

சில குழுக்கள் போர் நிறுத்தம் - பேச்சு வார்த்தைக்கு முன்வருகின்றன. வேறு சில குழுக்கள் பின்னடைவு - விரக்தி காரணமாக சிவிலியன்கள் மீதான படுகொலைகளில் ஈடுபடுகின்றனர்'' - இதுதான் இந்திய அரசின் பிரச்சாரம்.

ஆனால், காஷ்மீர் போர்க்களச் செய்திகளோ வேறு விதமாக உள்ளன. பதினோரு நாட்களே நீடித்த போர் நிறுத்தத்தை ஹிஸ்புல் முஜாகிதீன் குழு விலக்கிக் கொண்ட இரண்டாம் நாள், ஸ்ரீநகரில் மட்டும் பட்டப் பகலில் அடுத்தடுத்து கார் மற்றும் கையெறி குண்டு வெடிப்புகளுக்கு 13 பேர் பலியாகினர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர் படுகாயமுற்றனர். மாண்டவர்களில் இரண்டு இராணுவத்தினர், ஒன்பது போலீசார், ஒருவர் பிரபல டில்லி பத்திரிகையின் புகைப்பட நிருபர். காயமுற்றவர்களில் பெரும்பாலோர் இராணுவத்தினரும் போலீசாரும்தான். அதற்கு அடுத்த இரண்டாம் நாள், ஸ்ரீநகர் - ஜம்மு நெடுஞ்சாலையில் எல்லைப் பாதுகாப்புப் படையின் வாகன வரிசையில் குண்டு வெடித்து 5 துணை இராணுவத்தினரையும் கொன்று ஐம்பதுக்கும் மேற்பட்டவர் படுகாயமுறவும் செய்தனர். அடுத்த சில நாட்களுக்குப் பிறகு நிலக்கண்ணி வெடித்து ஒரு இராணுவப் பிர்கேடியரும், ஒரு கர்னலும் கொல்லப்பட்டனர். அதேநாளில் ஒரு இராணுவ முகாம் மீது ஏவுகணை வீசி மூன்று இராணுவத்தினரைக் கொன்று 15 பேரைப் படுகாயப்படுத்தினர். இவற்றுக்கிடையே நாள்தோறும் தீவிரவாதக் குழுக்களின் துப்பாக்கிச் சூடுகளும் தனிநபர் கொலைகளும் நடந்துள்ளன. இந்திய அரசு செய்யும் பிரச்சாரத்துக்கு நேரெதிரான நிலைமையே காஷ்மீரில் நிலவுவதை இவையெல்லாம் காட்டுகின்றன.

காஷ்மீரில் தாழ்நிலைப் போரைத் தொடர்ந்து நடத்துவது, சர்வதேச தலையீட்டைக் கோருவது என்ற அணுகுமுறையில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது. காஷ்மீரில் அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையை தொடர்வது, எல்லைக்கு அப்பால் இருந்துவரும் பயங்கரவாதத்தை நிறுத்துவதற்கு சர்வதேச ஆதரவு கோருவது என்ற அணுகுமுறையில் இந்தியா உறுதியாக உள்ளது. ஆனால், இரு நாட்டு அரசுகளுமே தொடர்ந்து அமெரிக்காவின் நிர்பந்தத்துக்குப் பணிந்து சமாதான - அரசியல் தீர்வு காண முயலுவதாக நாடகமாடுகின்றன. போர் நிறுத்தத்துக்கும் - பேச்சு வார்த்தைக்கும் தயார் என இரு அரசுகளுமே அறிவித்தாலும், இந்தியாவின் நிலைதான் மோசமானதாக உள்ளது. பேச்சு வார்த்தையோ, தாழ்நிலைப் போரோ இழப்பதற்கு எதுவுமில்லை என்ற மேல்நிலையில் பாகிஸ்தான் உள்ளது. பேச்சு வார்த்தையோ, தாழ்நிலைப் போரோ, இழப்பு இந்தியாவுக்குத்தான் என அடுத்தடுத்த தோல்விகள் - சரிவுகளுக்கு இலக்காக இந்தியாதான் உள்ளது.

● மாணிக்கவாசகம்

# தண்ணீர்:
# இயற்கையின் கொடையா? மறுகாலனியாதிக்க ஆயுதமா?

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் ஏழை நாடுகளின் தொழில், விவசாயம், கச்சாப் பொருட்கள் மற்றும் மலிவான உழைப்பைக் கொள்ளையடித்து வரும் ஏகாதிபத்திய வல்லரசுகள், இப்போது இயற்கை மூல வளங்களையும் - தண்ணீரையும் கூட தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து சூறையாடக் கிளம்பிவிட்டன.

மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்குவது, நீர்த்தேக்கங்களைச் சீரமைத்து பாசன வசதியைப் பெருக்குவது, வறட்சி நிலவும் பகுதிகளில் மழை நீரைச் சேமிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது' என்று தண்ணீரைத் தனியார் மயமாக்கும் திட்டத்தை உலக வங்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. இதையே ''தண்ணீர் நிர்வாகம்'' என்று ஏகாதிபத்தியவாதிகள் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். உலக வங்கியின் ஆதரவு பெற்ற சில பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் தண்ணீரை விலைமிக்க ஒரு பண்டமாக மாற்றி வருகின்றன. உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்டு, திணிக்கப்பட்டு வரும் தனியார்மய திட்டங்கள் மூலம் உலகெங்கும் தண்ணீர் விநியோகத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக இந்நிறுவனங்கள் போட்டா போட்டியில் இறங்கியுள்ளன. இந்நிறுவனங்கள், தண்ணீர் என்பது அடிப்படையான மனித உரிமை - வாழ்வுரிமை பிரச்சினை அல்ல என்று வாதிடுகின்றன. எனவே மற்ற பொருட்களைப் போலவே, தண்ணீரையும் வியாபாரப் பொருளாகக் கருதி, தனியார் நிறுவனங்கள் விநியோகிப்பதில் தவறில்லை என்கின்றன. இவ்வாண்டின் தொடக்கத்தி ஜேக் நகரில் ஐ.நா. மன்றத்தின் ஆதரவோடு நடைபெற்ற உலக தண்ணீர் அமைப்பில், தண்ணீரை தனியார்மயமாக்குவதை உலக நாடுகள் ஏற்கச் செய்வதற்காக இந்நிறுவனங்கள் கோடி கோடியாய் வாரியிறைத்துள்ளன.

தண்ணீர் தனியார்மயமானால் குடிநீர் கட்டணங்கள் தாறுமாறாக பல மடங்கு உயரும். தண்ணீருக்கு அதிக விலை கொடுக்க முடியாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். ஏற்கனவே பிரிட்டனில் இவ்வாறு அநியாயமாக உயர்த்தப்பட்ட கட்டணத்தைச் செலுத்தாத மக்களுக்கு குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டு, இந்நிறுவனங்கள் இரக்கமின்றி நடந்து கொண்டன. அதேசமயம் தண்ணீர் விநியோகத்தின் மூலம் தனியார் நிறுவனங்கள் போட்ட முதலைவிட ஏழு மடங்கு அதிகமான இலாபத்தை ஒரே ஆண்டில் ஈட்டியுள்ளன. மேலும், இந்நிறுவனங்கள் சுகாதாரமான குடிநீரையும் முறையாக வழங்குவதில்லை. தண்ணீரை வரைமுறையின்றி உறிஞ்சி செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி, இயற்கை வளத்தையும் சுற்றுச் சூழலையும் நாசமாக்குகின்றன. பிரான்சின் விவெண்டி, சூயஸ் - லையோனைஸ் போன்ற தண்ணீர் ஏகபோக நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் தண்ணீரைத் தனியார் மயமாக்க ஆட்சியாளர்களுக்கு கையூட்டு கொடுத்தும், இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்டும் அம்பலமாகியுள்ளன.

இந்த உண்மைகளை உலக தண்ணீர் அமைப்பின் மாநாட்டில் பல்வேறு சுற்றுச் சூழல் - மனித உரிமை அமைப்புகள் அம்பலப்படுத்தின. ஆனாலும் இம்மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு ஏழை நாடுகளின் அரசுகள் தண்ணீரை தனியார்மயமாக்க ஒப்புதல் அளித்து, அதற்கேற்ப அவசியமான சட்டங்களை நிறைவேற்றவும் உறுதியளித்துள்ளன. இந்திய மக்கள் விரோத ஆட்சியாளர்களும் உலக வங்கியின் திட்டப்படி தண்ணீரை தனியார்மயமாக்க விசுவாசமாக உறுதி அளித்துள்ளனர்.

இத்திட்டம் மைய அரசினால் செயல்படுத்தப்படுவதற்கு முன்னரே, திருப்பூர் நகருக்குக் குடிநீர் வழங்கும் வேலையை பன்னாட்டு நிறுவனங்களிடம் தி.மு.க. அரசு தாரை வார்த்து விட்டது. திருச்சி நகருக்குக் குடிநீர் வழங்கிக் கொள்ளையடிக்கும் உரிமையை ''சிறீராம் இன்ஜினீயரிங்'' என்ற தனியார் நிறுவனத்துக்குக் கொடுத்துள்ளது. இதுதவிர, தமிழகத்தின் 69 நகரங்களின் குடிநீர் வழங்கல் பணியைத் தனியாரிடம் ஒப்படைக்க திட்டங்கள் தயாராகி வருகின்றன. குப்பை வாருவது, குடிநீர் வழங்குவது என மக்களின் அடிப்படை வசதிகளைப் புறக்கணித்து, அவற்றை தனியார் கொள்ளைக்கு மைய அரசின் கட்டுப்பாடு ஏதுமின்றி அனுமதிப்பதுதான் திராவிட பிழைப்புவாதிகளின் 'மாநில சுயாட்சி'யாகி விட்டது.

இது ஒருபுறமிருக்கட்டும்; தண்ணீரைத் தனியார் மயமாக்கும் உலக வங்கியின் திட்டத்தை விசுவாசமாகச் செயல்படுத்திய தென்னமெரிக்க நாடான பொலிவியாவின் அனுபவம், உலகின் ஏழைநாட்டு மக்கள் எதிர் கொண்டுள்ள பேரபாயத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தென்னமெரிக்காவின் மேற்குப் பகுதியில் பெரு, சிலி ஆகிய நாடுகளை அடுத்துள்ள ஏழை நாடுதான் பொலிவியா. உலக வங்கி, ஐ.எம்.எப், உலக வர்த்தகக் கழகம் எனும் முப்பெரும் நிறுவனங்களைக் கொண்டு ஏகாதிபத்திய வல்லரசுகளால் மறுகாலனியாக்கப்பட்டுள்ள, இராணுவ சர்வாதிகார ஆட்சியைக் கொண்ட நாடுதான் பொலிவியா. அந்நாட்டின் நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட உலக வங்கியிடமிருந்து 2.5 கோடி டாலர்களைக் கடனாகப் பெற்ற பொலிவிய ஆட்சியாளர்கள், அதன் நிபந்தனைப்படி நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான கோச்சபம்பா-வின் குடிநீர் வழங்கலை 1998-இல் தனியாருக்கு விற்றனர். குடிநீர் வழங்கலைத் தனியாருக்கு விற்கவும், அத்தனியார் நிறுவனம் கொள்ளையடிக்கும் வகையில் தண்ணீர் கட்டணத்தை உயர்த்தவும் நிபந்தனை விதித்த உலக வங்கி, இதை ஏற்க மறுத்தால் கடனுதவி நிறுத்தப்படும் என்றும் எச்சரித்தது. அதன்படியே "பெச்டெல்" என்ற அமெரிக்க ஏகபோக நிறுவனத்தின் துணை அமைப்பான "அகாஸ்டெல்" என்ற பன்னாட்டு நிறுவனத்துக்கு கோச்சபம்பா நகரின் குடிநீர் வழங்கும் பணி தாரை வார்க்கப்பட்டது. சுகாதாரமான குடிநீர், நம்பகத்தன்மை கொண்ட விநியோகம் என்ற மயக்கு மொழிகளால் இத்தனியார்மயம் மக்களை ஏமாற்றி திணிக்கப்பட்டது.

தண்ணீர் தனியார்மயமானதும் அடுத்த சில மாதங்களிலேயே இந்நிறுவனம் குடிநீர் கட்டணத்தை இரு மடங்காக உயர்த்தியது. ஓராண்டுக்குள் மேலும் பல மடங்கு கட்டணத்தை உயர்த்தியது. தண்ணீர் கட்டணம் மட்டும், குறைந்தபட்ச ஊதியம் பெறும் கூலித் தொழிலாளர்களின் தினக்கூலியில் பாதிக்கும் மேலானதாக இருந்தது. அவர்களது உணவுக்கான செலவை விட குடிநீருக்கான செலவு அதிகமானதாகியது. உலக வங்கியின் கடனுதவியைக் கொண்டு, குடிநீர் கட்டணத்தைக் குறைக்க நிதி ஒதுக்கி மானியம் கொடுக்கக் கூடாது என்று உலக வங்கி கட்டளையிட்டதால், கட்டண உயர்வின் சுமை அனைத்தும் மக்கள் தலையிலேயே சுமத்தப்பட்டது. ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடுத்தடுத்த நிர்பந்தங்களால் நாடு முழுவதுமான தண்ணீருக்கான ஏகபோக கட்டுப்பாட்டை தனியார் முதலாளிகளுக்கு அளிக்கும் சட்டத்தை பொலிவிய அரசு இயற்றியது. இச்சட்டப்படி சொந்த நிலத்தில் மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கும், பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கவும், மோட்டார் பம்ப் மூலம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தவும் கூட விவசாயிகள் கட்டணம் செலுத்தி உரிமம் பெற வேண்டும். இல்லையேல் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, இச்சட்டப்படி அவர்கள் கைது செய்யப்படுவர்.

தவிச்ச வாய்க்கு தண்ணீர் இல்லை; விவசாயத்துக்கும் தண்ணீர் இல்லை என்றால் குடி




மக்கள் எப்படி வாழ முடியும்? ஏற்கனவே மின்துறை, போக்குவரத்து மற்றும் கல்வி நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்துப் போராடி வரும் பொலிவிய மக்கள், தண்ணீரும் தனியார்மயமாகி தமது வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து இவ்வாண்டு தொடக்கத்திலிருந்தே பல போராட்டங்களை நடத்தினர். குறிப்பாக நகர்ப்புற மக்களோடு, கிராமப்புற விவசாய சங்கங்களும் தண்ணீருக்கான போராட்டத்தில் குதித்ததும், கடந்த ஏப்ரல் - மே மாதங்களில் அன்டேயன் பள்ளத்தாக்கு முழுவதுமே போராட்டத் தீ பற்றிப் படர்ந்தது.

விவசாயிகள் பெரும்படையாகத் திரண்டெழுந்து கோச்சபம்பா மற்றும் ஒருரோ நகரங்களில் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு அரசுப் பணிகளை முடக்கினர். அரசு வாகனங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். நாட்டை இணைக்கும் முதுகெலும்பு போன்ற தேசிய நெடுஞ்சாலைகளை முற்றுகையிட்டு தடையரண்களை அமைத்து, போக்குவரத்தைத் துண்டித்தனர். இராணுவ ஆட்சியாளர்கள் பீதியடைந்து அனைத்து போராட்டங்களைத் தடை செய்தும், வானொலி - தொலைக்காட்சிகளின் செயல்பாட்டை நிறுத்தி வைத்தும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினர். விவசாய சங்கப் போராளிகளையும் முன்னணியாளர்களையும் நூற்றுக் கணக்கில் கைது செய்து தொலைதூர தனிமைச் சிறைகளில் அடைத்தனர். ஆனாலும் மக்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. போராட்டப் பகுதியில் இராணுவத்தையும் அதிரடிப் படையையும் குவித்து துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைக் கொன்ற போதும், பொலிவிய மக்களின் போராட்ட உறுதியைக் குலைக்க முடியவில்லை. இராணுவத்துக்கு எதிராக, மக்கள் வீதிகளிலே வீரப்போர் புரிந்தனர். தண்ணீரை ஏகபோகமாக்கிக் கொண்டு கொள்ளையடித்து வந்த அமெரிக்காவின் "பெச்டேல்" நிறுவனத்தை நாட்டை விட்டே வெளியேற்றினர். பொலிவிய மக்களின் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் பணிந்த இராணுவ ஆட்சியாளர்கள், தண்ணீரைத் தனியார்மயமாக்கும் கொள்கையையும் சட்டங்களையும் ரத்து செய்வதாக அறிவித்த பின்னரே பொலிவிய மக்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

பொலிவிய மக்களின் போராட்டம் தனியார்மயத்துக்கும் நாட்டை மீண்டும் அடிமைப்படுத்தும் துரோகத்தனத்துக்கும் எதிரான போராட்டத்தில் கிடைத்த முதல் கட்ட வெற்றியே ஆகும். ஏழை நாட்டு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சிய முக்கிய நிகழ்வாகும். பொலிவியாவைப் போலவே, மெக்சிகோ, பிரேசில் முதலான தென்னமெரிக்க நாடுகளிலும் வாழ்வுரிமையைப் பறிக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டங்கள் மூண்டெழுகின்றன. மறுபுறம், பொலிவியாவின் வழியில் இந்தியாவிலும் தண்ணீரைத் தனியார்மயமாக்கிக் கொள்ளையிடவும் நாட்டை அடிமைப்படுத்தவும் ஏகாதிபத்தியங்கள் துடிக்கின்றன. குடிநீர் வழங்கலை மாநில அரசுகள் படிப்படியாக தனியாருக்கு கொடுத்து வருவது போதாது என்று, உலக தண்ணீர் அமைப்பின் முடிவுப்படி, நதிகளையும் ஏரிகளையும் பன்னாட்டு நிறுவனங்களிடம் கையளிக்க மைய அரசு முயற்சித்து வருகிறது.

தண்ணீரை ஆயுதமாகக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் இந்திய நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தி வாழ்வுரிமையைப் பறிக்குமா, அல்லது பொலிவியாவில் நடந்ததைப் போல் இங்கேயும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் விரட்டியடிக்கப்படுமா என்பது புரட்சியாளர்களின் தலைமையிலான உழைக்கும் மக்களின் உணர்வுபூர்வமான போராட்டங்களைப் பொருத்தே உள்ளது.

● பாலன்

**தண்ணீர் தனியார்மயமாக்கப்பட்டதை எதிர்த்து பொலிவிய மக்கள் நடத்திய ஆவேசப் போராட்டம்.**




படிப்பகம்

www.padippakam.com



# போலி சுதந்திரம் இதற்கென்ன கொண்டாட்டம்?

# தொடங்குவோம் புதியதோர் விடுதலைப் போராட்டம்

"நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!" என்ற மைய முழக்கத்துடன் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் இயங்கி வரும் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. இவ்வமைப்புகள், ஆகஸ்ட் 15 போலி சுதந்திர நாளை அம்பலப்படுத்தி தொடர்முழக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தமிழகத்தின் பல பகுதிகளில் போலி சுதந்திர நாளில் ஆர்ப்பாட்டம் நடத்த போலீசார் அனுமதி மறுத்த போதிலும், இப்புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம் உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

* மதுரையில், நேதாஜி சாலை - ஜான்சி ராணி பூங்கா அருகே ஆகஸ்டு 14-ந் தேதியன்று மாலை, போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதை விளக்கியும் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தின. ஆகஸ்டு 15 அன்று ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்த போலீசார், நீண்ட போராட்டத்திற்கு பின்னரே 14-ந் தேதியன்று அனுமதியளித்தனர்.

* திருப்பத்தூரில், தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்து தடை விதித்த நிலையில், இத்தடையை மீறி ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையம் அருகே போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி ஆர்ப்பாட்டத்தை நடத்தின. பீதியடைந்த போலீசார் முன்னணித் தோழர்கள் 12 பேரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். போலீசு நிலையம் வரை தோழர்கள் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும், நாடு மீண்டும் அடிமையாக்கப்படுவதை எதிர்த்தும் எழுச்சியோடு முழக்கமிட்டுச் சென்றனர். வழியெங்கும் மக்களிடம் இது பரபரப்பான பிரச்சாரமாகியது.

* கரூரில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதை விளக்கியும் ஆகஸ்ட் 12, 13 தேதிகளில் ரிக்சா வண்டியில் முழக்க தட்டிகள் வைத்து நகர வீதிகளில் பிரச்சாரம் செய்து தெரு முனைக் கூட்டங்களை பு.மா.இ.மு. நடத்தியது. தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாடும் மக்களும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு அடிமையாக்கப்பட்டு வருவதை விளக்கிய போது, "எந்தக் கட்சியும் இப்படி உண்மைகளைக் கூறியதில்லை; மாற்று வழியையும் முன்வைத்ததில்லை" என்று உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரித்தனர். 12, 13, 14, 15 ஆகிய நான்கு நாட்களுக்கு பிரச்சாரம் செய்ய நகர போலீசார் அனுமதி அளித்திருந்த போதிலும், மாவட்ட போலீசு உயரதிகாரிகள் பீதியடைந்து பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டத்துக்கு 14, 15 தேதிகளில் அனுமதி மறுத்தனர்.

* சென்னையில், ஆகஸ்டு 15-ந்தேதியன்று அம்பத்தூர் பேருந்து நிலையம் அருகே மாலை 4 மணி முதல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏறத்தாழ 100 பேர் பங்கேற்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி விண்ணதிர முழக்கமிட்டனர். ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் உலக மேலாதிக்க வெறியன் கிளிண்டன் போலவும், வாயைத் 'தேசிய'க் கொடியால் கட்டி கை - கால்களைக் கயிற்றால் முறுக்கிப் பிணைக்கப்பட்டு அடிமைகளாக தொழிலாளியும் விவசாயியும் அவலத்தில் தவிப்பது போலவும், கிளிண்டன் அவர்களை வதைப்பதைப் போலவும் ம.க.இ.க. தோழர்கள் வேடமிட்டு நடித்துக் காட்டினர். சிறப்புரையாற்றிய தோழர் சீனிவாசன், சுதேசி பேசும் இந்து வெறி ஆட்சியாளர்கள் நாட்டை ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு அடிமையாக்கி வருவதையும், வேலையிழந்து வாழ்விழந்து போராடும் மக்களை மிருகத்தனமாக ஒடுக்கி வருவதையும், அரசுத் துறை நிறுவனங்கள் மட்டுமின்றி விவசாயமும் நாசமாக்கப்பட்டு வருவதையும் எடுப்பாக விளக்கினார். போராடும் மக்களை ஒடுக்கும் ஆட்சியாளர்கள் சமூக விரோதி வீரப்பனிடம் மண்டியிடுவதைக் கூறி, ஆயுதமேந்திய சிறு கும்பலின் மிரட்டல் ஆட்சியாளர்களைப் பணியச் செய்யும் என்றால், ஆயுதமேந்திய மக்கள் திரள் எழுச்சியானது ஆளும் வர்க்கங்களையே ஒழித்துக் கட்டிவிடும் என்று மக்களை ஆயுதப் போராட்டப் பாதையில் திரள அறைகூவல் விடுத்தார். "இப்படியொரு தீர்வை இதுவரை எந்தக் கட்சியும் சொன்னதில்லை. முதன்முறையாக கேட்ட போதிலும் உங்கள் கருத்துக்கள் எங்களை உலுக்கிவிட்டது" என்று நிகழ்ச்சியைப் பார்த்த ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியது, புரட்சிகர அரசியலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

* ஈரோடு நகரில், பு.மா.இ.மு. நடத்த திட்டமிட்டிருந்த போலி சுதந்திர எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு போலீசார் அனுமதி மறுத்து தடை விதித்தனர். இதைக் கண்டித்து, "போலி சுதந்திரம்தான்! போலீசாரின் ஒப்புதல் வாக்குமூலம்!" என்ற தலைப்பிட்ட முழக்கங்களுடன் நூற்றுக் கணக்கான சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டன. அதைக்கூட காணச் சகியாமல் பேருந்து நிலையத்திலும், ஆட்சியாளர்கள் 'சுதந்திர' தினவிழாவைக் கொண்டாடிய வ.உ.சி. பூங்கா பகுதியிலும் போலீசாரே சுவரொட்டிகளைக் கிழித்தும், சுரண்டியும் விசுவாசக் கழுதையாக மேய்ந்தனர். ஆகஸ்ட் 15 அன்று ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதும் பு.மா.இ.மு.வினர் கருப்புத் துணி பட்டையுடன் நகரின் பல்வேறு பகுதிகளில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி முழங்கியபடியே சைக்கிள் பிரச்சாரத்தை மேற்கொண்டு ஆங்காங்கே தெரு முனைக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்தினர்.

* விக்கிரமசிங்கபுரத்தில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி, நகரெங்கும் பிரசுரங்களைக் கொடுத்துப் பிரச்சாரம் செய்யப்பட்டதோடு, சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. இப்பகுதியில் சாதாரண பொதுமக்கள் பிரச்

போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி திருச்சியில் நடந்த ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

சினைகளுக்காக வைக்கப்படும் தட்டிகளைக் கூட அடாவடித்தனமாக எடுத்துக் கொண்டு போய்விடும் போலீசு, போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை தேடிப் போய்க் கிழித்தெறிந்து, தங்களின் ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது.

✱ பென்னாகரம் பகுதியில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி ஆகஸ்டு 15 அன்று நடைபெற்ற தொடர் முழக்க ஆர்ப்பாட்டம், பொதுமக்கள் மத்தியில் 'மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஆர்ப்பாட்டத்தின் பொழுதே 18 தோழர்களைக் கைது செய்த போலீசு, இதுவரை இங்கு பேசப்பட்டதெல்லாம் உண்மை தான் என்று வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டது.

✱ திருச்சியில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி, ஆகஸ்டு 1 தொடங்கி ஆகஸ்டு 15 முடிய நகரெங்கும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆகஸ்டு 15 அன்று நடத்தத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு போலீசு அனுமதி அளிக்க மறுத்ததையடுத்து, "கருத்துரிமையை மறுத்து, இது போலி சுதந்திரம் என நிரூபித்த காவல்துறை ஆணையர் திரிபாதிக்கு நன்றி" என நகர போலீசைக் கிண்டலடித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கதிகலங்கிப் போன போலீசு, சுவரொட்டிகளைத் தேடித்தேடிப் போய்க் கிழித்தது. பின்னர் ஆகஸ்டு 21 அன்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி சைக்கிள் பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன.

✱ தேன்கனிக் கோட்டையில் நாடு மீண்டும் மறுகாலனியாக்கப்படுவதை விளக்கி, தெருமுனைக் கூட்டங்களும், பொதுக் கூட்டமும் நடைபெற்றன. இந்தக் கூட்டங்கள் நடந்த பொழுது, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கூடி நின்று புரட்சிகரக் கருத்துக்களை ஆர்வமாகக் கேட்டதோடு, நிதியுதவியும் அளித்து ஆதரவு தந்தனர்.

**தகவல்: ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு., தமிழ்நாடு**

# ஆட்சியாளர்களை நாறடித்த அதிரடிப் போராட்டம்

ஈரோடு - சூரம்பட்டியில் காலைக் கடனைக் கழிப்பதற்கு இருந்து வந்த, தண்ணீர் வசதியே இல்லாதிருந்த ஒரேயொரு பொதுக் கழிப்பிடத்தையும் பேரூராட்சி நிர்வாகம் அண்மையில் மூடிவிட்டது. இதனால் காலைக் கடனைக்கூட முடிக்க முடியாமல் உழைக்கும் மக்கள் - குறிப்பாக பெண்கள் பெரும் அவதிப்பட்டனர்.

இந்த அயோக்கியத்தனத்தைக் கண்டித்தும், கழிப்பிடத்தை உடனடியாக சுத்தம் செய்து புதுப்பித்துத் தரக்கோரியும் இப்பகுதியில் இயங்கும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும், மக்கள் மன்றமும் இணைந்து பேரூராட்சி முன்பு மனிதமலம் அள்ளிக் கொட்டும் போராட்டத்தை அறிவித்தன. 7.8.2000 அன்று நடக்கவிருந்த இப்போராட்டத்தை விளக்கி சுவரெழுத்து, விளம்பர தட்டிகள், துண்டுப் பிரசுரம், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் மக்களிடம் விரிவாகப் பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது.

இதனிடையே ஆகஸ்டு 5-ந் தேதியன்று சமரசப் பேச்சு வார்த்தைக்குப் போலீசார் அழைத்தனர். அதன்படி பேச்சு வார்த்தைக்கு போராட்ட கமிட்டியினர் சென்றபோது, பேரூராட்சித் தலைவரோ அதிகாரிகளோ வரவில்லை. அவர்கள் இல்லாமல் போலீசார் நடத்தும் சமரசப் பேச்சு வார்த்தைக்கு உடன்பட முடியாது என்று போராட்டக் கமிட்டியினர் திரும்பிவிட்டனர்.

ஆகஸ்டு 7-ந் தேதியன்று அதிகாலையிலேயே வீடு வீடாகச் சென்று போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து, மையமான இடத்தில் போராட்ட தட்டியை வைத்து, அங்கு மலத்தை ஒரு சாக்கில் கொட்டி அதனருகே ஊதுபத்தி கொளுத்தி வைத்து போராட்டக் குழுவினர் மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். சிறிது நேரத்தில் அங்கு வந்த போலீசார் மீண்டும் நைச்சியமாகப் பேச்சு வார்த்தைக்கு அழைத்த போது, அதிகாரிகளை இங்கே அழைத்து வாருங்கள் என்று போராட்டக் குழுவினர் உறுதியாக கூறியதால், வேறு வழியில்லாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து, 40 நாட்கள் அவகாசம் தருமாறு கோரினர். ஜெயலலிதா, கருணாநிதி போன்ற முதலமைச்சர்கள் செல்லுமிடமெல்லாம் அவர்களது சொந்த உபயோகத்திற்கு அவசரமாக கழிப்பறை கட்டித் தருவதுபோல், உடனடியாக போர்க்கால அடிப்படையில் கழிப்பறையைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று போராட்டக் குழு வலியுறுத்தியதும், அது எங்களால் முடியாது என்று அதிகாரிகள் மறுத்தனர்.

இதைத் தொடர்ந்து, மக்கள் கோரிக்கையை அலட்சியப்படுத்தும் அதிகார வர்க்கத்தை எதிர்த்து முழக்கமிட்ட உழைக்கும் மக்கள், போராட்டக் குழு தலைமையில் மலத்தை அள்ளி பேரூராட்சி முன் கொட்டும் போராட்டத்திற்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஆத்திரமடைந்த போலீசு, எல்லோரையும் கைது செய்து சிறையிலடைப்போம் என்று மிரட்டிப் பார்த்தது. ஆனால் இந்த சலசலப்புகளுக்கு அஞ்சாமல், பெண்கள் உள்ளிட்டு போராட்டத்திற்கு அணிதிரண்ட உழைக்கும் மக்கள் உறுதியுடன் நின்று போலீசுக்கு எதிராக முழங்கி ஊர்வலமாகப் புறப்பட ஆயத்தமானதும், பீதியடைந்த போலீசு அனைவரையும் கைது செய்தது. வழியெங்கும் மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கும் போலீசுக்கும் எதிராக முழக்கங்கள் எதிரொலிக்க, கைதானவர்களை போலீசார் ஒரு மண்டபத்தில் கொண்டு வந்து அடைத்தனர்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், "கழிப்பறை வசதி கோரிப் போராடியவர்கள் கைது!" என்று விபரங்களுடன் துண்டுப் பிரசுரம் அச்சிடப்பட்டு நகரெங்கும் விநியோகிக்கப்பட்டது. இத்துரித நடவடிக்கையால் மேலும் அம்பலப்பட்டுப்போன போலீசு, "இன்னும் 15 நாட்களில் உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்" என்று கூறி வழக்கு எதுவும் போடாமல் கைதான அனைவரையும் விடுதலை செய்தது. "இன்னும் 15 நாட்களில் கழிப்பறையை அமைத்துத் தராவிடில் பேரூராட்சி நிர்வாக அதிகாரி மற்றும் பேரூராட்சித் தலைவர் வீடுகள் முன் மலத்தைக் கொட்டுவோம்!" என்று எச்சரித்துவிட்டு போராட்டத்தில் பங்கேற்றவர்கள் திரும்பினர்.

இதற்கிடையில், சூரம்பட்டி பேரூராட்சித் தலைவரான சுப்பிரமணி (தி.மு.க.) இப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி அவதூறு செய்து ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு, அதை தனது "டாடா சுமோ" வாகனத்தில் இருந்தபடியே போராட்டம் நடந்த பகுதியில் வீசியெறிந்துவிட்டுப் போனார். இந்நடவடிக்கையால் அவர் மேலும் அம்பலப்பட்டு, மக்கள் இப்போராட்டத்தை ஆதரிக்க வலுவூட்டுவதாக அமைந்தது. போர்க் குணமிக்க இப்போராட்டத்தால் உணர்வு பெற்றுள்ள உழைக்கும் மக்கள் தமது உறுதியான ஆதரவை அளித்து வருவதோடு, அடுத்த கட்ட போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

பேரூராட்சி முன் மனித மலத்தைக் கொட்டி பு.மா.இ.மு. நடத்திய போராட்டம்.



— புரட்சிகர - மாணவர் இளைஞர் முன்னணி, ஈரோடு.

www.padippakam.com

# தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்:

# பலன் யாருக்கு?

''நடப்பு ஆண்டில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள சுமார் 1500 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்படும்; இதற்கென 2.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது'' - என தேனி மாவட்ட ஆட்சியரின் அறிவிப்பு எல்லா நாளேடுகளிலும் கடந்த ஜூன் மாத இறுதியில் வெளிவந்தது. மேலும், ''ஆண்டிப்பட்டி, மயிலாடும்பாறை ஒன்றியங்களில் சுமார் 5300 ஏக்கர் தரிசு நிலங்களும் படிப்படியாக மேம்படுத்தப்படும்'' என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மொத்தத்தில் ஏறத்தாழ 7000 ஏக்கர் தரிசுநிலம் விளைநிலமாக மாறினால் பலநூறு விவசாயிகளின் வாழ்வு மேம்படுமே! ஆயிரக் கணக்கான கூலி விவசாயிகளின் வயிற்றிலே பாலை வார்க்குமே! - என்று நாம் அதிசயித்துப் போனோம்.

அடுத்த சில நாட்களில், ''நெல்லை மாவட்டத்தில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்கள் 4 கோடி ரூபாய் செலவில் வரும் 2004-ஆம் ஆண்டிற்குள் மேம்படுத்தப்படும்'' என்று அம்மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பு நாளேடுகளில் வெளியானது. ''தரிசு நில மேம்பாட்டிற்கென தமிழகத்திற்கு 360 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைவிட இது 20 கோடி ரூபாய் அதிகமாகும்'' என்று மற்றொரு செய்தி, நாளேடுகளில் வெளிவந்தது.

அடடா! விவசாயிகள் மீது அரசாங்கத்துக்கு இவ்வளவு அக்கறையா? இப்போதாவது ஆட்சியாளர்கள் கண் திறந்து பார்த்தார்களே! - என்று இச்செய்திகளைப் பார்த்து சில விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இத்தனை காலமும் வறட்சியிலும் வறுமையிலும் தத்தளிக்கும் விவசாயிகளை ஏறெடுத்தும் பார்க்காத ஆட்சியாளர்களுக்கு இப்போது திடீரென விவசாயிகள் மீது கரிசனை வருவது ஏன்? என்று நமக்கு சந்தேகம் ஏற்பட்டது. தமிழகம் முழுவதும் நடந்து வரும் இத்திட்டத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவும், விவசாயிகளுக்கு இதனால் கிடைக்கும் பலன்களைப் பற்றி அறியவும் நாம் விசாரணையில் இறங்கினோம்.

பல விவசாயிகளிடம் நேரில் சந்தித்து இதுபற்றி கேட்டபோது, ஏறத்தாழ 99 சதவீத விவசாயிகளுக்கு இத்திட்ட அறிவிப்பு பற்றிய தகவலே தெரியவில்லை. தேனி அருகே தனது 5 ஏக்கர் தரிசு நிலத்துடன் வறுமையில் உழலும் செல்வராசு என்ற நடுத்தர விவசாயி, இத்திட்ட அறிவிப்புக்குப் பின் தான் மேற்கொண்ட முயற்சிகளையும் விளைவுகளையும் கதைபோல விவரித்தார்.

''உங்கள மாதிரி பேப்பர படிச்சிட்டுத்தான், நானும் சந்தோசத்துல ஓடிப்போயி வேளாண்மைத் துறை அதிகாரிங்களப் பாத்து கேட்டேன். அவுங்க, 'எங்களுக்கு முழு விபரம் தெரியாது; நபார்டு வங்கி (கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி) மூலமாகத்தான் இதைச் செய்யறாங்க; தேனி டவுன்ல இருக்குற கனரா வங்கியில இதுக்குன்னு ஒரு தனி அதிகாரி இருக்காரு; அவரப் போயி பாருங்க'' - அப்படின்னு சொன்னாங்க.

''தேனி டவுன்ல கனரா வங்கிய விசாரிச்சு கண்டுபிடிச்சு, உள்ள போயி மேனேஜரப் பார்க்க தவங்கிடந்து ஒரு வழியா பார்த்து விபரம் கேட்டேன். அவரு, எங்கே இருந்து வர்றீங்க? எவ்வளவு நிலம் இருக்கு? என்ன விவசாயம் செய்யுறீங்க? இந்த விவரத்த யாரு சொன்னாங்க? நீங்க மட்டும்தான் வந்தீங்களா? உங்ககூட விவசாயிங்க வந்திருக்காங்களா?' - அப்படி இப்படின்னு கால்மணி நேரம் கேள்வி கேட்டு தொனச்சு எடுத்தாரு. அப்புறம் ஒரு அதிகாரியைக் காட்டி, 'அவருகிட்ட போய் கேளுங்க' அப்படின்னாரு.

''அந்த தனி அதிகாரியும் மேனேஜர் மாதிரியே கேள்வி கேட்டு முடிச்சிட்டு, 'உங்க 5 ஏக்கர் நெலத்த மட்டும் மேம்படுத்த முடியாது; அப்படியே மேம்படுத்தினாலும் வாங்கின கடன உங்களால திருப்பி அடைக்க முடியாது' அப்படின்னுட்டாரு. நான் பேசாம திரும்பி வந்துட்டேன். அதெல்லாம் 30, 40 ஏக்கர் நிலம் வெச்சிருக்கவனுக்குத்தான் செய்வாங்களாம்'' என்று விரக்தியோடு கூறினார்.

தரிசு நிலத்துடன் தவிக்கும் சிறு விவசாயிகளுக்கு இத்திட்டத்தால் பலன் ஏதுமில்லை என்றால் அப்புறம் யாருக்குத்தான் இதனால் பலன்? விபரமறிய கனரா வங்கியிலுள்ள அந்த தனி அதிகாரியைச் சந்தித்தோம். குளிர்பதன அறையில் சொகுசு மெத்தையிலான நாற்காலியில் சாய்ந்து ஆடிக் கொண்டே அந்த அதிகாரி நம்மை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு ஆட்டத்தை நிறுத்திவிட்டு, ''சார்! இந்த திட்டத்தை கலெக்டர் ஆபீசுல இருந்து நேரடியா நடத்துறாங்க; இதுக்குன்னு ஒரு தனிக் கமிட்டி அமைச்சிருக்காங்க; நானும் அதில இருக்கேன். நீங்க என்ன செய்யணும்னா - எங்க ஊர்ல இவ்வளவு நிலம் தரிசா இருக்கு; அதை மேம்படுத்திக் கொடுங்க - அப்படின்னு ஒரு மனு எழுதிக் கொடுங்க - கமிட்டி கூட்டத்துல உங்க மனுவை நான் சிபாரிசு பண்றேன்'' என்றார்.

''அதுசரி. தரிசு நிலத்தை மேம்படுத்துறதுன்னா எப்படி? என்ன செய்வீங்க?'' என்று கேட்டோம்.

''இதுல ரெண்டு வகை திட்டம் இருக்கு சார். ஒண்ணு, வேளாண்மை பொறியியல் துறை மூலமாக மண் அரிப்பைத் தடுக்க தடுப்பு அணை கட்டுவது, சிறு குளம் வெட்டி மழை நீரைத் தேக்குவது. வறட்சியைத் தாங்கும் புளி, இலவு, கொட்டை முந்தி மரக்கன்றுகளை இலவசமாக தருவதுன்னு செய்வாங்க.

இன்னொரு திட்டம், நபார்டு வங்கி மூலமா நடக்குற இந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். மத்திய அரசின் நிதியுதவி மூலமா நடக்குற இந்தத் திட்டத்தால எல்லா விவசாயிகளும் பயன் பெறலாம். ஆனா, கடன் கொடுக்குற வங்கிகள், கடனைத் திருப்பி வசூலிக்க முடியாது என்பதால சிறு விவசாயிகளுக்கு கடன் தர மறுக்கிறாங்க. குறைந்தது 10 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ள விவசாயிங்கதான் இத்திட்டத்தால பயன்பெற முடியும். நீங்க சிறு விவசாயிகளா இருந்தா, 10-20 பேர் கூட்டா சேர்ந்து விவசாயம் செய்ய முன்வரணும். இப்படி தனிநபராகவோ, கூட்டாகவோ தரிசு நிலத்தை மேம்படுத்தி விவசாயம் செய்ய விரும்புகிறவர்கள், அதற்கான உத்தேச மதிப்புத் திட்டம் மற்றும் கடன் தொகை பற்றி விபரத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

இதன்பிறகு கமிட்டி அதிகாரிகள்

**தரிசாகக் கிடக்கும் தனது வயலைக் கண்டு வேதனையில் துவளும் சிறு விவசாயி.**





படிப்பகம்

உங்கள் நிலங்களைப் பார்வையிட்டு ஒப்புதல் அளித்த பிறகு, மேம்பாட்டு வேலைகள் தொடங்கும். அதாவது, மண் பரிசோதனை செய்து அதன் சத்துக்களுக்கு ஏற்ப பழமரங்கள், மலர் வகைக் கன்றுகள் - விதைகள்ள நாங்களே தருவோம். நிலத்தைச் சமப்படுத்தி, போர் போட்டு, சொட்டு நீர்பாசன வசதியும் செய்து தருவோம். இதற்காக ரூ. 1 லட்சம் முதல் ரூ. 2 கோடி வரை கடனாகப் பெறலாம். சிறு விவசாயிகள் கூட்டாக சேர்ந்து விவசாயம் செய்தால், பாதித் தொகையை மானியமாகத் தருகிறோம். மீதியை முதல் அறுவடையிலிருந்து தவணை முறையில் செலுத்த வேண்டும்'' என்று கூறி முடித்தார்.

''தரிசு நிலத்திற்கு நீர்ப்பாசனம்தான் முக்கிய பிரச்சினை; அதை மட்டும் செய்து கொடுத்துவிட்டால் விவசாயிகள் விரும்பியபடி காய்கறி, பயிறு வகைகளைப் பயிரிட்டுக் கொள்வார்களே! பழ மரங்கள், பூ வகைகளை மட்டும் ஏன் பயிரிடச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டதும், நம்மை ஏளனமாகப் பார்த்தார் அந்த தனி அதிகாரி.

''இன்னமும் கத்திரி, பீன்ஸ், வெண்டின்னு பேசுறீங்களே, கூலிக்காரனுக்கும் கமிசன் மண்டிக்காரனுக்கும்தான் இது லாபம்; விவசாயிக்கு என்ன இருக்குன்னு சொல்லுங்க? காலம் ரொம்ப மாறிகிட்டே இருக்கு சார். நம்ம விவசாயிங்கதான் அதப் புரிஞ்சிக்க மாட்டேன்கிறாங்க. அதனாலதான் நஷ்டத்துலேயே பொழப்பு ஓடுது. இந்த நெலமைய மாத்தணும்னுதான் நாங்க, வெளிநாடுகள்ல நல்ல கிராக்கியுள்ள பங்கனபள்ளி மாம்பழம், காலிபத்தி சப்போட்டா, கணேஷ்மாதுளை, பூ வகைகள் - இப்படி உயர்ரக கன்றுகளைக் கொடுக்கறோம். விற்பனைவாய்ப்புக்கும் நாங்களே உதவி செய்யறோம். ஏற்றுமதி தரமுள்ள பழங்கள் - மலர் பண்ணைகள்தான் சார். இன்னக்கி லாப உத்தரவாதமானது. இத விட்டுட்டு கத்திரி, கீரைன்னு போனா பைசா பிரயோசனம் கிடையாது சார். நீங்களே நல்லா யோசிச்சுப் பாருங்க!'' என்று கூறி முடித்துக் கொண்டார் அந்த அதிகாரி.

தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்கான நோக்கம் நமக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. தரிசை மேம்படுத்துவது என்ற பெயரில் ஏற்றுமதிக்குத் தேவையான பழங்கள் - மலர்கள் பண்ணைகளை விரிவாக உருவாக்குவதுதான் மைய - மாநில அரசுகளின் நோக்கம். இதற்கு இயல்பாகவே ஒத்துவராத சிறு விவசாயிகளை 'கடனைத் திருப்பி அடைக்க மாட்டார்கள்' என்ற காரணத்தைக் காட்டி எளிதாக ஒதுக்கி விடுகிறார்கள். 20, 30 ஏக்கர் நிலமுள்ள பெரும் பணக்கார விவசாயகளைக் குறிவைத்தே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயிர்க் கடனாக 5000 ரூபாய் தருவதற்கு ஓராயிரம் ஆதாரங்கள் கேட்கும் வங்கிகள், ஏற்றுமதிக்கான விவசாயத்திற்கு மட்டும் கோடிக் கணக்கில் கடன்களை வாரியிறைக்கின்றன. கடைசியில் இத்திட்டத்தினால் இலாபம் அடையப் போகிறவர்கள் பெரும் பணக்கார விவசாயிக்ளும், பன்னாட்டு ஏகபோக வேளாண் கம்பெனிகளும்தான். ஏகாதிபத்திய நாடுகளில் கிராக்கியுள்ள பழங்கள். மலர்கள், மூலிகைகளை நம் நிலத்தில் விளைய வைத்து, அதை அடிமாட்டு விலைக்குக் கொள்முதல் செய்து, உலகச் சந்தையில் கோடி கோடியாய் இலாபம் சுருட்டுவதும் இந்தப் பன்னாட்டு ஏகபோக வேளாண் கம்பெனிகள்தான்!

அன்று காலனிய ஆட்சிக் காலத்தில், தமது நாட்டின் சாயப்பட்டறைக்குத் தேவையாக இங்கே அவுரிச் செடிகளைப் பயிரிடுமாறு வெள்ளைக்காரன் கட்டாயப்படுத்தி விவசாயிகளையும் விவசாயத்தையும் நாசமாக்கினான். இன்று அதேபோல வெள்ளைக்காரன், ஜெர்மன், ஜப்பான், அமெரிக்காகாரன்களுக்கு எடுபிடியாக உள்ள ஆட்சியாளர்கள் விவசாயத்தையும் விவசாயிகளையும் புறக்கணித்துவிட்டு இறால் பண்ணை, தேக்குப் பண்ணை, பழப் பண்னணை, மலர்ப் பண்ணைகளை அமைத்து ஏகாதிபத்தியங்களுக்குத் தொண்டூழியம் செய்து வருகிறார்கள். விவசாயத் துறையில் நாடு மீண்டும் கால்னியாகும் போக்கு இப்படி வேகமாக நடந்து வருகிறது.

தமிழகத்தின் மொத்த சாகுபடி நிலப்பரப்பு 140 லட்சம் ஏக்கர். இதில் கிணற்றுப் பாசன வசதி பெற்ற நிலம் 30 லட்சம் ஏக்கர். காவிரிப் பாசனப்பரப்பு உட்பட மொத்த ஏரிப்பாசன வசதி பெற்ற நிலம் 25 லட்சம் ஏக்கர். மீதியுள்ள 85 லட்சம் ஏக்கர் விளைநிலமும் மானாவாரி நிலமாகவே உள்ளது. பருவமழைக் காலங்களைத் தவிர வருடத்தின் பெரும் பகுதியும் இந்நிலங்கள் தரிசாகவே கிடக்கின்றன. விவசாயிகள் பாடுபட தயாராக இருந்தாலும் முக்கியமாக நீர்ப்பாசன வசதியின்மையாலும், அதிகரித்துவரும் இடுபொருள் செலவு, விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமை, விவசாயிகளின் வறுமை ஆகிய காரணங்களாலும் தமிழகத்தின் பெரும்பான்மையான நிலங்கள் தரிசாகவே கிடக்கின்றன.

இதிலிருந்து தெரிவது என்ன? ஒரு விவசாயிக்கு சராசரியாக 2 ஏக்கர் நிலம் என்ற விகிதத்தில் பார்த்தால் சுமார் 40 லட்சம் விவசாயிகள் ஓட்டாண்டிகளாகி நிற்கிறார்கள்! ஒரு ஏக்கருக்கு 2 கூலி விவசாயிகள் என்ற விகிதத்தில் ஏறத்தாழ 1.5 கோடி கூலி விவசாயிக்ள் வேலை இழந்து கிராமங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்!

தரிசு நில மேம்பாடு என்பது நிலத்தையும், விவசாயத்தையும் வாழ்வையும் இழந்து நிற்கும் இந்த லட்சக் கணக்கான விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய ஆட்சியாளர்களோ பன்னாட்டு ஏகபோக வேளாண் கம்பெனிகளின் இலாப வெறிக்குத் தீனி போடுவதற்காகவே விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கி தரிசு நிலத்தை மேம்படுத்தி பழப்பண்ணைகள், மலர்ப் பண்ணைகளை அமைக்கத் துடிக்கிறார்கள். சர்வகட்சி ஆதரவுடன் இத்தகைய சதிகாரத் திட்டங்கள் நவீன விவசாயம் என்ற பெயரில் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இனியும் இத்தகைய மோசடிகளைக் கண்டு ஏமாந்து விதிவிட்ட வழி என்று விவசாயிகள் முடங்கிக் கிடக்க முடியாது. நமது நாட்டை அடிமைப்படுத்தி, விவசாயத்தை நாசமாக்கி உணவுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த வைக்கும் எத்தர்களை வீழ்த்தும் பெரும் புரட்சியில் இறங்காமல், விவசாயிகளின் வாழ்வு மேம்பாடு அடையவும் முடியாது.



**ஏற்றுமதி சார்ந்த நவீன விவசாயக் கொள்கையால் பலனடைந்து வரும் நவீன 'விவசாயி'.**

**தகவல்: மாறன்,**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**உத்தமபாளையம் வட்டம்.**

www.padippakam.com

# நீதிமன்றத்தின் பாசிசத் தாக்குதல்கள்

இந்தியா குடியரசாகி ஐம்பது ஆண்டுகள் ஆன பின்னரும், குடிதண்ணீர், சாலை போன்ற அடிப்படை வசதிகளைக் கூடப் போராடிப் பெற வேண்டிய அவலத்தில்தான் மக்களின் வாழ்க்கை உள்ளது. இந்த வசதிகளைப் பெறுவதற்காக, பொது மக்கள் தன்னெழுச்சியாக சாலை மறியலில் ஈடுபடுவதை இன்று தமிழகமெங்கும் பரவலாகக் காணலாம். எம்.எல்.ஏ.க்களைப் பார்த்துக் கூறுவது, அதிகாரிகளிடம் மனு கொடுத்துக் கெஞ்சுவது போன்ற வழிமுறைகளைவிட, சாலை மறியல் போன்ற வன்முறையற்ற, அமைதியான போராட்டங்களை நடத்துவதன் மூலம், தங்களின் தேவைகள் ஓரளவேனும் நிறைவேற்றப்படுவதை அவர்கள் அனுபவப்பூர்வமாகவே உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனால், ஆளுங் கட்சியும், அதிகார வர்க்கமும் நாடாளுமன்ற சனநாயக அமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப்போராட்ட வடிவங்களைக் கூடச் சகித்துக் கொள்ளுவதில்லை.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கல்லல் என்ற கிராமத்தில், இரண்டு மாதங்களுக்கு முன்பாக அக்கிராம பொது மக்கள் குடிதண்ணீர் வசதி கேட்டு, சி.பி.ஐ. கட்சி தலைமையின் கீழ் திரண்டு, சாலை மறியலில் ஈடுபட்டனர். பிரச்சினையைத் தீர்க்க வக்கற்ற போலீசும், நீதிமன்றமும் போரடிய கிராம மக்களின் மீது பிணையில் வெளிவர முடியாத வழக்குத் தொடுத்து சிறையில் தள்ளின. அக்கிராம மக்களை, கல்லலுக்கு அருகேயுள்ள சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்லாமல், கல்லலில் இருந்து வெகு தூரத்திலுள்ள வேலூர் சிறைச்சாலையில் அடைத்து, அதிகார வர்க்கம் தனது குரூரப் புத்தியையும் காட்டிக் கொண்டது.

தமிழக மின்வாரியத்தைச் சேர்ந்த ஒப்பந்த ஊழியர்கள், தங்களை நிரந்தரமாக்கக் கோரி, சென்னையில் உள்ள அண்ணாசாலையில் பிச்சையெடுப்பது போல ஊர்வலம் செல்ல முயன்றனர். ''இது போன்ற அநாகரீகப் போராட்டங்களை அனுமதிக்க முடியாது'' எனப் பொங்கி வெடித்தார் போலீசு கமிஷனர். நீதிமன்றமோ அத்தொழிலாளர்களைச் சிறையில் தள்ளும்படி உத்தரவிட்டது. இது போன்ற போராட்டம் தொழிலாளர்களைக் கேவலப்படுத்துவது உண்மைதான். ஆனால், நாடெங்கும் நாள்தோறும் பிச்சைக்காரர்களை உருவாக்கிவரும் அநாகரீக ஆளும் கும்பலுக்கு, தொழிலாளர்களுக்கு நாகரீகம் பற்றிப் போதிக்க என்ன யோக்கியதை இருக்கிறது?

பொது மக்கள் தங்களின் தேவைகளைக் கோரிப் பெறுவதற்கும், தங்களின் வாழ்வுரிமைகளைப் பறிக்கும் அரசின் கொள்கைகளை எதிர்ப்பதற்கும் இருந்து வரும் சட்டபூர்வ வழிகள் கூட ஒவ்வொன்றாக மறுக்கப்படுகின்றன. போக்குவரத்துப் பாதிக்கப்படுவதாகக் கூறி, நகரின் மக்கள் மிகுந்த முக்கியப் பகுதிகளில் ஊர்வலம் நட்த்துவதைத் தடை செய்துவிட வேண்டும் என போலீசும், நீதிமன்றமும், பத்திரிகைகளும் கூட்டணி கட்டிக் கொண்டு திரிகின்றன. சாலை மறியலில் ஈடுபடுபவர்களைச் சிறையில் தள்ளுவோம் எனப் பீதியூட்டுவதன் மூலம் பொதுமக்கள் சாதாரண கோரிக்கைகளுக்காகப் போராட முன் வருவதைக் கூடத் தடுத்துவிடலாம் என போலீசும் நீதிமன்றமும் மனப்பால் குடிக்கின்றன.

சென்னையில், சட்டசபை முன்பாகவோ கடற்கரைச் சாலையிலோ உண்ணாவிரதப் போராட்டம் கூட நடத்துவதற்கு அனுமதி கிடையாது. தமிழ்நாட்டில், புரட்சிகர இயக்கங்கள் பொதுக் கூட்டம்/ஊர்வலம் நடத்துவதற்குக் கூட போலீசை எதிர்த்து உயர்நீதி மன்றத்தை அணுக வேண்டியிருக்கிறது. உயர்நீதி மன்றம் தன் பங்குக்கு பொதுக் கூட்டங்களில் இதைத்தான் பேசவேண்டும்/ இப்படிதான் பேச வேண்டும் என உத்தரவிட்டு, பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமையையே கேலிக் கூத்தாக்கி விடுகிறது.

மக்கள் கலை இலக்கியக் கழகம், தொழிலாளர் தினத்தையொட்டி, நாடு மறுகாலனியாக்கப்படுவதை எதிர்த்து தருமபுரியில் பேரணி மற்றும் பொதுக் கூட்டமொன்றை நடத்தியது. இதற்கு அனுமதியளித்த சென்னை உயர்நீதி மன்றம் போலீசை எதிர்த்து எதுவும் பேசக் கூடாது என உத்தரவிட்டது.

அந்தச் சமயத்தில், தருமபுரி பகுதியில் நக்சல்பாரி புரட்சியாளர்களை ஒடுக்குவது என்ற பெயரில், தமிழக போலீசார் அரசு பயங்கரவாதத்தை ஏவி மக்களைப் பீதியூட்டி வந்ததோடு, உழவர் உழைப்பாளர் மாமன்றத்தைச் சேர்ந்த தோழர் ரவீந்திரனைச் சட்ட விரோதக் காவலில் வைத்து, சித்திரவதை செய்து, சுட்டுக் கொன்றனர். தமிழகப் போலீசின் இந்த மனித உரிமை மீறல்கள் மக்கள் மத்தியில் மேலும் அம்பலப்பட்டு போய்விடக் கூடாது என்பதற்காகவே, நீதிமன்றம் மக்கள் கலை இலக்கியக் கழகத்திற்கு வாய்ப்பூட்டு போட்டது.

முற்போக்கு இளைஞர் அணியினர் தோழர் ரவீந்திரனின் தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இதற்கு போலீசு அனுமதி அளிக்க மறுத்து வந்தது. போலீசின் தடையை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கைப் பல மாதங்களாக இழுத்தடித்து வந்த சென்னை உயர்நீதி மன்றம், ஆகஸ்டு 22 அன்று ஊர்வலம் நடத்திக் கொள்ள அனுமதித்தது. அதேசமயம், ''இது. அமைதி ஊர்வலமாகத்தான் நடத்தப்பட வேண்டும்; ஊர்வலத்தில் எவ்வித முழக்கமும் போடக் கூடாது; ஊர்வலம் காலை 9 மணிக்குத் தொடங்கி 11 மணிக்குள் முடிய வேண்டும்; பொதுப்பட்டி கிராமத்தில் தொடங்கி, மாதம் கிராமத்தின் வழியாக பென்னாகரம் பேருந்து நிலையத்தை அடைய வேண்டும். சாலையின் இடதுபுறம் ஊர்வலம் வர வேண்டும். ஊர்வலத்தினர் சட்டைப் பையில் கருப்புத் துணி குத்திக் கொண்டு, ரவீந்திரனின் படத்தை எடுத்து வரலாம். இது தவிர, ஊர்வலத்தினர் கொடி, முழக்க அட்டைகளை மட்டுமல்ல, துணிப்பையைக் கூடத் தூக்கி வரக்கூடாது'' எனப் பல தடைகளை விதித்தது. ஊர்வலம் நடத்துவதின் நோக்கத்தையே இவைச் சிதைத்துவிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. உயர் நீதி மன்றம் போலீசுக்கு இப்படி பாதுகாப்பு அளித்ததோடு மட்டும் நிற்கவில்லை; ஊர்வலத்தை ''வீடியோ''படம் எடுத்துக் கொள்ள போலீசுக்கு அனுமதியளித்து, ஆள்காட்டியாகவும் வேலை செய்தது.

போலீசு - நீதிமன்றக் கூட்டணியால், மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ உரிமைகள் பறிக்கப்படுவது அல்லது முடக்கப்படுவது தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவெங்கிலுமே நடந்து வருகிறது. மேற்கு வங்க மாநிலத்தில் பொது இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதைத் தடை செய்யக் கோரும் மனுவொன்றை கல்கத்தா உயர்நீதி மன்றம் விசாரித்து வருகிறது; தில்லி உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தில்லி போலீசார் தில்லியில் ஊர்வலங்கள் / ஆர்ப்பாட்டங்களை காலையில் 11 மணிக்கு மேல் மாலையில் ஐந்து மணிக்குள்தான் நடத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர். இந்த உத்தரவின்படி தில்லி நகரைச் சேர்ந்த தொழிலாளர்கள்/ ஊழியர்கள், தங்களின் வேலை நேரம்


படிப்பகம்

www.padippakam.com

முடிந்த பிறகு, தங்களின் கோரிக்கைகளுக்காகப் போராட முடியாது;

ஊர்வலத்தை வெளிப்படையாக/முற்றிலுமாகத் தடை செய்யாத அதேசமயம், மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் மாலை நேரத்தில், தொழிலாளர்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்து ஊர்வலம் நடத்துவதைத் தடுத்துவிட வேண்டும் என்ற குறுக்குப் புத்திதான் தில்லி உயர்நீதி மன்றம் தூண்டிவிட்டு, தில்லி போலீசு அமலாக்கி வரும் இந்த உத்தரவில் வெளிப்பட்டுள்ளது.


மேலும், தில்லியில் அரசியல் கட்சிகள், தொழிலாளர் சங்கங்கள் உள்ளிட்டு பல்வேறு அமைப்புகளும் நாடாளுமன்றத்தை நோக்கி ஊர்வலம் செல்லுவதற்குப் பயன்படுத்தி வந்த ''போட் கிளப்'' மைதானத்தை, கடந்த ஏழாண்டுகளாக எந்தவொரு அமைப்பும் தங்களின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாதபடி தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, ஒரு கோரிக்கை மனு கொடுப்பதற்குக் கூட, எந்தவொரு அமைப்பும் நாடாளுமன்றத்தின் அருகே ஊர்வலம் நடத்தமுடியாது. இதேபோல, எல்லா மாநிலங்களின் சட்ட சபைகளுக்கு அருகாமையில், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு 144 தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்து இந்தியா வெங்கும் ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்து வரும் நிலையில்தான், பொது இடங்களில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம் நடத்துவதற்கான உரிமை முடக்கப்படுகிறது; அல்லது, முற்றிலும் மறுக்கப்படுகிறது என்பதை நாம் இங்கு கவனத்தில் கொள்வோம்.

நாடாளுமன்ற சனநாயக அமைப்பில் இத்தகைய உரிமைகள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகளைக் காக்கும் பொறுப்பும், கடமையும் நீதிமன்றத்திற்கு உண்டு என்றும் கூறப்படுகிறது. ஆனால், இந்திய நீதிமன்றங்களின் யோக்கியதையோ வேலியே பயிரை மேய்ந்த கதை போலாகிவிட்டது. இதற்கு இன்னும் ஆதாரம் வேண்டும் என்றால், கேரள உயர்நீதி மன்றம் அளித்துள்ள இரு தீர்ப்புகளையும், அவற்றுள் ஒன்றை உச்சநீதி மன்றம் அங்கீகரித்திருப்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு கேரள உயர் நீதி மன்றம், ''எந்தவொரு அமைப்போ, சங்கமோ அல்லது அரசியல் கட்சியோ 'பந்த்'திற்கு அழைப்பு விடுப்பதும், அதனை அமல்படுத்துவதும் சட்ட விரோதமானது; அரசியல் சாசனத்திற்கு எதிரானது'' என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து 'மார்க்சிஸ்டு' கட்சி உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், கேரள உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை உச்சநீதி மன்றம் அங்கீகரித்தது.

கடந்த ஜூன் 1 அன்று கேரள உயர்நீதி மன்றம் அளித்துள்ள மற்றொரு தீர்ப்பில், ''கட்டாயப்படுத்தியோ, மிரட்டியோ, தூண்டிவிட்டோ நடத்தப்படும் 'ஹர்த்தால்' அரசியல் சாசனத்திற்கு எதிரானது; இப்படிப்பட்ட 'ஹர்த்தால்'களை நடத்தும் அரசியல் கட்சிகளின் பதிவினை, தேர்தல் ஆணையம் ரத்து செய்யலாம்'' என்று குறிப்பிட்டுள்ளது.




இத்தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் ஆணையம், ''உங்கள் பதிவினை ஏன் ரத்து செய்யக் கூடாது'' எனக் கேட்டு 'மார்க்சிஸ்டு' கட்சிக்கு நோட்டீசு அனுப்பியிருக்கிறது.

''பந்த்'', ''ஹர்த்தால்'' என்ற இரு சொற்களால் குறிக்கப்படும் போராட்டங்கள், ஏறத்தாழ ஒரே மாதிரியான தன்மை கொண்டவைதான். ஆனாலும், கேரள உயர் நீதி மன்றம் ''பந்த்''ம், ஹர்த்தால் அல்லது பொது வேலை நிறுத்தம் என்பதும் வேறானவை என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. ''மேலும், ஹர்த்தாலை பேச்சுரிமை, கருத்துரிமையின் ஒரு பகுதியாகக் கருத முடியும்; பந்தை அவ்வாறு கருத முடியாது'' என்றும் கூறியிருக்கிறது.

ஹர்த்தால் என்பது ''ஒத்துழையாமை'' என்ற அமைதியான நடவடிக்கை. வன்முறையற்ற எதிர்ப்பு இயக்கம், வலுக்கட்டாயமாகத் தூண்டிவிடப்படாத அறைகூவல் என்று வரையறுத்துள்ளது. அதேசமயம், ஹர்த்தால், வலுக்கட்டாயமாகத் தூண்டிவிடப்பட்டால், அதை ஹர்த்தால் என்று கூற முடியாது; அதுவும் பந்தைப் போன்றதுதான் என்று விளக்கமளித்துள்ளது. மீசை வைத்தால் வீரன்; மீசையை எடுத்தால் ஞானி என்பது போல இருக்கிறது நீதிமன்றத்தின் விளக்கம். இந்த இரு போராட்டங்களுக்கும் தெளிவான வரையறையைச் சொல்லாமல் விட்டிருப்பது, கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும் தந்திரக்காரனின் புத்தியைத்தான் காட்டுகிறது.

இது ஒருபுறமிருக்க, ''பந்த்''-ஐயும், கட்டாயப்படுத்தி நடத்தப்படும் ''ஹர்த்தாலை''யும் தடை செய்வதற்கு நீதி மன்றம் கூறியிருக்கும் காரணங்கள்தான் பரிசீலனைக்குரியவை. இவை இரண்டும் நாட்டின் உற்பத்திக்கு ஊறு விளைவிப்பதால், நாட்டின் நலனுக்கு ஏற்றதல்ல என்ற வழமையான குற்றச்சாட்டைக் கூறி விட்டு, அதனால் இந்தப் போராட்டங்களை நடத்தும் அமைப்புகள் நாட்டின் சுயாதிபத்தியத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எதிரானவை என்று குறிப்பிட்டிருக்கிறது. இத்தகைய நாட்டின் நலனுக்கு எதிரான போராட்டங்களை நடத்துவதைவிட, சட்டமன்றம், நீதிமன்றம் போன்ற சட்டபூர்வ வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைச் சாதிக்கலாம் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு உண்மையிலேயே அச்சுறுத்தலாக இருப்பது டாடா, பிர்லா போன்ற தரகு முதலாளிகளும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளும், ஓட்டுக் கட்சித் தலைவர்களும் சட்ட விரோதமான வழிகளில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குவித்து வைத்திருக்கும் கருப்புப் பண பொருளாதாரம்தான்!

இந்தப் பெரும்புள்ளிகள் தங்களின் கருப்புப் பணத்தையும், சொத்துக்களையும் சட்டபூர்வ வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்ள ''வீ.டி.ஐ.எஸ்'' (VDIS) என்ற

www.padippakam.com

பெயரில் வழி ஏற்படுத்திக் கொடுத்தது மைய அரசு. உழைக்கும் மக்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்காக நடத்தி வரும் கதவடைப்புப் போராட்டங்களை நாட்டு நலனுக்கு எதிரானது என்று அவதூறு செய்து தடை செய்யும் 'நீதி'யரசர்கள், கருப்புப் பணக் கும்பலுக்கு அடிபணிந்து, மைய அரசு அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியதைக் கண்டு கொள்ளாதது ஏன்? "நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டிருக்கின்றனவே" என்று சல்ஜாப்பு சொல்லாதீர்கள், ஐயா!

கதவடைப்புப் போராட்டங்களை நடத்தும் இயக்கங்கள் இந்தியாவின் சுயாதிபத்தியத்துக்கு எதிரானவை என்பது இரண்டாவது குற்றச்சாட்டு. சொல்லிக் கொள்ளப்படும் இந்த சுயாதிபத்தியத்தைக் குழி பறிப்பது கதவடைப்புப் போராட்டமா? இல்லை, தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டணியா? சமூக அக்கறையும், நாணயம் கொண்ட எவரும் மைய - மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம்தான் சுயாதிபத்தியத்துக்கு எதிரானது என்பதை ஒப்புக் கொள்வார்கள். தாராளமயம் என்ற பெயரில் நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு எதிராக நாடு தழுவிய அளவில் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் வெடித்து விடக் கூடாது என்ற ஏகாதிபத்திய விசுவாசத்தின் காரணமாகத்தான் நீதிமன்றம், கதவடைப்புப் போராட்டங்களைத் தடை செய்து உத்தரவு போட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான இந்தியர்களை ஒரே நாளில் மூச்சுத் திணறடித்துக் கொன்ற, இலட்சக்கணக்கானவர்களை முடமாக்கிய போபால் விஷவாயு விபத்து வழக்கில், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான யூனியன் கார்பைடுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிய இந்திய நீதிமன்றங்களுக்கு, இந்த நாட்டின் சுயாதிபத்தியம் பற்றிக் கவலைப்பட என்ன யோக்கியதை இருக்கிறது?

இந்தக் கதவடைப்புப் போராட்டங்கள், அதில் கலந்து கொள்ள விரும்பாதவர்கள் மீது திணிக்கப்படும் பொழுது, அது, அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. அதனால்தான் பந்தையும், தூண்டிவிடப்பட்டு நடத்தப்படும் ஹர்த்தாலையும் தடை செய்வதாகக் கூறி, தன்னைச் சிறுபான்மையினர் உரிமையைப் பாதுகாக்கும் ஜனநாயகத்தின் காவலனைப் போல காட்டிக் கொள்கிறது, நீதிமன்றம்.



**வீரப்பனின் கூட்டாளிகள் என்ற குற்றச்சாட்டு நிரூபணமாகும் முன்பே, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு வரும் அப்பாவி மலைவாழ் மக்கள்.**

எப்படிபட்ட சமயத்திலும், ஒரு நாட்டில் நடக்கும் போராட்டத்தை அந்த நாட்டின் குடிமக்கள் அனைவரும் ஆதரித்துவிட மாட்டார்கள். மேலும், எந்தவொரு போராட்டத்தையும், இதனை இத்தனை பேர் ஆதரிக்கிறார்கள்; இத்தனை பேர் எதிர்க்கிறார்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டெல்லாம் ஆரம்பிக்க முடியாது. ஒரு போராட்டம் சரியா? தவறா? என்பதை அந்தப் போராட்டத்தின் நியாயத்தை வைத்துதான் தீர்மானிக்க முடியும்.

ஒரு உதாரணத்திற்குச் சொன்னால், ஆந்திர மாநிலத்தில் நடைபெற்று வரும் மின்கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டத்தை பெருவாரியான மக்கள் ஆதரிக்கும் அதேசமயம், தாராளமயத்தை ஆதரிக்கும் சந்திரபாபு நாயுடு, தரகு முதலாளிகள் ஆகியோர் எதிர்க்கின்றனர்.

இந்தப் பிரச்சினைக்காக ஆந்திர மாநில மக்கள் நடத்தும் போராட்டங்கள் அனைத்துமே, தாராளமயத்தை ஆதரிப்பவர்களின் விருப்பத்திற்கு எதிராக, ஜனநாயக உரிமைகளை 'மீறுவதாகவே' இருக்கும். இதைக் கொண்டு பார்க்கும் பொழுது, பந்த்/தூண்டிவிடப்பட்ட ஹர்த்தாலைத் தடை செய்து கேரள உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு, தாராளமயத்தை எதிர்த்து தங்களின் வாழ்வுரிமைக்காகப் போராடும் உழைக்கும் மக்களுக்கு எதிரானதாகவும், தாராளமயத்தை ஆதரிக்கும் தரகு முதலாளிகளுக்குச் சாதகமாகத்தான் இருக்க முடியும்.

இந்திய நீதிமன்றங்கள், உழைக்கும் மக்களின் போராட்ட உரிமைகளைப் பறிப்பதோடு மட்டும் நின்று விடவில்லை; அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்டபூர்வ உரிமைகளையும் தட்டிப் பறித்து விடுவதிலும் முன்னணியில் உள்ளன. வீரப்பனின் கூட்டாளிகள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் மைசூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் "தடா" கைதிகளைப் பிணையில் விடுவதைத் தடை செய்து, உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பை, இதற்குப் பச்சையான உதாரணமாக் காட்டலாம்.

"கடந்த எட்டு ஆண்டுகளாக வீரப்பனைப் பிடிக்காமல் என்ன செய்தீர்கள்?" என்று கிடுக்கிப் போட்டு, இந்தக் கைதிகளின் பிணையை மறுத்திருக்கிறது, உச்சநீதி மன்றம். அதாவது, "ஒரு கிரிமினலின் மிரட்டலுக்குப் பயந்து கொண்டு இவர்களுக்குப் பிணை வழங்க முடியாது; சட்டப்படிதான் நடந்து கொள்ள வேண்டும்" என்பதுதான் உச்சநீதி மன்றத்தின் வாதம். சட்டத்துக்காக வக்காலத்து வாங்கும் இவர்கள்தான், இந்தக் கைதிகள் விவகாரத்தில் எல்லாவித சட்டங்களையும் குழி தோண்டி புதைத்து இருக்கிறார்கள்.

போலீசு கண்காணிப்பாளர் ஹரி கிருஷ்ணா, ஆய்வாளர் ஷகீல் அகமது உள்ளிட்ட 29 போலீசாரை வீரப்பன் படுகொலை செய்ததற்கு உதவியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில்தான், இவர்கள் "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம், "அந்தக் கொலை பயங்கரவாதக் குற்றத்தின் கீழ் வராது; இந்த வழக்கிற்கு தடா சட்டம் பொருந்தாது" என்றுதான் தீர்ப்பளித்தது. முன்னாள் இந்தியப் பிரதமரின் படுகொலைக்கே பொருந்தாத "தடா" சட்டம், சாதாரண போலீசுக்காரன்களைக் கொலை செய்தவனுக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எப்படி பொருந்தும் என்ற நியாயமான கேள்வி உச்சநீதி மன்ற நீதிபதிகள் மண்டையில் எழவில்லை.

"தடா" சட்டம் இவர்களுக்குப் பொருந்தும் எனக் கொண்டாலும், "தடா" வழக்குகள் தொடர்பாக 1998-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பின்படியே இவர்களைப் பிணையில் விடுவதற்கு எவ்விதத் தடையும் கிடையாது. அந்தத் தீர்ப்பில், உச்சநீதி மன்றம் தடா கைதிகளை மூன்றாகப் பிரித்து, குற்றத்தில் மிகச் சிறிய பங்காற்றியவர்கள் மூன்று வருடம் சிறையில் இருந்தால், முக்கியப் பங்காற்றியவர்கள் ஐந்து வருடம் சிறையில் இருந்தால் அவர்களைப் பிணையில் விடலாம் என்று



படிப்பகம்

www.padippakam.com

உத்தரவிட்டிருந்தது.

தற்பொழுது பிணை மறுக்கப்பட்டுள்ள 51 பேரும், குற்றப்பத்திரிகைபடி பார்த்தால் கூட வீரப்பனுக்கு உதவியவர்கள்தான்; இவர்கள், இந்தக் குற்றத்திற்காக கடந்த எட்டு ஆண்டுகளாகச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். வீரப்பனின் கூட்டாளிகள் என்று "தடா" சட்டத்தில் கைது செய்யப்பட்ட 121 பேரில், ஏற்கனவே 70 பேருக்கு உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி பிணை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால், இந்த 51 பேரையும் பிணையில் விடுவதற்கு எந்தச் சட்டச் சிக்கலும் கிடையாது. ஆனாலும், உச்சநீதி மன்றம், தான் எழுதிய தீர்ப்புகளுக்கு முரணாக, அதிகாரக் கொழுப்பெடுத்துப் போய், இவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையைக் காலவரையின்றி ரத்து செய்துவிட்டது.

"இவர்கள் அனைவரும் கிராமப்புறத்தைச் சேர்ந்த அப்பாவிகள் என்பதற்கான ஆதாரங்களைத் தொகுத்து, "தடா" சட்டத்தின் கீழ் இவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாது; இவர்களைப் பிணையில் விட வேண்டும்" எனக் கோரி "பி.யூ.சி.எல்.," "பீப்பிள்ஸ் வாட்ச்" என்ற இரு மனித உரிமை அமைப்புகள் ஏற்கனவே வழக்கு தொடுத்திருந்தன. அந்த வழக்கை விசாரிக்காமல் இழுத்தடித்த தடா சிறப்பு நீதிமன்றம், 1999-ஆம் ஆண்டு இறுதியில், "பாதுகாப்பான கட்டிட வசதி இல்லாததால், விசாரணை நடத்த முடியாது" எனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது. அற்பமான காரணத்தைக் காட்டி விசாரணை நடத்தாமல், குற்றவாளிகள் என நிரூபிக்கப்படுவதற்கு முன்பே இவர்களைச் சட்ட விரோதமாகத் தண்டித்து வரும் இந்திய நீதிமன்றங்களுக்கு, சட்டம், நீதி, நியாயம், மனித உரிமை பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது?

"தடா" சட்டம் 1995-ஆம் ஆண்டே காலாவதியாகிப் போய்விட்டது. ஆயிரக்கணக்கான அப்பாவிகள் மீதுதான் தடா சட்டம் போலீசாரால் ஏவிவிடப்பட்டது என்பதும் ஏற்கனவே நிரூபணமாகியுள்ளது. உண்மை இப்படியிருக்கையில், காலாவதியாகப் போன இந்த "தடா" சட்டத்தைப் பயன்படுத்தி, இந்த அப்பாவிகளைப் பழிவாங்கி வரும் நீதிமன்றத்தின் குரூரத்தை என்னவென்பது? போலீசுக்கும், நீதிமன்றங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

"தடா" சட்டத்தை மட்டுமா? இந்திய மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் தேசியப் பாதுகாப்புச் சட்டம், கலவரப் பகுதிச் சட்டம், ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு கருப்புச் சட்டங்களையும் இந்திய நீதிமன்றங்கள் ஆதரித்தே வந்துள்ளன. இப்படி சட்டபூர்வமாகவே பாசிசம் திணிக்கப்படுவதற்குத் துணைபோகும் இந்திய நீதிமன்றங்களிடம், இந்திய உழைக்கும் மக்கள் நீதியையும், ஜனநாயகத்தையும் எதிர்பார்க்கவே முடியாது!

● செல்வம்

# அச்சுறுத்தும் நவீன நாஜிகளை எச்சரிக்கும் மக்கள் போராட்டம்

இந்தியக் கணினி தொழில் நுட்ப வாதிகளுக்கு மேலை நாடுகளில் ஏராளமான வேலை வாய்ப்புகள் காத்திருப்பதாக பத்திரிகைகள் கதைத்துவரும் அதேவேளையில், ஜெர்மனிக்கு வேலைக்குச் சென்ற இந்தியக் கணினி மென்பொருள் தொழில் நுட்ப.வாதிகள், அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்திலும் பீதியிலும் நடமாடுகின்றனர்.

கடந்த ஜூலை மாதத்தில் ஜெர்மனியின் லீப்சிக் நகரில் வேலைக்குச் சேர்ந்த ஒரு இந்தியக் கணினிப் பொறியியலாளர், நள்ளிரவில் தனது பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடிவிட்டு பொதுத் தொலைபேசிக் கூண்டைவிட்டு வெளியே வந்த போது, மொட்டைத் தலையுடன் அவரைச் சூழ்ந்த இளைஞர்கள் குண்டாந்தடிகளால் அவரைத் தாக்கி, தமது நாய்களையும் அவர் மீது ஏவி விட்டனர். அலறியடித்துக் கொண்டு தப்பியோடிய அவர் எப்படியோ தனது குடியிருப்புக்குப் போய்ச் சேர்ந்தார். மற்றொரு இந்தியத் தொழில்நுட்பவாதி வேலை முடிந்து இரவில் தனியே திரும்பிக் கொண்டிருந்தபோது, மொட்டைத் தலை இளைஞர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தாக்கி மண்டையை உடைத்தனர். சிறிது நேரத்தில் அங்கு போலீசு ரோந்து வந்ததால் குண்டர்கள் தப்பியோடி விட்டனர். இல்லையேல் அவர் கொல்லப்பட்டிருப்பார். கடந்த ஜூலையில் மட்டும் ஜெர்மனியில் குடியேறிய இந்தியர்கள் மீது 5 தாக்குதல் சம்பவங்களும், 20-க்கும் மேற்பட்ட இடங்களில் அவமானப்படுத்தல் - அச்சுறுத்தல்களும் நடந்துள்ளதாக இந்தியத் தூதரக அதிகாரியே ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்தியர்கள் மட்டுமல்ல; ஆப்பிரிக்க கறுப்பினத்தவர், ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள், யூதர்கள் என அந்நியர்கள் அனைவருமே மொட்டைத் தலை ஜெர்மானிய இளைஞர்களால் தாக்கப்படுகின்றனர். அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாக வந்தவர்கள் தாக்கப்படுவதோடு, அவர்களது குடியிருப்புகளும் சூறையாடப்பட்டு தீயிடப்படுகின்றன. மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த கறுப்பினத் தொழிலாளியை மூன்று ஜெர்மானிய இளைஞர்கள் தாக்கி, இரும்புப் பட்டை கொண்ட தமது காலணியால் அவரது தலையை மாறி மாறி உதைத்து அண்மையில் கொன்றொழித்துள்ளனர். ஜூலை கடைசி வாரத்தில் டஸ்ஸல்டோர்ஃப் நகரில் நடந்த குண்டு வெடிப்பில் 10 யூதர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அண்மையில் கிழக்கு ஜெர்மனியிலுள்ள ஐசெனாக் ரயில் நிலையம் அருகே நூற்றுக் கணக்கில் திரண்ட மொட்டைத் தலை இளைஞர்கள், "ஜெர்மனி ஜெர்மானியருக்கே!" "வெளிநாட்டு நாய்களே வெளியேறு!" என்று முழங்கியபடி பாசிஸ்ட் இட்லரின் உதவியாளரான ருடால்ஃப் ஹெஸ் என்பவரது 13-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியை நடத்தினர். நாஜிச சுவஸ்திக் சின்னமும் வலது கையை உயர்த்திய நாஜிச முழக்கமும் அவர்களை நவீன நாஜிகள் என்று காட்டியது. நவீன நாஜிகள் செல்வாக்குள்ள கிழக்கு ஜெர்மனி மட்டுமின்றி, மேற்கு ஜெர்மனியின் பல நகரங்களிலும் இதுபோன்ற நினைவுநாள் கூட்டங்களும் அதைத் தொடர்ந்து வெளிநாட்டவர் மீதான தாக்குதல்களும் நடந்துள்ளன. வீடற்ற வேலையிழந்த தொழிலாளிகள் மற்றும் நாடோடிகள் மூன்று பேர் நவீன நாஜிகளால் அண்மையில் கொல்லப்பட்டுள்ளனர். அகதிகளையும் நாடோடிகளையும் பொது இடங்களிலேயே தாக்குவது, அவமானப்படுத்துவது, எச்சிலைத் துப்புவது, பீதியூட்டி விரட்டுவது என்பதாக நவீன நாஜிகளின் அட்டூழியங்கள் தொடர்கின்றன.

ஜெர்மனியில் ஏறத்தாழ 70 லட்சம் வெளிநாட்டவர்கள் வேலைக்காகவும், அகதிகளாகவும் மற்றும் பிற காரணங்களாலும் குடியேறியுள்ளனர். குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்த கூலிக்கு

**இட்லரின் நாஜிசக் கொலைப் படையான "எஸ்.எஸ்." என்ற எழுத்தைத் தலையில் சவரம் செய்து கொண்டு அச்சுறுத்தும் நவீன நாஜி.**



www.padippakam.com

அந்நிய நாட்டவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள ஜெர்மன் அரசு தாராள சலுகைகளை அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, ஜெர்மனியில் குடியேறும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால் நவீன நாஜிகளோ, "வெளிநாட்டவர்களால் ஜெர்மானியர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்படுகிறது. அரசியல் தஞ்சம் கோரி குடியேறிய அகதிகளால் ஜெர்மனியின் கஜானா காலியாகிறது; வெளிநாட்டவர்களால் ஜெர்மனியின் பண்பாடும் தூய்மையும் கெட்டு, அராஜகமும் குற்றங்களும் பெருகி வருகின்றன; இவர்களுக்குத் தீனிபோட நம்மீது கூடுதல் வரி திணிக்கப்படுகிறது" என்று நியாய வாதங்களை அடுக்கி இனவெறியூட்டி தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.




**ஜெர்மனியின் டஸ்ஸல்டோர்ஃப் நகரில் நவீன நாஜிகளுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம்.**

ஆனால், கிழக்கு - மேற்கு ஜெர்மனி இணைப்புக்குப் பின்னர், கிழக்குப் பகுதியைப் புறக்கணித்து வருவதால் ஏற்பட்டுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், வளைகுடாப் போர் மற்றும் யூகோஸ்லேவியா போர்களில் ஈடுபட்டதாலும், பன்னாட்டு அமைதிப் படைகளுக்குத் தீனிபோட பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருப்பதாலும் தீவிரமாகிவரும் பற்றாக்குறை, தனது இராணுவ வலிமையை அதிகரிக்கக் கோடிக் கணக்கிலான பெருஞ் செலவு, நவீன தொழிலுற்பத்தி முறையில் இலாப வெறியோடு செயலாக்கப்படும் மக்கள் விரோதக் கொள்கைகள் முதலானவற்றால் ஜெர்மனியில் வேலையின்மையும் விலையேற்றமும் வரிச்சுமையும் தீவிரமாகி விட்டன. தனிநபர் வருமானத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி, வீட்டு வாடகை உயர்வு, வேலையில்லா - வீடில்லாத் திண்டாட்டம் ஆகிய மோசமாகி வரும் வாழ்க்கை நிலைமைகளால் அதிருப்தியுற்றுள்ள மக்களிடம் - குறிப்பாக இளைஞர்களிடம், நாஜிசம் என்னும் நச்சுக் காளான் வேகமாகப் பரவுவதற்குச் சாதகமாகவும் அடிப்படையாகவும் உள்ளது.

எனவேதான் கடந்த பத்தாண்டுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தாக்குதல்களை நடத்தி வந்த நவீன நாஜிகள் இப்போது அமைப்பு ரீதியாகத் திரண்டு திட்டமிட்ட ஒருங்கிணைந்த முறையில் தாக்குதல்களை நடத்துகின்றனர். "சிட்டிசன்ஸ் பேண்டு" எனும் தனியார் வானொலி நிலையத்தின் மூலம் தமது குண்டர் படைக்கு நவீன நாஜிகள் தகவல்களையும் உத்தரவுகளையும் பிறப்பிக்கின்றனர். "இட்லர் ஓங்குக!" என்ற பெயரிலும் இன்னும் பல்வேறு சங்கேத மொழிகளிலும் தனியே இணையத் தளமும் உருவாக்கிக் கொண்டு, உலகெங்குமுள்ள நவீன நாஜிக் குழுக்களுடன் வலைப் பின்னலை உருவாக்கிக் கொண்டுள்ளனர். முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு இரகசிய ஆயுதப் பயிற்சியும் பெற்று வருகின்றனர்.

தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சி (NPD) நவீன நாஜிகளை வெளிப்படையாகவே ஆதரிக்கிறது. இது ஆளும் சமூக ஜனநாயகக் கட்சியின் கூட்டணியில் அங்கம் வகிக்கிறது. அக்கட்சியை கூட்டணியிலிருந்து வெளியேற்றித் தடை செய்யுமாறு ஜனநாயக சக்திகளும் மனித உரிமை அமைப்புகளும் கோரி வருகின்றன. ஆனால், ஆளும் போலி சோசலிச - சமூக ஜனநாயகக் கட்சியோ பதவி சுகத்தை இழக்க விரும்பாமல், இதனால் எதிர்விளைவுகள் ஏற்படும் என்று பசப்புகிறது. நீதித்துறைதான் சட்டப்படி ஒரு கட்சியைத் தடை செய்ய முடியும் என்று நழுவிக் கொள்கிறது. இப்படி அரசியல் கட்சிகள் - அதிகார வர்க்கம் - போலீசு - இராணுவத்தின் நேரடி - மறைமுக ஆதரவோடு நவீன நாஜிக் குழுக்கள் நச்சுக் காளானாகப் பரவி வருகின்றன. நவீன நாஜிகள் ஜெர்மனி மட்டுமின்றி, பிற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வலுவடைந்து வருகின்றனர்.

புதிய வகை நாஜிச அபாயம் மேற்கு ஐரோப்பாவின் பொதுப் பிரச்சினையாக முற்றியுள்ள போதிலும், நவீன நாஜிகளுக்கு எதிரான ஜனநாயக சக்திகளின் தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக அவை அம்பலப்பட்டுப்போயுள்ளதால், அரசியல் அரங்கில் வேரூன்ற முடியவில்லை. ஜனநாயக வாதிகள், மனித உரிமை அமைப்புகள், அரசியல் தஞ்சம் கோரி வந்த அகதிகள், பிழைப்புக்காக வெளிநாடுகளிலிருந்து குடியேறியவர்கள், நாடோடிகள் என பல தரப்பட்ட மக்கள் அச்சுறுத்தும் நவீன நாஜிசத்துக்கு எதிராக விடாப்பிடியாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். நவீன நாஜிகளுக்கு எதிராக இவ்வாறு பொது மக்கள் கருத்தும் நிர்பந்தமும் வலுவாக உள்ளதால் வேறு வழியின்றி ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கத் தள்ளப்படுகின்றனர். இல்லையேல் தமது அரசியல் அருகதையும் ஜனநாயக மாய்மாலமும் கேள்விக்குள்ளாகி தனிமைப்பட நேரிடும் என்று அஞ்சுகின்றனர்.

ஜெர்மனிக்கு நவீன நாஜிகள் என்றால், அவர்களின் இளைய பங்காளிகளாக இங்கே இந்துவெறி பாசிசப் பரிவாரங்கள் கொட்டமடிக்கின்றன. பதவிக்காக இந்துவெறியர்களுடன் கூட்டணி, இந்துவெறி குண்டர்களின் அட்டூழியங்களைக் கண்டும் காணாமல் இருப்பது, அதற்கு வால்பிடித்துச் செல்வது என்று திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகள் வெளிப்படையாகவே துரோகிகளாக மாறி இந்தியாவை இருண்ட காலத்திற்குள் தள்ளி வருகின்றன. இத்துரோகிகளையும் போலி ஜனநாயகத்தையும் அத னுள்ளே மறைந்துள்ள இனவெறி - மத வெறி பாசிசத்தையும் அம்பலப்படுத்திப் போராட வேண்டியதே புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் இன்றைய முக்கியக் கடமையாகும். படர்ந்து வரும் பாசிச அபாயத்தை முறியடிக்க தொடர்ச்சியான அரசியல் போராட்டங்களும் தற்காப்பு ஏற்பாடுகளும் இன்று அவசியமாகிவிட்டன. இந்தியாவுக்கும் சரி, ஜெர்மனிக்கும் சரி இவை தவிர்க்கவியலாத தேவையாகி விட்டன.

● சுப


படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கிராமப்புற பள்ளியின் அவல நிலை

உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள அய்யனார் குளம் கிராமத்தில் கள்ளர் சீரமைப்பு நடுநிலைப்பள்ளி ஒன்று உள்ளது. சுற்றியுள்ள கிராமப்புற விவசாயிகளின் குழந்தைகள் ஆரம்பக் கல்வி கற்க ஒரே வாய்ப்பு இந்த பள்ளிதான். இப்பள்ளியில் ஏறத்தாழ 220 மாணவர்கள் பயில்கின்றனர். ஆனால் இவர்களுக்கு கல்வி போதிக்க 4 ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதனால் இப்பள்ளியை முறையாக நிர்வகிக்க இயலாமலும் மாணவர்கள் முறையாக கல்வி கற்க முடியாமலும் அவலம் நீடித்து வந்தது. தேவையான அளவுக்கு ஆசிரியர்களை நியமித்து, இப்பள்ளியை முறையாக நிர்வகிக்கக் கோரி ஆட்சியாளர்களிடம் பலமுறை முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அனைத்து பள்ளிகளிலும் ''கம்ப்யூட்டர்'' கல்விக்கு ஏற்பாடு செய்துள்ளதாக கதையளக்கும் அரசு, கிராமப்புற பள்ளிகளில் உரிய அளவுக்கு ஆசிரியர்களைக் கூட நியமிக்காமல் அலட்சியப்படுத்தி புறக்கணித்து வருவதை மக்களிடம் பிரச்சாரம் செய்து வந்த விவசாயிகள் விடுதலை முன்னணி, கடந்த ஜூன் 26-ந் தேதியன்று பேருந்து மறியல் போராட்டத்தை அறிவித்தது. இதைத் தொடர்ந்து கள்ளர் சீரமைப்பின் தனித்துணை ஆட்சியர் உத்தரவின் பேரில், பகுதி மேற்பார்வையாளர் வந்து கிராம மக்களிடம் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினார். வி.வி.மு. தலைமையில் கிராம மக்கள் சார்பில் நடந்த இப்பேச்சு வார்த்தையில், இப்பள்ளிக்கு ஒரு பட்டதாரி தலைமையாசிரியரையும், மூன்று இடைநிலை ஆசிரியர்களையும் உடனடியாக நியமிக்க வேண்டும்; பள்ளிக்கு வராமல், பாடம் நடத்தாமல் தவறு செய்யும் ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தற்போது ஆசிரியர் பணிக்கு ஆள்சேர்ப்பு நடந்து வருவதால் இன்னும் 45 நாட்களில் இடைநிலை ஆசிரியர்களை நியமிப்பதாகவும், பட்டதாரி தலைமை ஆசிரியரை இரு மாதங்களில் நியமிப்பதாகவும், தவறு செய்யும் ஆசிரியர்களைப் பற்றி புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கையின்படி தண்டனை அளிப்பதாகவும் அவர் எழுத்து மூலம் வாக்குறுதி அளித்தார்.

ஆனால் 45 நாட்களுக்குப் பின்னரும் இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே வி.வி.மு. தோழர்கள் சீரமைப்பின் பகுதி மேற்பார்வையாளரை நேரில் சந்தித்து விளக்கம் கேட்டனர். ''ஆசிரியர் பணிக்குத் தேர்வானவர்களில் 7 பேர் கிறித்துவ கள்ளர்கள் என்பதால், சீரமைப்பு பட்டியலில் தங்கள் சாதியினரையும் சேர்க்க வேண்டும் என்றும் இல்லையேல் வழக்கு தொடருவோம் என்கின்றனர்; வேலை வாய்ப்பு அலுவலகமோ கள்ளர் என்றால் இந்துக்கள் மட்டும்தான், கிறித்துவர்கள் அல்ல என்கிறது; இதனால் இப்பிரச்சனை முடிவுக்கு வந்ததும் ஆசிரியர்களை நியமிக்கிறோம்'' என்று அவர் நியாய வாதம் பேசினார்.

இப்படி நொண்டிச் சாக்கு போக்குகளைக் கூறி ஆட்சியாளர்கள் தொடர்ந்து அலட்சியப்படுத்தி புறக்கணித்து வருவதை வி.வி.மு.வினர் மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்தனர். அதைத் தொடர்ந்து கடந்த ஆகஸ்டு 16-ஆம் நாளன்று கிராம மக்களைத் திரட்டி பள்ளிக்கூடத்தை மூடி பூட்டி விட்டனர்.

இதனால் பீதியடைந்த தனித்துணை ஆட்சியர், வேறொரு பள்ளியில் பணிபுரியும் இரண்டு ஆசிரியர்களை இப்பள்ளிக்கு தற்காலிகமாக நியமனம் செய்துள்ளதாக ஒப்புதல் நகலை பகுதி மேற்பார்வையாளரிடம் கொடுத்தனுப்பி, கிராம மக்களிடம் மீண்டும் சமரச பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். பேச்சு வார்த்தையின் முடிவில் பகுதி மேற்பார்வையாளரிடம் ஆசிரியர் தேர்வுப் பணி - பிரச்சினை முடிந்ததும் மூன்று ஆசிரியர்களை நியமிக்கவும் தற்காலிக நியமன ஆசிரியர்களை உடனடியாகப் பணியேற்கச் செய்யவும் எழுதி வாங்கிக் கொண்டு வி.வி.மு. தலைமையில் கிராம மக்கள் பள்ளியை மீண்டும் திறந்து விட்டனர்.



ஆனால் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் இப்பள்ளிக்கு வரவில்லை. தனித்துணை ஆட்சியர் நரித்தனமாக அவர்களை வேறு இடத்துக்கு மாற்றி மக்களை ஏமாற்றியுள்ளார். மீண்டும் பள்ளியை பூட்டி விடுவதாக வி.வி.மு. எச்சரித்ததும் 21-ந் தேதியன்று வேறு இரண்டு ஆசிரியர்களை தற்காலிக நியமனம் செய்துள்ளதாக தனித்துணை ஆட்சியர் அறிவித்தார். ஆனால் அவ்விரு ஆசிரியர்களும் இப்பள்ளிக்கு வரவில்லை. ஏனெனில், அவர்கள் ஏற்கனவே பணியாற்றிய பகுதியிலும் இதேபோல் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினை இருந்ததால், அவர்களை இடமாற்றம் செய்தால் பள்ளிக்கூடமே இயங்காது என்பதால், அப்பகுதிவாழ் மக்கள் போராட்டத்தில் இறங்கி அப்பள்ளியைப் பூட்டி தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இதனால் வேறு வழியின்றி அந்த ஆசிரியர்களை அங்கேயே பணியைத் தொடர தனித்துணை ஆட்சியர் உத்திரவிட்டுள்ளார். இந்த விவகாரம் பற்றி அய்யனார் குளம் கிராம மக்களிடம் மூடிமறைத்து இதோ, அதோ என்று ஏமாற்றி வருகிறார்.

படித்து முடித்து வேலையில்லாமல் தவிக்கும் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் ஒருபுறம்; கிராமப்புற பள்ளிகள் உரிய அளவுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் தவிக்கும் அவலம் மறுபுறம்; தேர்வான ஆசிரியர்களைக் கூட நியமனம் செய்யாமல் இழுத்தடித்து அதிகார வர்க்க சிவப்பு நாடாத்தனம் இன்னொருபுறம். இந்த நிலைமைகளை விளக்கியும், கிராமப்புற உழைக்கும் மக்களை அற்பமானவர்களாகக் கருதி ஏமாற்றிவரும் அதிகார வர்க்கத்தின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தியும் கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்து வரும் வி.வி.மு. அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
உசிலம்பட்டி வட்டம்.

---

**நாடு** மறுகாலனியாக்கப்பட்டு வருவதை முறியடிக்கப் புரட்சிகர அமைப்புகளில் இணைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, ''சங்கமாய்ச் சேராமல் சங்கடங்கள் தீராது'' எனும் முழக்கத்தை முன்வைத்து, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி திருவாரூர் மாவட்டம் குழிக்கரை கடை வீதியில் பொதுக் கூட்டமொன்றை நடத்தியது. இப்பொதுக் கூட்டத்தில் ம.க.இ.க., மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். பகுதி தி.மு.க. கிளைச் செயலர், குடித்துவிட்டு வந்து, ''என் தலைவனப் பத்தி இப்படி பேசுறியே'' என அழுது ஆர்ப்பாட்டம் செய்த பொழுது, அவனைப் பொதுமக்களே விரட்டியடித்தனர். பகுதியில் செயல்பட்டு வரும் சி.பி.எம். தலைமை, ''பு.மா.இ.மு.வினர் நக்சல்பாரி தீவிரவாதிகள்'' எனப் பீதியூட்டி, பொதுக் கூட்டத்தில் மக்கள் கலந்து கொள்ளுவதைத் தடுத்துவிட முயன்றதையும் மீறி 800-க்கும் மேற்பட்ட பகுதி மக்கள் மட்டுமல்ல, அக்கட்சியைச் சேர்ந்த இளைஞர்களும் திரண்டு வந்தனர். ''இதுதான் உண்மையான கம்யூனிஸ்டு அமைப்பு'' எனப் பாராட்டியதோடு, மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியைப் பெரிதும் வரவேற்றனர்.

தகவல்: பு.மா.இ.மு., திருவாரூர்.



படிப்பகம்

www.padippakam.com



## சீன விவசாயிகளின் கலகம் போலி கம்யூனிஸ்டுகள் கலக்கம்

போலி கம்யூனிஸ்டுகள் தலைமையில் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் பூத்துக் குலுங்கும் போலி சோசலிச நாடான சீனாவில், கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் நடந்த மிகப் பெரிதான விவசாயிகளின் கலகம் அந்நாட்டையே உலுக்கியுள்ளது. சீனாவின் தென்பகுதியிலுள்ள ஜியாங்சி மாகாணத்தில் ஏறத்தாழ 20,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் அடுத்தடுத்து இருவார காலத்திற்கு ஊழல்-ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக தன்னெழுச்சியாக இக்கலகத்தை நடத்தியுள்ளனர். யுவாங்டு நகரில் தொடங்கிய இக்கலகம், படிப்படியாக மற்ற நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் பற்றிப் படர்ந்து பெருந்தீயாக மூண்டது. விவசாயிகள் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு ஊழல் மிக்க கொடுங்கோல் அதிகாரிகளைத் தாக்கி, கோப்புகளையும் ஆவணங்களையும் கிழித்தெறிந்து தீயிட்டனர். கோடீஸ்வரர்களாக வளர்ந்துவிட்ட ஊழல் அதிகாரிகளின், தனியார் முதலாளிகளின் வீடுகளையும் பண்ணைகளையும் சூறையாடினர். அவர்களது ஆடம்பர வெளிநாட்டுக் கார்களைத் தாக்கிச் சேதப்படுத்தினர். போலி கம்யூனிச ஆட்சியாளர்களுக்கு எதிரான விவசாயிகளின் இக்கலகம், பெரும் போலீசுப் படையைக் கொண்டு மிருகத்தனமாக ஒடுக்கப்பட்ட போதிலும் இன்னமும் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது.

சீனாவில் சோசலிசக் கூட்டுப் பண்ணைகள் அழிக்கப்பட்டு தனியார்மயமாக்கப்பட்ட பிறகு விவசாயிகளின் வாழ்க்கை வேதனைக்குரியதாக மாறிவிட்டது. தனியார் பண்ணைகளில் அற்பக் கூலியும் அடிமைத்தனமும் நிலவுவதாலும், சிறு விவசாயிகளுக்கு உற்பத்திப் பொருளுக்கேற்ற உரிய விலை கிடைக்காததாலும் விவசாயத்தில் தேக்க நிலையும் வேலையின்மையும் தீவிரமாகிவிட்டது. பலர் கிராமங்களை விட்டு பிழைப்புக்காக நகரங்களுக்கு ஓடும் அவலம் தொடர்கிறது. உள்ளூர் நிர்வாகமோ ஆறுகள் - ஏரிகளைக் கூட தனியாருக்குத் தாரை வார்த்து, விவசாயிகள் மீது இதுவரை கண்டிராத வகையில் வரிச்சுமையை ஏற்றியுள்ளது. இதுதவிர மைய அரசு விதிக்கும் வரியும், மாகாண நிர்வாகம் விதிக்கும் வரியும் தீவிரமாகிவிட்ட விலையேற்றமும் விவசாயிகளை மீளமுடியாத நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளன. இந்நிலையில் இவ்வாண்டு மீண்டும் வரிச்சுமையை ஏற்றியுள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்த விவசாயிகள் தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர். ஆனால் அதிகாரிகளோ வரியைக் கட்டாவிடில் விவசாயிகளின் வீடும் நிலமும் பறிக்கப்படும் என்று எச்சரித்தனர். இதனால் மனமுடைந்த பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். குமுறிக் கொண்டிருந்த விவசாயிகளை, யுவாங்டு நகரில் அதிகாரிகள் ஆணவத்தோடு நடந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி, எரிமலையாகப் பொங்கியெழ வைத்தது. அதன் தொடர்ச்சியாக ஜியாங்சி மாகாணமெங்கும் விவசாயிகளின் கலகங்கள் தன்னெழுச்சியாக நடந்துள்ளன.

இக்கலகத்தைக் கண்டு பீதியடைந்த சீனாவின் போலி கம்யூனிச ஆட்சியாளர்கள், இச்செய்தி வெளியே பரவாமல் மூடிமறைத்து விட்டனர். ஹாங்காங்கிலுள்ள மனித உரிமை அமைப்புகள் மூலமே இக்கலகம் பற்றிய செய்திகள் அரைகுறையாகக் கிடைத்துள்ளன. முழுமையான தகவல்கள் இன்னமும் வெளிவரவில்லை. இப்படி, தனியார்மயம் - தாராளமயத்தாலும் கடுமையான வரிச்சுமையாலும் நசுக்கப்பட்டு, விவசாயிகள் கலகத்தில் இறங்கியுள்ள சீனாவை "சோசலிச நாடு" என்று சித்தரித்து, இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் தமது அணிகளையும் மக்களையும் ஏய்த்து வருகின்றனர்.

## மேடைக்கு அணுகுண்டு எதிர்ப்பு பிழைப்புக்கு அணுமின் நிலையத் திறப்பு

ஆகஸ்டு 9-ஆம் தேதி; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 59-வது ஆண்டு நினைவு நாளை நாடெங்கும் காங்கிரசுக் கயவாளிகள் குளுகுளு அரங்கில் இவ்வாண்டு கொண்டாடினர். ஆனால் ஆகஸ்டு 9 - அனைத்துலகில் வேறொரு காரணத்துக்காக முக்கியமான நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. அதுதான் நாகசாகி நாள். இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் நாகசாகி நகரில் அணுகுண்டு வீசப்பட்டு அதிலே பலநூறு பேர் மாண்டு போனதோடு, தலைமுறை தலைமுறையாக இன்னமும் அதன் பாதிப்புகளால் மக்கள் பரிதவித்துக் கொண்டிருப்பதை நெஞ்சிலே நிறுத்தி, அணு ஆயுதங்களுக்கும் அணுசக்திக்கும் எதிராக மனித குலத்தைப் போராட அறைகூவும் நாள்!



போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கத் தலைநகர் கல்கத்தாவில் கடந்த ஆகஸ்டு 9-ஆம் நாளன்று மக்கள் அறிவியல் கழகம், மனித உரிமைக் கழகம் உள்ளிட்டு 70-க்கும் மேற்பட்ட அமைப்புகள், "நாகசாகி இனிமேலும் வேண்டாம்!" என்று முழக்கமிட்டபடியே ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலம் நாகசாகி நினைவு நாள் நிகழ்ச்சியாக இல்லாமல், மே. வங்கதின் சுந்தரவனப் பகுதியில் 'இடது' முன்னணி அரசு அணுமின் நிலையம் தொடங்கவுள்ளதை எதிர்க்கும் ஆர்ப்பாட்டமாக நடந்தது.

அணுமின் நிலையங்களால் சுற்றுச்சூழலும், நிலத்தடி நீரும், வனவளமும் பாதிக்கப்படுவதோடு மனித குலத்துக்கே பேராபத்து விளையும். உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் தவறினால், அணு உலைகளிலிருந்து கதிரியக்கம் பரவும்; அணுக் கழிவுகளைப் பெரும் பொருட் செலவில் பாதுகாப்பாக அடைக்காவிடில், பல தலைமுறைக்கு மனித குலத்தை நாசமாக்கும்; அணுமின் நிலையங்கள் இயங்கினாலும் ஆபத்து; மூடினாலும் ஆபத்து என்று இதனால் ஏற்படும் பேரழிவுகளை விளக்கி, இத்திட்டத்தைக் கைவிடக் கோரி இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது. 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள புரட்சி சோசலிஸ்டுக் கட்சி (RSP)யும், இந்திய



படிப்பகம்

www.padippakam.com



சோசலிச ஐக்கிய மையமும் (SUCI) இந்த அணுமின் நிலைய திட்டத்தை எதிர்த்து சுந்தரவனப் பகுதியில் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருவதோடு, சட்டமன்றத்திலும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. 'மார்க்சிஸ்ட்' கட்சியிலும் மாலினி பட்டாச்சார்யா, சங்கர் சென் முதலான முன்னாள் மூத்த அமைச்சர்களும், பல அறிவியலாளர்கள் - கல்வியாளர்கள் - சுற்றுச் சூழல்வாதிகளும் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

இப்படி பல முனைகளிலும் கிடைத்த ஆதரவைக் கொண்டு, ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய அணுமின் திட்ட எதிர்ப்பாளர்கள், ஊர்வல முடிவில் பொதுக்கூட்டம் நடத்த முற்பட்டபோது, போலீசார் அனுமதி மறுத்தனர். இதனால், அருகிலுள்ள வேறொரு பகுதியில் கூட்டம் நடத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றபோது, போலீசார் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாகத் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்து விரட்டியடித்தனர். இதில் மனித உரிமை அமைப்புகளின் பிரபலத் தலைவர்கள் மட்டுமின்றி, அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்களும் ஊர்வலத்தில் திரண்ட பள்ளிக் குழந்தைகளும் படுகாயமடைந்தனர். அணுமின் நிலையத்தை எதிர்த்து, பாதுகாப்பான வாழ்வுரிமையைக் கோரிய மக்களுக்கு, அணுகுண்டை எதிர்ப்பதாகக் கூறும் மே. வங்க போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சி அளித்த 'பரிசு' இதுதான்!

## தனியார்மய வெறியில் 'தேசத் தந்தை' பள்ளியும் ஏலம்!

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களிடமும் தனியார் - தரகுப் பெரு முதலாளிகளிடமும் நாட்டின் பொதுச் சொத்துக்களைக் கூறுபோட்டு விற்று வரும் துரோக ஆட்சியாளர்கள், இப்போது ஆளும் வர்க்கங்களின் 'தேசத்தந்தை'யான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி படித்த ராஜ்கோட்டிலுள்ள ஆரம்ப பள்ளியையும் தனியாருக்கு விற்கக் கிளம்பியுள்ளனர்.



நவபுரா போலீசு நிலையம் அருகிலேயே வயதான முசுலீம் தம்பதியினரைத் திரிசூலத்தால் தாக்கும் இந்து மதவெறியர்கள்.

இந்து வெறியர்கள் ஆளும் குஜராத் மாநிலத்தில் அரசின் அலட்சியத்தாலும் புறக்கணிப்பாலும் நூற்றுக்கணக்கான ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையும் தேர்ச்சி விகிதமும் குறைந்துவிட்டன. மதிய உணவு இல்லாவிட்டால் ஏழைக் குழந்தைகள் இப்பள்ளிகளில் மழைக்குக்கூட ஒதுக்க மாட்டார்கள் என்ற அளவுக்கு, இற்று விழும் நிலையில் எந்த அடிப்படை வசதியுமின்றி இப்பள்ளிகள் உள்ளன. காசுள்ளவனுக்கு மட்டுமே கல்வி என்றாகிவிட்ட பிறகு, இனியும் இலவச ஆரம்பக் கல்விக்கு வீண் செலவு செய்து விரயமாக்க அரசு விரும்பவில்லை. எனவே அரசுப் பள்ளி கட்டிடம், நிலம் மற்றும் பிறவற்றை விற்று இலாபமீட்ட ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர். அண்மையில் மாநில முதல்வர், கல்வியமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் கூடி, தற்போது 160 ஆரம்பப் பள்ளிகளைத் தனியாருக்கு விற்றுவிட முடிவு செய்துள்ளனர்.

இதன்படி 'தேசப்பிதா' 'மகாத்மா' காந்தி படித்த ஆரம்பப் பள்ளி - அவரது மறைவுக்குப் பிறகு ''காந்தி வித்யாலயா'' என்று பெயரிடப்பட்டுள்ள பள்ளி, இப்போது ஏலம் விடப்பட்டுள்ளது: இதே போல குஜராத்தில் பிரபல கவிஞர் கலாபி படித்த, அம்ரேலி மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பள்ளியும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

தற்போது ஏலம் விடப்பட்டுள்ள 160 ஆரம்பப் பள்ளிகளில் 120-இல் கடந்த பத்தாண்டுகளாக தலைமை ஆசிரியரே கிடையாது. பல பள்ளிகளில் போதிய அளவுக்கு ஆசிரியரே இல்லாமல், ஒரு ஆசிரியரே பள்ளியை நிர்வகித்த அவலம் நீடித்தது. இதனால் இத்தகைய அரசு ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவது படிப்படியாக குறைந்தது. அடிப்படை வசதியும் ஆசிரியர்களும் இல்லாமல் போனதால் இப்பள்ளிகளின் கல்வித்தரம் குறைந்து 100-க்கு 30 குழந்தைகள் கூட ஆண்டுத் தேர்வுகளில் தேர்ச்சியடையவில்லை. இந்நிலைமைகள் காரணமாக, மாநிலத்தின் கல்வித் தரத்தை உயர்த்த சூளுரைத்த இந்துவெறி ஆட்சியாளர்கள், ஆரம்பப் பள்ளிகளைத் தனியாருக்கு விற்றுவிட முடிவு செய்துள்ளனர்.

அரசு பள்ளிகளைத் தனியாருக்கு விற்றாலும், மீண்டும் அங்கே பள்ளிகள் புதுப்பிக்கப்பட்டு ஆரம்பக் கல்விப் பணி தொடரும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. ஏனெனில், வீட்டுமனை மாஃபியா கும்பலே இப்பள்ளிகளை ஏலத்தில் கைப்பற்றக் கிளம்பியுள்ளன. இதனால் அரசு ஆரம்பப் பள்ளிகள் இருந்த இடத்தில் மேட்டுக் குடியினருக்கான ''கான்வெண்ட்'' பள்ளியோ அல்லது அடுக்குமாடி குடியிருப்போதான் உருவாகும். ஏழைக் குழந்தைகள் ஆரம்பக் கல்வியறிவு கூடப் பெற முடியாமல் தற்குறிகளாக்கப்படுவர்.

தலைநகரில் உள்ள 10 ஆரம்பப் பள்ளி நிலத்தைக் கைப்பற்ற வீட்டுமனை மாஃபியாக்கள் போட்டி போடுவதும், பள்ளிகள் விற்பனையில் பொது ஏலமுறை அறிவிக்கப்படாமல் அமைச்சரவை மட்டத்திலேயே முடிவு செய்து இலஞ்ச - ஊழல் புழுத்து நாறுவதும் இதையே நிரூபிக்கின்றன. குறிப்பாக, ராஜ்கோட்டிலுள்ள காந்தி படித்த ஆரம்ப பள்ளியின் மைதான நிலத்தைக் கைப்பற்றி அடுக்குமாடி குடியிருப்பு கட்ட வீட்டுமனை மாஃபியாக்கள் போட்டி போடுவதை அப்பள்ளி ஆசிரியர்களே அம்பலப்படுத்தியுள்ளனர்.

''தேசப்பிதா காந்தி படித்த ஆரம்பப் பள்ளியைத் தனியாருக்கு விற்பதா? இது தேசிய அவமானம்!'' என்று காங்கிரசு பெருச்சாளிகள் இம்முடிவை எதிர்த்து கூச்சல் போட்டனர். ஆனால் முந்தைய காங்கிரசு ஆட்சியில், 1994-லேயே 90 பள்ளிகள் இப்படி தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன என்று ஆளும் இந்து வெறியர்கள் உண்மையைப் போட்டு உடைத்ததும், காந்தீயக் குரங்குகளாக காங்கிரசு துரோகிகள் வாய்மூடி அடங்கி விட்டனர்.

## உள்ளூராட்சி தேர்தல் வெற்றிக்காக இந்து வெறியர்கள் உருவாக்கிய கலவரம்

காசுமீரிலுள்ள அமர்நாத் குகைக் கோயிலுக்கு யாத்திரை சென்ற இந்துக்களை பாக். கூலிப்படையினர் சுட்டுக் கொன்றதைக் கண்டித்து, குஜராத் மாநிலத்தில் இக்கொடுஞ்செயலுக்குப் பழிக்குப் பழிவாங்க முசுலிம்கள் மீதும் கிறித்துவர்கள் மற்றும் பழங்குடியினர் மீதும் கடந்த ஆகஸ்டு மாதத்தில் இந்து வெறியர்கள் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர். அகமதாபாத், சூரத், சபர்கந்தா, பிலான்பூர், ராஜ்கோட் ஆகிய நகரங்களிலும் பழங்குடியினர் வாழும் கிராமப் புறங்களிலும் நடந்த இக்கொடூரத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். முசுலிம்களின் வீடுகள், கடைகள், விசைத்தறிக் கூடங்கள், அச்சுக் கூடங்கள், கிடங்குகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டுள்ளன. சூரத் நகரில்



படிப்பகம்

www.padippakam.com



மட்டும் விசைத்தறிக் கூடங்கள் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டதால் ஏற்பட்ட இழப்பு ரூ. 10 கோடிக்கு மேல் இருக்கும் என்று 'தேசிய'ப் பத்திரிகைகளே எழுதுகின்றன.

அமர்நாத் யாத்திரை சென்ற இந்துக்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து விசுவ இந்து பரிஷத், பஜ்ராங்தளம் ஆகிய இந்துவெறி அமைப்புகள் ஆகஸ்ட் 3-ந் தேதியன்று மாநிலம் தழுவிய கடையடைப்புப் போராட்டத்தை அறிவித்தன. ஆளும் பா.ஜ.க. அரசும் இப்போராட்டத்தை ஆதரித்தது. ஆகஸ்ட் 2-ந் தேதியன்று விசுவ இந்து பரிஷத் தலைவர்கள் "நாளை எங்களது போராட்டம் தீவிரமானதாகவே இருக்கும்; பழிவாங்காமல் விடமாட்டோம்!" என்று வெளிப்படையாகவே கொக்கரித்தனர். அன்று நள்ளிரவில் பஜ்ராங்தள தலைவர்கள் தமது குண்டர் படையைக் கூட்டி "கடைகள் திறக்கப்பட்டால் தாக்குங்கள்; மூடியிருந்தால் முசுலிம் கடைகளைச் சூறையாடுங்கள்!" என்று உத்திரவிட்டுக் கொண்டிருந்ததை "பிரதிநிதி" என்ற உள்ளூர் நாளேடு ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டது. ஆனாலும் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அகமதாபாத்தின் புறநகரான சராஸ்பூரிலுள்ள பிரபல செருப்புக் கடையை ஆகஸ்ட் 3-ந்தேதியன்று 1000 பேர் கொண்ட இந்துவெறி குண்டர்கள் சூறையாடியபோது, போலீசார் ஓடி ஒளிந்தனர். சூரத்திலுள்ள நவபுரா போலீசு நிலையம் எதிரே திரிசூலம் ஏந்திய இந்து வெறியர்கள் பட்டப் பகலில் முஸ்லிம்களைத் தாக்கிய போது போலீசார் கைகட்டி நின்றனர். அகமதாபாத்தில் ஒரு தர்கா, இந்து வெறியர்களால் தாக்கப்பட்டது. ஒட்டுமொத்த அரசு எந்திரமே இந்து வெறியர்களுக்கு ஆதரவாக நிற்பதை அறிந்து இந்து வெறி குண்டர்கள் போதை தலைக்கேறி 40 பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். போர்பந்தரிலுள்ள நடுநிலைப் பள்ளி, மெகராஜிலுள்ள கிறித்துவப் பள்ளிகளைத் தாக்கினர். பழங்குடியினர் கிறித்துவ மதத்துக்கு மாறி விடாதிருக்க அவர்களை மிரட்டிப் பணிய வைக்க, கிராமப் புறங்களில் அவர்களது வீடுகள் மீது கல்லெறிந்து தீயிட்டனர். குறிப்பாக, சூரத் நகரில் மட்டும் 87 அட்டூழியங்கள் பற்றி போலீசின் முதல் தகவல் அறிக்கையில் பதிவாகியுள்ள போதிலும் எந்தவொரு இந்து வெறி குண்டனும் கைது செய்யப்படவில்லை; வழக்கு தொடரப்படவுமில்லை.

1998-இல் குஜராத்தில் இந்து வெறியர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினர் மீதான அட்டூழியங்களும் கொலை வெறியாட்டமும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. வரும் செப்டம்பரில் சூரத் நகராட்சியிலும் மாநிலத்தின் அனைத்து பஞ்சாயத்துகளிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ளதால், அதற்கு முன்னேற்பாடாக சிறுபான்மையினரை அச்சுறுத்திப் பணிய வைக்கும் நடவடிக்கையாகவே அமர்நாத் விவகாரத்தைச் சாக்கிட்டு இந்து வெறியர்கள் இக்கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தியுள்ளனர். ஆனாலும் 'தேசிய'ப் பத்திரிகைகள் இந்து வெறியர்கள் நடத்திய இக்கலவரத்தைப் பூசி மெழுகிவிட்டன. "பா.ஜ.க.வின் தன்மை மாறிவிட்டது. அது தேசிய ஜனநாயக அரசின் செயல் திட்டத்தைத்தான் நடைமுறைப்படுத்துகிறது. சிறுபான்மையினருக்கு எதிரான கலவரங்களில் ஈடுபடுவதே இல்லை" என்று தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய பிழைப்புவாதக் கட்சிகள் பதவி சுகத்தில் இந்து வெறியர்களுக்குச் சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றன.

# கல்விக் கூடமா? கொள்ளைக் கூடமா?

மரத்தடி பள்ளிக்கூடம், கூரையில்லா பள்ளிக்கூடம், கரும் பலகையில்லா பள்ளிக்கூடம், ஆசிரியரில்லா பள்ளிக்கூடம் என அரசு கல்விக் கூடங்களில் நிலவும் அவலம் போதாது என்று பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின் பெயரால் மாணவர்களிடம் கட்டாய நன்கொடை என பணம் பறிக்கும் கொடுமையும் கேள்வி முறையின்றித் தமிழகத்தில் தொடர்கிறது.

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் **ஆயக்காரன்** புலம்(2) கிராமத்தில் உள்ள அரசு மேனிலை பள்ளியில், கடந்த சில ஆண்டுகளாக ஏழை, தாழ்த்தப்பட்ட மாணவர்களிடம் பெற்றோர் - ஆசிரியர் கழகம் நன்கொடை என்ற பெயரில் கட்டாய பணப்பறிப்பைச் செய்து வருகிறது. வெளியூர் மாணவர்கள் என்றால் விரும்பும் பாடத்திற்கேற்ப ஆயிரக் கணக்கில் கட்டாய நன்கொடையைக் கறந்து விடுவர். இவர்கள் கேட்கும் தொகையைக் கண்டு பயந்து, விரும்பும் பாடத்தைப் படிக்க முடியாமல் போன மாணவர்கள் ஏராளமாக உள்ளனர். கட்டாய நன்கொடையைச் செலுத்த முடியாத பல ஏழை - தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.



இந்நிலையில் பெற்றோர் - ஆசிரியர் கழகம் என்ற பெயரில் கட்டாய வசூல் செய்து ஏழை - தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வியை மறுக்கும் பள்ளி நிர்வாகத்துக்கு எதிராக இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் "கல்விக் கூடமா? கொள்ளைக் கூடமா?" என்ற தலைப்பில் நூற்றுக் கணக்கான கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு மக்களிடம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த பள்ளி நிர்வாகமும், பெற்றோர் - ஆசிரியர் கழகமும் உள்ளூர் ரௌடிகளை ஏவிவிட்டு வி.வி.மு. தோழர்களை அச்சுறுத்தும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஆனால் இந்த சலசலப்புகளுக்கு அஞ்சாமல் தொடர்ந்து பிரச்சாரத்தில் வி.வி.மு. ஈடுபட்டதும், வேதாரண்யம் நகர தி.மு.க. செயலாளர் பீதியடைந்து, "இனிமேல் கட்டாய நன்கொடை வசூலிப்பதில்லை என்று பள்ளி நிர்வாகமும் பெற்றோர் - ஆசிரியர் சங்கமும் முடிவெடுத்துள்ளதால், நீங்கள் சுவரொட்டி ஒட்டாதீர்கள்" என்று கோரினார். "எந்த வழியிலும் நன்கொடை வசூலிக்கக் கூடாது; அப்படி நடந்தால் இந்த விவகாரத்தை மக்களிடம் எடுத்துச் சென்று போராடுவோம்" என்று வி.வி.மு. உறுதிபடக் கூறியது.

பள்ளி நிர்வாகத்தின் கட்டாய நன்கொடைக்கு எதிராக நடந்த இச்சுவரொட்டி பிரச்சார இயக்கம் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பைப் பெற்றது. பள்ளி நிர்வாகம் ஆதிக்க சக்திகளின் தலைமையில் உள்ளதால் "நாங்கள் கேட்கத் தயங்கி பயந்து கிடந்த நிலையில், நீங்கள் துணிவாக நின்று இக்கொடுமையைத் தடுத்துள்ளீர்கள்" என்று வரவேற்று ஆதரித்தனர். இதுவரை கட்டாய நன்கொடை பறித்து வந்த, இப்பகுதியைச் சுற்றியுள்ள இதர அரசு பள்ளிகளும், இச்சுவரொட்டி பிரச்சார இயக்கத்தைக் கண்டு அரண்டு போயுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

**— விவசாயிகள் விடுதலை முன்னணி**
**வேதாரண்யம் வட்டம்**

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

✦ வீரப்பன் விவகாரத்தை நாம் அணுகிய விதம் குறித்தும் நமது மாற்றுத் தீர்வு குறித்தும் வாசகர்கள் பெரிதும் பாராட்டினார்கள். "இன்று வீரப்பன் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஏற்கனவே பல ஆயிரம் பேர் போராடியபோது அடக்குமுறை ஏவிய அரசு, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ராஜ்குமார் என்ற கருப்புப் பண பேர்வழியின் உயிருக்கு ஆபத்து என்றதும் ஓடோடி வருகிறது. இந்த அரசு மக்களுக்கானதா? அல்லது ராஜ்குமார் போன்ற கருப்புப் பண நிலப்பிரபுக்களுக்கானதா?" என்று பிரச்சாரம் செய்து பேருந்துகளில் நாங்கள் பத்திரிகையை விற்பனை செய்தபோது மக்கள் ஆர்வமுடன் வரவேற்றார்கள். கையில் எடுத்துச் சென்ற பிரதிகள் அனைத்தும் விற்பனையாகி, தொடர்ந்து விற்பனை செய்ய வாய்ப்பின்றி திரும்பும் அளவுக்கு பரபரப்பாக இந்த இதழ் விற்பனையாகி மக்களிடம் பெருத்த ஆதரவைப் பெற்றுள்ளது.

**— பு.ஜ. விற்பனை - பிரச்சாரக் குழு, மதுரை.**

✦ புதிய ஜனநாயகம் இதழின் அட்டையில் எப்போதும் கார்ட்டூன்தான் போட வேண்டுமா? அந்தக் கடலை மிட்டாய் தொழிலகத்தில் வெந்து தவிக்கும் அந்தக் கொத்தடிமைச் சிறுவர்களின் படத்தைப் போட்டிருக்கலாமே! அப்பாவி தாழ்த்தப்பட்ட தொழிலாளிகளை வதைத்த சமூக நீதி அமைச்சரையும், காலில் இரும்புச் சங்கிலியை பிணைத்து கடன்பட்ட தொழிலாளிகளை சித்திரவதை செய்த மிருகங்களையும், சிறுவர்களைக் கொடுமைப்படுத்தும் காட்டுமிராண்டிகளையும் அறிந்தபோது என் நெஞ்சம் கொதித்தது.

**— தமிழ் உரியன், கணபதி - கோவை.**

✦ தமிழினப் பிழைப்பு வாதிகளுக்குத் தானைத் தலைவனாகிவிட்ட வீரப்பன் கும்பலை அம்பலப்படுத்திக் காட்டியது சிறப்பு. சமூக விரோதி வீரப்பனுக்கு இத்தனை விளம்பரமும் ஒளிவட்டமும் ஏற்படுத்திக் கொடுத்த நக்கீரன் குழுமம் பற்றி நீங்கள் விமர்சிக்காமல் விட்டது சற்றும் நியாயமில்லை.

**— நாஞ்சில் இராசசி, திருவள்ளூர்.**

✦ புதிய "தடா" சட்டம் பற்றி விளக்கமாக எழுதியிருந்தீர்கள். சிறுபான்மை மதத்தினர் மற்றும் உழைக்கும் மக்களின் மீதே இச்சட்டம் பாயும் என்பதில் சந்தேகமில்லை. பால் தாக்கரே என்ற இந்துவெறி - இனவெறியனைக் காட்டி சிறுபான்மை மதத்தினரின் வாக்குகளைப் பெற காங்கிரசு கழிசடைகள் கைது நாடகமாடினர்; ஆனால் அது கேலிக் கூத்தாக முடிந்தது. இந்த உண்மைகளை தெளிவாக்கிய புதிய ஜனநாயகத்தின் புரட்சிப் பணி தொடர்ந்து வெல்லட்டும்.

**— கா. ஷஃபீ, ஏரிப்புதூர் (வேலூர்).**

✦ வீரப்பன் ஒரு கைதேர்ந்த ஓட்டுக் கட்சி அரசியல்வாதியாகத் தயாராகிக் கொண்டிருக்கிறான். தமிழினப் பிழைப்பு வாதிகளோ விட்டில் பூச்சிகள் விளக்கை நோக்கிச் செல்வதைப் போல, வீரப்பனை நோக்கி புறப்பட்டுள்ளனர். இப்பிழைப்புவாதிகளை அம்பலப்படுத்திக் காட்டியது சிறப்பானது. மொரீசியஸ் நாட்டையும் இந்தியாவையும் மொட்டையடித்து ஆண்டுக்கு ரூ. 8000 கோடிக்கு மேல் வரி மோசடி செய்யும் அந்நிய நிறுவனங்களுக்குச் சேவை செய்து வரும் இந்துவெறி ஆட்சியாளர்களைத் திரைகிழித்துக் காட்டியது வரவேற்கத் தக்கது.

**— தர்மராஜ், திருச்சி.**

✦ சிறுமி அஞ்சுவை ஒரு நாய்க்குத் திருமணம் செய்து வைத்ததைக் கண்டு உள்ளம் கொதித்தது. மூடநம்பிக்கைகளின் கோட்டையாக மே. வங்க மாநிலம் மாறிவிட்டதை அறிந்து வேதனைப்பட்டேன். வீரப்பன், நடிகர் ராஜ்குமாரை பிணைக் கைதியாக்கி மிரட்டுகிறான்; பால் தாக்கரே, மகாராஷ்டிர மாநிலத்தையே பிணைக் கைதியாக்கி மிரட்டுகிறான். இவ்விரு சமூக விரோத கிரிமினல்களை சரியாகவே அடையாளம் காட்டியுள்ளீர்கள்.

**— ஆர்.ஆர். சாமி, திருவண்ணாமலை.**

✦ சமூக நீதி, சமத்துவபுரம் என்றெல்லாம் பித்தலாட்டம் செய்து வரும் ஆளும் வர்க்கத்தின் கோர முகத்தை "கொத்தடிமைக் கொடூரத்தில் தாழ்ப்பட்டோர்" என்ற கட்டுரை படம் பிடித்துக் காட்டியது. புதிய தடா சட்டத்தின் மூலம் பாசிச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட ஆளும் வர்க்கங்கள் தயாராகி வருவதை அட்டைப் படக் கட்டுரை எடுப்பாக விளக்கியது. வீரப்பன், ஜெயலலிதா போன்ற அம்பலப் பட்டுப் போன கிரிமினல் குற்றவாளிகள் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் பின்னே ஒளிந்து கொள்வது, தண்டனைகளில் இருந்து தப்புவதற்குத்தானே தவிர, மக்கள் மீதான கரிசனையினால் அல்ல என்ற உண்மையை புதிய ஜனநாயகம் மட்டுமே நிருபித்துக் காட்டியது. தமிழின போலி புரட்சியாளர்களின் குழு சாகசவாதம் பேரழிவையே விளைவிக்கும் என்பதை எடுப்பாக உணர்த்தியது. நமது இதழை மாதமிருமுறை கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

**— வாசகர் வட்டம், சென்னை.**

✦ ஆளும் வர்க்க பிற்போக்கு அரசியலை மட்டுமின்றி, போலி புரட்சியாளர்களின் தவறான பாதைக்கும் செருப்படி கொடுப்பது போல் புதிய ஜனநாயகம் விளங்குகிறது.

**— பிரசாத், சென்னை - 81.**

✦ ஆட்டோ தொழிலாளியாகிய நான், த.மு.மு.க.வின் தொண்டனாகவும், சி.ஐ.டி.யு. மாவட்டத் துணை செயலாளராகவும், பு.ஜ. வாசகனாகவும் உள்ளேன். ஆகஸ்டு இதழில், "பால் தாக்கரே: மஃபியா தலைவனிடம் மிரளும் அரசுகள்" என்ற கட்டுரையைப் படித்தபோது என் இரத்தத்தில் உள்ள அணுக்கள் எல்லாம் புது வேகத்தில் பாய்வதைப் போல உணர்வடைந்தேன். ஜனநாயகத்தின் தூண்களான நாடாளுமன்றமும் நீதிமன்றமும் இந்துமத வெறியர்களின் கோரப் பிடியில் சிக்கியுள்ளதை இக்கட்டுரை தெளிவுபடுத்தியது. புரட்சிகர - மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் ஆயுதம் ஏந்திய மக்கள் படையின் மூலமே இந்துவெறி பாசிச சக்திகளை முறியடிக்க முடியும் என்ற உண்மையை இன்று யாராலும் மறுக்க முடியாது.

**— நாசர் அலி, ஈரோடு.**

✦ அராஜகவாத தமிழினக் குழுக்களின் சாகசவாதங்களால் உழைக்கும் மக்கள் விடுதலையடைய முடியாது; மக்கள் திரள் புரட்சியே விடுதலையைச் சாதிக்கும் என்ற வரலாற்று உண்மையை வீரப்பன் விவகாரம் பற்றிய கட்டுரை தெளிவுபடுத்தியது. கொத்தடிமை கொடூரத்தில் தாழ்த்தப்பட்டோர் என்ற கட்டுரை எமது பகுதியில் மாணவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

**— விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலை வட்டம்.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PAINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY) REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85 Regd. No. TN/Chief.PMG - 544 / 2000

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



கர்நாடக மாநில முதல்வர் கிருஷ்ணாவுடன் இருக்கும் இந்தக் குழந்தை, கன்னட நடிகர் ராஜ்குமாரின் பேத்தி நிவேதிதா. ராஜ்குமாரின் வீட்டிற்கு அடிக்கடி சென்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் அவர், அந்தக் குழந்தையிடம், "தாத்தா, இரண்டொரு நாளில் உன்னைப் பார்க்க ஓடி வந்துடுவாரு" எனக் கூறி, அந்தக் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிச் சிரிக்க வைத்திருக்கலாம். ராஜ்குமார் கடத்தப்பட்டிருக்கிறார் என்பது அந்தக் குழந்தைக்குப் புரியாது. அதுபோலவே, "ராஜ்குமார் கடத்தப்பட்டதில் இருந்து கர்நாடக அரசில் எந்த வேலையையும் நடக்கவில்லை" எனப் பத்திரிகைகள் புலம்பும் அளவிற்கு, அம்மாநில அரசு மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, ராஜ்குமாரை மீட்க முயன்று வருவதற்குக் காரணம் என்ன என்பதும் அந்தக் குழந்தைக்கு விளங்காது.

ராஜ்குமாரை மீட்பதில், அவரது குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லுவதில் தமிழக அரசும் கர்நாடக அரசிற்குச் சளைத்ததாகத் தெரியவில்லை. ராஜ்குமாரின் பாமர ரசிகன் தொடங்கி ரஜினிகாந்த் போன்ற காரியவாத ரசிகர்கள், கன்னட வெறி அமைப்புகள் என ஒரு பெரும் பட்டாளமே ராஜ்குமாரின் விடுதலைக்காகக் கடவுளிடம் வேண்டுவது, கர்நாடகத் தமிழர்களைக் காட்டி மிரட்டுவது, காட்டுக்குப் போவதாகச் சவால் விடுவது எனப் பல வழிகளில் தங்களின் அக்கறையைக் காட்டிக் கொள்கிறார்கள். தமிழ்த் தீவிரவாதிகளையும், தடா கைதிகளையும் விடுதலை செய்யக் கூடாது என உத்தரவிட்ட உச்சநீதி மன்றத்திற்கும், அதனை ஆதரிக்கும் "சோ" போன்ற தேசபக்த திலகங்களுக்கும் கூட, ராஜ்குமாரை உயிரோடு மீட்க வேண்டும்; அந்தக் குடும்பத்தில் மீண்டும் மகிழ்ச்சியும் குதூகலமும் தாண்டவம் ஆட வேண்டும் என்பதில் அக்கறையுண்டு.

ராஜ்குமாரின் விடுதலைக்காக இவர்கள் காட்டும் அக்கறையில், கடமையுணர்வில், மனிதாபிமானத்தில் ஒரு சிறு துளியாவது இதோ, இந்தச் சிறுமி மீது காட்டுவார்களா?

காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த இவளின் பெயர் ஃபர்ஸானா முஷ்டாக். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு,







இவள் கைக்குழந்தையாக இருந்தபொழுது, இவளது தந்தை துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டார். கடத்திச் சென்றவர்கள் முசுலீம் தீவிரவாதிகள் அல்லர். தீவிரவாதத்தை ஒடுக்க காஷ்மீரில் இறக்கிவிடப்பட்டிருக்கும் இந்திய இராணுவத்தினர்! தான் பார்த்து அறியாத தனது தந்தை உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ளப் புரியாத வயதில் போராடக் கிளம்பி விட்டாள் முஷ்டாக்; கைக் குழந்தையோடு இருக்கும் இந்தப் பெண், தனது கணவனுக்காகப் போராடுகிறாள். கடந்த பத்தாண்டுகளில் கிட்டதட்ட 3000 காஷ்மீர் முசுலீம்கள், இராணுவத்தால் இழுத்துச் செல்லப்பட்ட பின், 'காணாமல் போய்விட்டார்கள்'.

தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் இந்திய இராணுவம் நடத்திவரும் இந்தச் சட்டவிரோதக் கொலைகள் குறித்து தேசபக்த பஜனை பாடும் யாரும் வெட்கப்படவில்லை. இராணுவத்தால் இழுத்துச் செல்லப்பட்டவர்களைக் காட்டக் கோரி போடப்பட்ட 500 ஆட்கொணர்வு மனுக்கள் நீதிமன்றத்தில் தூங்கிக் கொண்டிருக்கின்றன; மாநில அரசோ, பணத்தை வீசியெறிந்து இராணுவத்தின் அத்துமீறலை மூடிமறைத்துவிட முயன்று வருகிறது. தன்மானம் மிக்க காஷ்மீரிகளோ பணத்தைச் சீண்டக் கூடத் தயாராக இல்லை. "விசாரணை நடத்தி உண்மையை வெளியிடக் கோரி" கணவனை, அப்பாவை, மகனை, அண்ணனை, தம்பியை இழந்தவர்கள் அனைவரும் போராடி வருகிறார்கள்.

ராஜ்குமார் என்ற கறுப்புப்பண பேர்வழியின், பெரும் ரசிகர் பட்டாளத்தை ஓட்டு வங்கியாய் வைத்திருக்கும் பிரபல நடிகனின் குடும்பத்தினது கண்ணீரைத் துடைக்க ஓடாய்த் தேயும் அரசு இயந்திரம், மறுபுறமோ உரிமைக்காகப் போராடும் காஷ்மீரி மக்களுக்கு எதிரியாய் மாறி நிற்கிறது. அவர்களின் கண்ணீரைக் கூடச் சந்தேகிக்கிறது; அலட்சியப்படுத்துகிறது. இந்தியக் 'குடியரசின்' இந்த இன-வர்க்க ஒடுக்குமுறையைப் புரிந்து கொள்ள இன்னும் எத்தனை பேரை அரசு பயங்கரவாதத்திற்குப் பலி கொடுப்பது?